

# அண்ணா மொழி கேளீர்.....

பாடத் திட்டத்தில் பகுத்தறிவைப் புகுத்தினால்தான் மக்களுக்குப் பழமையினிடத்திலுள்ள பாசம் குறையும்; மனத்திலுள்ள மாசு நீங்கும்; காலத்துக்குத் தக்கதுபோலக் கருத்து வளரும்.

காற்றே இல்லையென்றால் ஒரு புழுக்கம்! காற்று அதிகமானால் எதுவும் சிதறும், அடிபெயரும்! எனவே, அதனை உணர்ச்சியை முறைப்படுத்துதல் வேண்டும். அதனைமுறைபடுத்துவதே அறிவாளர் கடன்!

நாகரிகமென்பதன் பொருள் விலங்கினங்களைவிட மனிதன் குறைவாக வேலைசெய்து அதிக பயன் அடைவதுதான்.

மக்களிடையே காணப்படும்மூடப் பழக்க பழக்கவழக்கங்களை முறியடிக்க ஜாதிமதக் கோட்டையைத் தகர்த்து சுக்கு நூறாக்க வேண்டும். ஒவ்வொருவரும் வாக்குறுதியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இயல், இசை, நாடகம் மக்கட்கு அறிவு வளர, ஆர்வமூட்ட, அகமகிழ்ச்சி பிறக்க; நன்னெறியைக் காட்டப் பயன்பட வேண்டும்.

பழம் அழுகுவதுபோல, மலர் கசங்கி மணத்தை இழந்த பிறகு கெட்ட வாடை கொள்வதுபோல, தழை சருகு ஆவதுபோல, கட்டிடங்கள் கலனாகி குப்பைமேடு ஆவதுபோல, பலப்பல தத்துவங்களும் ஏற்பாடுகளும் காலச்சிறையிலே கிடந்து கிடந்து கெடுவதும், பல கேடுகளை உற்பத்தி செய்வதும் இயற்கையாக ஏற்படும் ஒரு நிகழ்ச்சி இதனை உணர மறுப்பது உலகை அறியாதார் போக்கு.

தாயின் மடியிலே தவழும் குழந்தைக்குக் கூற ஒரு பொருளைக் காணும்போது, எண்ணம் எழத்தான் செய்யும், பசிக்கிறது என்றஉணர்வு புசிக்க வேண்டும் என்ற எண்ணத்தைஎழத்தான் செய்யும். பசிக்கிறது என்ற உணர்வு புசிக்க வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்காமலிராது. குழந்தையின் அழுகைதான் அதற்கான அறிவிப்பு!

கழுநீர்ப் பானையினைத் தலையில் சுமந்து கொண்டு செல்பவன்! பன்னீர்ச் செம்பினைக் கரத்தில் எடுத்துச் செல்பவனைக் கண்டு'பூ, இந்தச் சின்னச் செம்புதான் உனக்குக் கிடைத்ததா? என் தலையில் பார்! எத்தனை பெரிய கழுநீர்ப்பானை? என்று கூறுவது எவ்வளவு பெரிய மடமை?

மனிதருக்குள் பேதத்தையும், அச்சத்தையும் மூட்டிவிடக் கூடிய ,வளக்கக் கூடிய எந்த ஏற்பாடும் சுதந்திரத்தின் பரம விரோதிகளோ.

இலக்கிய ஏடுகள் மக்களின் மார்க்கட்டிலே மலிந்து நடமாட வேண்டுமானால், இலக்கியம் கோபுர உச்சியிலிருந்து குப்பை மேட்டுக்கு வரத்தயாராக வேண்டும்.

கடமை அழைக்கும்போது காலத்தினால் விளையும் கஷ்டங்களை சாக்காகக் கூறித் தப்பித்துக்கொள்வது மன்னிக்க முடியாத குற்றம்.

மதம் பகுத்தறிவுக்கு மேலானதாக மதிக்கப்படும் மனப்பான்மை ஒழிந்து, பகுத்தறிவை மேலானதாக மதிக்கும் மனப்பான்மை மக்களுக்குத் தோன்றவேண்டும்.

கற்பனையில் கனிதருகிற கற்பகத் தருவைவிட, குப்பைமேட்டில் சேர்ந்திருக்கும் முட்செடி மேலானது.

## பேரறிஞர் அண்ணா நினைவு நாள் - பிப்ரவரி - 3




# தமிழரசு

மலர்: 12 இதழ்: 15

1-2-1982

திருவள்ளுவர் ஆண்டு 2013

துன்மதி—தை-19



# வீடற்றவர்களுக்கு வீடு அளித்திடுவோம்



மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

**திரு. இராகவானந்தம்**

வீட்டு வசதி மக்களின் முக்கிய அடிப்படைத் தேவைகளில் ஒன்று. ஒவ்வொருவரும் நியாயமாகத் தனக்குச் சொந்தமாக வீடுகட்ட விழையலாம். அது தவறல்ல. ஆனால் எல்லோருக்கும் அரசே வீட்டு வசதி செய்து கொடுப்பது என்பதுமிகக் கடினமான செயல். இந்த அரசு ''எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்'' என்ற நோக்கத்தைக் கருத்தில் கொண்டு அதற்காக அயராது பாடுபட்டு வருகிறது. வீட்டு வசதிப் பிரச்சினையைத் தீர்க்க நிதிப் பற்றாக்குறை, கட்டிடப் பொருள்கள் பற்றாக்குறை போன்ற இடர்பாடுகளின் இடையே பெரும் முயற்சிகளை மேற்கொண்டு நகர்ப்புறப் பகுதிகளிலும், கிராமப்புறப் பகுதிகளிலும் வீட்டு வசதிகளை அதுவும் முக்கியமாக பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு பெருமளவில் அளித்து வருகிறது. 1977 ஆண்டில் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் பல குறிப்பிடத்தக்க, வரவேற்கத்தக்க புதிய அம்சங்களோடு வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவற்றில், நகர்ப்புறப் பகுதிகளில் வறுமை வாய்ப்பட்ட மக்களுக்கு, உலக வங்கியின் நிதியுதவியோடு முழு வசதிகள் அடங்கிய மனைகள் அளிக்கும் திட்டத்தையும் குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டத்தையும் கிராமப்புறங்களில் உள்ள பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்குக் கிராமக்கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலம், அதிலும் குறிப்பாக ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்ட கடன் வழங்கும் திட்டத்தையும், இங்கு விளக்கிக் கூற விழைகிறேன்.

## உலக வங்கி உதவி பெறும் முழு வசதிகள் அடங்கிய மனைகள் திட்டம்

1971-ம் ஆண்டு புள்ளி விவர கணக்கின் படி சென்னை நகரில் உள்ள மக்களில் எழுபது சதவீதம் பேர் மாதம் ரூ. 350-க்கும் குறைவாக வருவாய் பெறுகின்றவர்களாக உள்ளனர். நகர்ப்புறப்பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிந்த இப்பிரிவினருக்கு, அடிப்படை வசதிகளோடு அல்லது சுகாதார வசதிகளோடு அமைந்த ஒழுங்கான குடியிருப்புகள் இல்லை. இந்த இடர்ப்பாட்டை நீக்கும் வண்ணமும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரா

யுள்ள இவர்கள் பயன் பெறும் வண்ணமும், அதே சமயம் அவர்களது சுய முயற்சிகளை ஊக்குவிக்கும் வண்ணமும், அடிப்படை வசதிகளுடன் கூடிய மனைகள் சலுகை விலையில் அளிக்கும் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியோடு செயல்படுத்தப் பட்டு வருகிறது. திட்ட மதிப்பீட்டுத் தொகையில் அமைத்து தருதல், முழு வசதிகளடங்கிய நிலத்தை வாணிபத்திற்காகவும், சிறு கைத்தொழில்களுக்காகவும் ஒதுக்கீடு செய்து தருதல் ஆகிய பணிகள் அடங்கும். திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 4,682.10 இலட்சங்கள். இதில் முழு வசதிகளடங்கிய மனைகள் திட்டத்தின் மதிப்பீடு மட்டிலும் ரூபாய் 1,534.96 இலட்சங்கள் இப்பணிகள் 175 ஹெக்டேர் பரப்பளவுள்ள - சென்னை நகரை ஒட்டியுள்ள அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய மூன்று இடங்களில் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

மொகைப்பேர் மற்றும் நெற்குன்றம் ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. மொகைப்பேர் திட்டத்தின் கீழ் 123.5 ஹெக்டேர் நிலம் மேம்படுத்தப்பட்டு, ரூபாய் 971 இலட்சங்கள் செலவில், 11,006 மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும். இவற்றில் 1982 மார்ச்சுத் திங்கள் இறுதிக்குள் சுமார் 4000 மனைகள் ஒதுக்கீட்டு நிலைக்குத் தயாராகி விடும். நெற்குன்றம் திட்டத்தின்கீழ் 56.5 ஹெக்டேர் பரப்பளவு நிலம் மேம்படுத்தப்பட்டு, ரூபாய் 4.41 கோடி செலவில் 5034 மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டம் 1982 மார்ச் திங்களில் துவங்கி, 1984 மார்ச்சு திங்களில் முடிவு பெறும்.

**குடிசைப் பகுதிகளில் பட்டா வழங்கும் பணி**

சென்னை நகர மேம்பாடு திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதிகளில் வாழும் குடிசை

## தமிழகத்தில் வீட்டுவசதித் திட்டங்களில் சில:

அரும்பாக்கம் திட்டம் 1977 செப்டம்பரில் மேற்கொள்ளப்பட்டு, 1980 மார்ச்சுத் திங்களில் முடிவடைந்தது. 34.2 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலம் மேம்படுத்தப்பட்டு, பல் வேறு வகை பிரிவினருக்கு 2,322 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 909 குடும்பங்கள் ஏற்கனவே குடியேறிவிட்டனர். மேலும், 360 வீடுகளின் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

வில்லிவாக்கம் திட்டப்புணிகள் 71.55 ஹெக்டேர் பரப்பளவில் ரூபாய் 459.91 இலட்சங்கள் மதிப்பீட்டில், மூன்று கட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தின் மூலம் 3,763 குடும்பங்களுக்கு வீட்டு வசதி செய்து தரப்படும். இரண்டாம் கட்டபணிகள் முடிவுற்று, ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு விட்டன. முதல் மற்றும் மூன்றாம் கட்டப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

கொடுங்கையூர் திட்டப் பணிகள் 84.65 ஹெக்டேர் பரப்பளவில் ரூபாய் 890.85 இலட்சங்கள் மதிப்பீட்டில், இரு கட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் 6,443 குடும்பங்கள் பயன் பெறும். இரண்டாம் கட்ட வேலைகள் முடிவுற்று, ஒதுக்கீட்டுப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் கட்ட பணிகள் 1984 மார்ச்சு திங்களில் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னைப்பெருநகர் வளர்ச்சித் திட்டம் 2-ன் மொத்த மதிப்பீடு ரூபாய் 73.90 கோடிகள். இதில் முழு வசதிகள் அடங்கிய மனைகள் திட்டத்தின் மதிப்பீடு மட்டிலும் ரூபாய் 23.80 கோடிகள் ஆகும். இப்பணிகள் சென்னை நகரில் அண்ணாநகரின் அருகில் உள்ள

வாசிகளுக்குத் குத்தகை மற்றும் மாதத் தவணை விற்பனைத் திட்டத்தின் கீழ் பட்டா வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாணையின்படி, சென்னை மாவட்ட ஆட்சியாளர் குடிசைப் பகுதிகளை அளத்தல் சர்வே கல் நடுதல், நிபந்தனைக்குட்பட்ட



55 சதவீதம் உலக வங்கியும், எஞ்சிய பகுதி மாநில அரசும் மேற்கொள்ளுகிறது. இத் திட்டத்தைச் செயல்படுத்தும் பணி தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

சென்னைபபெருநகர் வளர்ச்சித் திட்டம் 1-ன் கீழ், முழு வசதிகளோடு அடங்கிய மனை கள், ஒதுக்கீடுதாரரர்களால், நிலைக்கேற்ப, கட்டடம் கட்டவும், விரிவு படுத்தவும் பயன் படும் வண்ணம் சுகாதார மற்றும் குடியிருப்பு வசதிகளுடன் கூடிய மனைகள் ஆகும். மேலும் கட்டடம் கட்டத் தேவையான பொருள்கள் வழங்குதல், குறைந்த வருமானம் பெறுவோ ருக்குத் தேவையான சமுதாய வசதிகள் பட்டா தவணை முறைத் திட்டத்தின் கீழ் தகுதி பெற்றகுடிசை வாசிகளுக்கு வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டுள்ளார். சென்னையில் 16 குடிசைப் பகுதிகளில் வாழும் 5565 குடிசை வாசிகளுக்கு முன் பணம் கட்டும்படி குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அறிக்கைகள் அனுப்பப் பட்டுள்ளது. இவற்றில் 3,350 நபர்கள் முன் பணம் கட்டியுள்ளனர். இது வரை 43,367 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் நகர்ப்புற ஏழைகளுக்கு உதவுவதாகும்.



### கிராம வீட்டுவசதித் திட்டம்

நம் மாநிலத்தில் உள்ள பொருளாதாரத் தில் நலிந்த பிரிவினர் பயனடையும் வண்ணம், 1976-77ஆம் ஆண்டுமுதல் கிராம வீட்டு வசதித் திட்டம் ஊரக வீட்டு வசதி கூட்டுற வுச் சங்கங்கள் வாயிலாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. 100 ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் அதன் உறுப்பினர்களுக்கு இருப தாண்டுகளில் திரும்பப் பெறும் கடன்களை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளன.

## கிராம வீட்டுவசதித்திட்டம்-சில சலுகைகள்

இத்திட்டத்தின் கீழ், ஆதி திராவிட இனத்தைச் சார்ந்தவராய் இருந்தால், வட்டி இல்லாமல் அவருக்கு கடன் வழங்கப்படும். அதாவது அவர் செலுத்தவேண்டிய வட்டியை அரசு ஏற்றுக் கொண்டு கூட்டுறவுச் சங்கத்துக்கு ஈடு செய்யும்.

ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த உறுப் பினர்களுக்குத் தலா ரூபாய், 1,000 மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. இதைப் பெற அவரது ஆண்டு வருமானம் 4,200 ரூபாய்க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்;

ஆதி திராவிடர்கள் பெருமளவில்வாழும் இடங்களில் வீடு கட்ட முன்வரும் பல்வேறு வகுப்பினருக்கும் ஆதி திராவிட உறுப்பினர் களுக்கு வழங்குவதுபோல் மானியம் தரப் படும். ஆனால் அவரது ஆண்டு வருமானம் ரூபாய் 4,200-க்கு மிகாமல் இருத்தல் வேண் டும்.

கிராம வீட்டு வசதி கூட்டுறவுச் சங் கங்கள் மூலம், கடன் வாங்க விழையும் எல்லா உறுப்பினர்களும், உழைப்பாகவோ அல்லது வீடு கட்டப் பயன்படும் பொருளாகவோ அல்லது பணமாகவோ வீட்டின் மதிப்பீட்டு செலவில் 20 சதவிகிதத்தினைத் தங்கள் பங் காகச் செலுத்த வேண்டும்.

வீட்டின் செலவைக் குறைக்கும் பொருட்டு, உள்ளூரில் கிடைக்கும் குறைந்த விலை நாட்டு மரச் சட்டங்கள், இன்னபிற பொருட்களை வீடுகள் கட்ட பயன்படுத்து வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கட்டு மானம் செங்கல், இடையில் களிமண்ணை வைத்துக் கட்டுதல் வேண்டும். உள்பூச்சுக்குச் சுண்ணாம்பு அல்லது சிமெண்டை உபயோ கிக்கலாம். சுவர்களில் சிமெண்ட் பூசவும் அனுமதி தரப்பட்டுள்ளது. கட்டுமானம் அங் கத்தினர்கள் சொந்தப் பொறுப்பிலே நடை பெறும்.

உறுப்பினர்கள் உள்ளூரில் கிடைக்கும் களிமண் மற்றும் விறகினைக் கொண்டு செங் கற் சூளைகள் அமைக்க கூட்டுறவுச் சங் கங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. அச்சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் செங் கல், வெளிச் சந்தையில் கிடைக்கும் நாட்டுச் செங்கல் விலையை விடக் குறைவாக உள்ளது.

கடன்கள் மூன்று தவணைகளாக, 30 : 40 : 30 என்ற விகிதத்தில் வழங்கப்படுவ தால், கடனின் ஒவ்வொரு தவணையும் வழங் கப்பட்ட கடன் தொகைக்கு ஏற்ப கட்டிட வேலை நடைபெற்றுள்ளதா என நேரில் சென்று பரிசீலித்த பின்னரே வழங்கப்படுகின் றது ;

இவற்றின் எண்ணிக்கை 100 ஆக சமீபத்தில் உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையில் அமைந்திருக்கும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் தலைமைச் சங்கமாயிருந்து, நம் மாநிலத்திலுள்ள பிரதம கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களுக்குத் தேவையான நிதியினை வழங்கி வருகிறது. இச்சங்கம் இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகம், இந்திய பொதுக் காப்புறுதிக் கழகம் மற்றும் மாநில அரசு இவற்றிடமிருந்து பெறும் கடன்கள், பங்குத் தொகைகள் மூலமாகவும் மற்றும் உறுப்பினர் சங்கங்களிடமிருந்து ஒரு சேரப் பெறும் வைப்புத் தொகை மூலமாகவும், தனது நிதியாதாரங்களைத் திரட்டுகிறது. மற்றும் டில்லியிலுள்ள வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகமும், நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளும், சலுகை வட்டி வீதத்தில் கடன்கள் வழங்கி வருகின்றன.

மக்கள் தொகையில் 80 சதவீதம் பேர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இக்கிராமபுற மக்களுக்கு வீடுகள் கட்டும் பணியினை மேலும் உயர்த்தும் வண்ணம், 1987-79-ம் ஆண்டில் தொடங்கிய ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில், கிராமப் பகுதிகளில் ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக ''ஓர் இலட்சம் வீடுகள்'' கட்டப்பட வேண்டும் என்று அரசு முதலில் முடிவெடுத்தது. கிராம வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கிடைக்கின்ற நிதியாதாரங்களைக் கொண்டு அதிக அளவில் மக்கள் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்திலும் இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள் ஒரே வடிவமைப்பில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்திலும், 200 சதுர அடி பரப்பளவில் அமைந்த ஒரே மாதிரியான வடிவமைப்பு பயன்படுத்தப்படுகிறது. கட்டடப் பொருள்களின் விலையேற்றத்தையும், தொழிலாளர்களின் கூலி உயர்வையும் கருத்திற் கொண்டு வீட்டின் மதிப்பீட்டுத் தொகையை ரூபாய் 3,750-ல் இருந்து ரூபாய் 4000 -க்கு அரசு சமீபத்தில் உயர்த்தியுள்ளது. உறுப்பினர் அதிக பரப்பளவு உள்ள வீட்டினைக் கட்ட விரும்பினால் தன்னுடைய சொந்தச் செலவில் ஒன்று அல்லது இரண்டு அறைகளை கட்டிக் கொள்ளலாம்.



இத்திட்டத்தின் கீழ் வீடுகளைக் கட்டுவதற்கான கடன்களைப் பெறுவதற்குக் கிராமப்புற மக்களிடமிருந்து, குறிப்பாக ஆதிதிராவிடர்களிடமிருந்து மிக அதிகமான கேட்பு உள்ளது. மைய அரசின் திட்டக் குழு ஆறாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் காலத்தை 1978-83 என்பதிலிருந்து 1980-85 ஆக மாற்றியமைத்துள்ளது. இதன் அடிப்படையில் 1980-81ம் ஆண்டு முதல் 1984-85 ஆண்டு வரைக்கான மாற்றியமைக்கப்பட்ட ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் ''இரண்டு இலட்சம் வீடுகள்'' கட்டி முடிக்க அரசு முடிவெடுத்துள்ளது. அதன்படி ஒன்றுக்கு 40,000 வீடுகள் வீதம் கட்டி முடிக்கப்படும்.

நம் மாநிலத்தில் செயலபடுத்தப்படும் கிராமவீட்டுவசதித்திட்டத்தின் சிறப்பு இயல்புகள் ஆதிதிராவிடர்களுக்கு வட்டியில்லாமல் கடன் தருவதுடன் ரூ. 1000- மானியமாகவும் தரப்படுகிறது. ஆதிதிராவிடர்கள் பெருமளவில் வாழும் இடங்களில் வீடு கட்ட முன்வரும் ஆதிதிராவிடர்கள் அல்லாதவர்களுக்கும் மானியம் தரப்படும்.

கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கட்டுமானம் பணி மற்றும் நிதி ஆகியவற்றில் இது வரை அடைந்துள்ள முன்னேற்றம் பின்வருமாறு:-

1978-79 கூட்டுறவு ஆண்டில் கட்டப்பட்ட வீடுகள் 7430. இவற்றில் 3003 வீடுகள் ஆதி திராவிடர்களுடையவை. செலவிடப்பட்ட தொகை ரூபாய் 545 இலட்சங்கள்.

1979-80 கூட்டுறவு ஆண்டில் ரூபாய் 1642 இலட்சங்கள் செலவில் 29.041 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. அவற்றில் 21,481 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டியவை. 1980-81 கூட்டுறவு ஆண்டில் 40,831 வீடுகள் ரூபாய் 1601 இலட்சங்கள் செலவில் கட்டி முடிக்கப்பட்டன. அவைகளில் 34, 510 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டியவை. 1981-82 கூட்டுறவு ஆண்டில் நவம்பர் திங்கள் முடிய 6,924 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. செலவிடப்பட்டுள்ள தொகை ரூபாய் 207.51 இலட்சங்கள். இவற்றில் 6186 வீடுகள் ஆதிதிராவிடர்களுடையவை. மேலும், 35,316 வீடுகள் பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்பட்டு வருவன. 27,705 வீடுகள் ஆகும். கட்டப்பட்ட, கட்டப்படும் வீடுகளின் மொத்த எண்ணிக்கையில் 75 சதவீதம் ஆதிதிராவிடர்களுக்காக உள்ளது குறிப்பிடத் தகுந்தது.

கிராமங்களிலுள்ள நிலமற்ற ஏழை மக்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தரும் நோக்கத்தோடு கிராம வீட்டு வசதித் திட்டத்தை சில மாறுதல்கள் செய்து செயல்படுத்தும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இந்த வகையில் வீடற்றவர்களுக்கு வீடு தர புரட்சித் தலைவர் ஆட்சி செயல்பட்டு வருகிறது.

(சென்னை வானொலி 17.1.82)



# கைத்தறி வளர்ப்போம்!

மாண்புமிகு கதர் கிராமக்கைத்தொழில், பொதுப்பணி அமைச்சர்

## எஸ். என். ராஜேந்திரன்

கல்லை உராய்ந்து தீப்பொறிகளைப்பெறக் கற்றுக்கொண்ட காட்டுமிராண்டி மனிதன் நாகரிகத்தின் படிகளிலே காலடியெடுத்து வைத்த நாளிலிருந்து ஆடை அணியத் தொடங்கினான். ஆடை அணியத் தொடங்கிய நாள் மனித நாகரிகத்தின் திருப்பு முனையான நாளாக அமைந்தது. மனித நாகரிகத்திற்கு ஆடையும் ஆடையை நெய்கின்ற நெசவுத் தொழிலும் இன்றியமையாதனவாகப்போற்றி பாதுகாக்கப்பட்டு வருகின்றது. தமிழுக்கு மறைந்த திருவள்ளுவர்கூட நெசவாளியாக இருந்தார் என்று அறிஞர்கள்கூறுகின்றனர். இந்தப் பண்டைத் தொழிலைத்தமிழ்நாடு கண்ணும் கருத்துமாக போற்றி பாதுகாத்து வருகிறது.

நாகரிக வளர்ச்சியில் விஞ்ஞான வேகம் பலபல புரட்சிகரமான மாறுதல்களை மனித வாழ்க்கையில் தோற்றுத்திருக்கிறது. அந்த வேகத்திற்கும் மாறுதல்களுக்கும் ஈடுகொடுக்க முடியாமல் பழமையான நெசவுத் தொழில் இடைக்காலத்தில் மிகவும் நலிவடைந்தது. அந்த நெசவாளிகளினுடைய துயரை துடைக்கவும் அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தவும் தமிழக அரசு பல்வேறு திட்டங்களை தீட்டி நடைமுறைபடுத்தி வருவது மக்கள் அறிந்த ஒன்றாகும்.

மாநிலத்திலுள்ள ஐந்தரை இலட்சத்திற்கும் மேற்பட்ட கைத்தறிகளில் இதுவரை சுமார் 2,80,000 கைத்தறிகள் கூட்டுறவுத் துறையில் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. கூட்டுறவு துறையிலே கொண்டு வருவதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு அனைத்தையும் தர இயலும் என்ற அடிப்படையில் கூட்டுறவுத் துறை செயல்பட்டு வருகிறது. சொந்த தறி இல்லாத நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் 1980-81-ஆம் ஆண்டு, 30 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டன. நடப்பு ஆண்டு இத்தகையதொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 20 அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன தனியார் துறையிலும் அவதிப்பட்டுக் கொண்டிருந்த ஏழை நெசவாளர்களை மாஸ்டர் வீவர்களின் பிடியிலிருந்து விடுவித்து அவர்களுக்காகப்புதிய நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்கு என்று தேசியமயமாக்கப்பட்ட வங்கி உதவியுடன் ஒரு திட்டம் அரசு பரிசீலனையில் இருந்து வருகிறது. இந்த திட்டத்தின்கீழ் ஆரம்பக் கட்டத்தில் சுமார் ரூ. 2,000 (இரண்டாயிரம் மட்டும்) வரை கடன் பட்டுள்ள ஏழை நெசவாளர்களைத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் நிதி உதவி கொண்டு விடுவித்து அவர்களுக்கு என தனியாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படும்.

நாகரிகம் மிளிர்ந்த புதுவகையான ஆடைகளையெல்லாம் நம்முடைய கைத்தறி துறையிலே இன்று உற்பத்தி செய்து வருகிறோம். இதற்காகவெனவே வடிவமைப்பு மற்றும் பணி நிலையங்களைசேலம், கோவை, மதுரை திருச்சி போன்ற மாவட்டங்களிலே ஏற்படுத்துவதோடு மட்டுமின்றி இந்த ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடையநல்லூரில் புதியதாக ஒரு வடிவமைப்பு மற்றும் பணி நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நெசவாளர் சங்கங்களில் உற்பத்தியாகிய துணிகளை எல்லாம் விற்பனை செய்வதற்கு கோவாப்டெக்ஸ் நிறுவனம் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. 1979-80-ல் மொத்த விற்பனை ரூ. 35 கோடியாக இருந்தது. 80-81-ல் ரூ. 48 கோடியாக உயர்ந்துள்ளது. நடப்பு ஆண்டில் அதன் விற்பனை சுமார் ரூ. 75 கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83-ல் அதன் விற்பனை ரூ. 100 கோடியை எட்டுவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு கோவாப்டெக்ஸ் விற்பனை கூடக்கூட தொடர்ந்து நெசவாளிகளின் வேலை வாய்ப்பும் கூடுதலாகி தினசரி கூலி உயர்வும் ஏற்பட்டு நெசவாளிகளுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும் என்று நம்புகிறேன். உள் நாட்டில் மட்டுமின்றி வெளி நாட்டிலும் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு சிங்கப்பூரில் ஒரு விற்பனை நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. கைத்தறி துணி விற்பனையில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மேன்மேலும் உதவும் வகையில் கோவாப்டெக்ஸ் நிறுவனத்திற்கு அரசு 1980-81-ல் ரூ. 1.85 கோடியும், நடப்பு ஆண்டில் ரூ. 1 கோடியும் பங்கு மூலதனமாக அளித்துள்ளது.

## வளரும் தமிழகம்

கூட்டுறவு துறையிலே இருக்கின்ற நெசவாளர்களுக்கும் கூட்டுறவு துறையிலே இல்லாத மற்ற நெசவாளர்களுக்கும் ஏற்படுகின்ற நூல் பிரச்சினையை சமாளிப்பதற்காக மூலப்பொருள் வங்கி ஒன்று ( Raw Material Bank ) ஏற்படுத்தும் திட்டமும் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது. சென்ற சில மாதங்களாக பட்டு தொழிலுக்கு வேண்டிய பட்டு நூல் கிடைப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளது. பட்டு நூல் விலையைக்கட்டுப்படுத்தும் பொருட்டும் பட்டுத் தொழிலுக்கு வேண்டிய பட்டு நூல் சிரமம் இல்லாமல் கிடைக்கின்ற வகையிலும் தமிழ்நாடு அரசு மத்திய அரசை பட்டு இறக்குமதி செய்யும்படி வலியுறுத்தியது. அதன் பேரில் மத்திய அரசு வெளி நாட்டிலிருந்து சுமார் 250 டன் கச்சாப்பட்டு இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்து இருக்கிறது. அந்த பட்டு இன்னும் ஓரிரு வாரங்களில் தமிழ் நாட்டுக்கு வந்து வினியோகம் செய்யப்படும்.

கைத்தறி நெசவாளர்களுக்குத் தடையில்லாமல் நூல் கிடைப்பதற்குக் கூட்டுறவுத் துறையிலே ரூ. 975 லட்சம் மூலதனமாகக் கொண்டு 12 நூற்பாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைபோக புதுக்கோட்டைதர்மபுரி, மாவட்டங்களிலும் தேனியிலுமாக 3 புதிய கூட்டுறவு நூற்பாலைகளை அரசு நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தவிர மகா கவி பாரதியார் நூற்றாண்டு நினைவாக 'பாரதி கூட்டுறவு நூற்பாலை' ஒன்றைத் தொடங்க திட்டமிடப்பட்டு 13-12-1981-ல் மாண்புமிகு புரட்சித் தலைவர் முதல்வர் அவர்கள் தலைமையில் கர்நாடக மாநில முதல்வர் அவர்களால் எட்டையபுரத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது. சேலம், வட ஆர்க்காடு மாவட்டங்களிலுள்ள நூற்பாலைகளில் மேலும் 12,500 கதிர்கள் நிறுவி அதிகரிக்கும் வகையில் திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலே வாழ்கின்ற நெசவாளர்களின் பணிகளை முறைபடுத்தும் வகையிலே சட்டரீதியிலான பாதுகாப்பு அளிக்க தமிழக அரசு இயற்றியுள்ள சட்டம் இந்திய குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தை சமீபத்தில் பெற்றுள்ளது. அவர்களுடைய வாழக்கை தரத்தை மேம்படுத்துகின்ற முறையிலே சில திட்டங்களை அமல்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை அமலாக்கின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நெசவாளர்களுடையபாதுகாப்புக்காகச் சேமிப்பு மற்றும் பாதுகாப்புதிட்டத்தைதமிழ்நாடுஅரசு அமல் செய்திருக்கின்றது. நெசவாளர் ஒருவர் இறந்து விட்டால் அவருடைய வாரிசுதாரர் சேமிப்பு கணக்கிலுள்ள தொகை அல்லது குறைந்த பட்சம் ரூ. 500 ஆயுள் ஈட்டுறுதி கழகத்திடமிருந்து பெறும் வகையிலிருந்த இத்திட்டத்தை மாற்றியமைத்து 1980 மார்ச்சு1-ம் தேதியிலிருந்து இத்தொகை ரூ. 3,000 என உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 55 வயதாக இருக்கின்ற வரம்பை தளர்த்தி 58-ஆக மாற்றுவதற்கும் ரூ. 3,000-இல் இருந்து தொகையை ரூ.5ஆயிரமாக மாற்றுவதற்கும் அரசு பரிசீலனை செய்து வருகிறது.

உடை கொடுக்கின்ற நெசவாளி வீடில்லாமல் அவதியுறும் அவல நிலையை ஆராய்ந்து இந்த அரசு வீட்டுவசதித்திட்டம் ஒன்றையும் அமல் செய்து வருகிறது. 6-வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் 5,000 வீடுகள் கட்டுவது என்ற திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2,000 வீடுகள் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இதற்காகத்தமிழ்நாடு அரசு வீடு ஒன்றுக்கு ரூ. 1,000 மானியமாக வழங்கியுள்ளது. HUDCO நிறுவனத்திடமிருந்து கடனாக மொத்தம் ரூ. 60 லட்சம் இதுவரை பெறப்பட்டுள்ளது. இந்த வீட்டு வசதித்திட்டமும் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டமும் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலங்களிலும் அமுல்படுத்தப்படாத மிகப் புதுமையான திட்டங்கள் என்பதைச்சொல்லிக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். நெசவாளர்களுடைய வாழ்க்கை நிலையை மனதில் கொண்டு இந்த அரசு ஆற்றிவருகின்ற பணிகளுக்கெல்லாம் உறுதுணையாகவும் ஒத்துழைப்பும் தந்து வருகின்ற நெசவாளர் பெருமக்களுக்கு இந்த நேரத்தில் நான் நன்றியை காணிக்கை ஆக்குகிறேன். 1982-ஆம் ஆண்டு நெசவாளர் பெருமக்களுக்கு நல் வாழ்வும் நல் வளமும் தரும் ஆண்டாக அமைய வேண்டும்.

*[3.1.1982 அன்று 'வளரும் தமிழகம்' நிகழ்ச்சியில் வானொலியில் ஆற்றிய உரை]*





# சிறு சேமிப்பின் அவசியமும் மக்கள் பங்கும்


மாநில தேசிய சேமிப்பு ஆலோசனைக்குழுத் துணைத் தலைவர்.

## எஸ்.எஸ். இராஜேந்திரன்


"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றக் கெடும்''.

என்று வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறியுள்ளார். ''கிடைக்கும் வருவாயின் அளவு அறிந்து அதற்கு பொருத்தமாக வாழாதவனுடைய வாழ்க்கை, இருப்பதுபோல் தோன்றி இல்லாமல்மறைந்து கெட்டு விடும்'' என்று வள்ளுவப் பெருந்தகை சீராகத் திட்டமிட்டு வாழும் கலையின் நுட்பத்தைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மக்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்றதைச் சேமித்து அச்சேமிப்புத் தொகையை முறையான சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டியது மிக அவசியமாகும். இப்போது நாட்டில் வீதிக்கு வீதி சேமிப்புத் திட்டம் என்ற பெயரால் எத்தனையோ சேமிப்புத் திட்டங்களைத் தனி நபர்கள் நடத்தி வருகிறார்கள். அவர்கள் திட்டமெல்லாம் நேற்று பெய்த மழையில் இன்று தோன்றி நாளை மறையும் காளான்கள் போன்றதாகும். அவற்றில் ஏமாறுவோரும் உண்டு; ஏமாற்றுவோரும் உண்டு. அஞ்சலகங்களின்மூலம் நடைமுறைபடுத்தப்பட்டு வரும் பல்வேறு தேசிய சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்வது ஒன்றே பாதுகாப்பான சேமிப்புத் திட்டமாகும். ஏனைய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கொடுக்கப்படும் வட்டி விகிதங்களை விட அஞ்சலகத் திட்டங்களுக்குக் கொடுக்கப்படும் வட்டி விகிதம் அதிகம்.

பல்வேறு சிறு சேமிப்புத் திட்டங்களைப் பற்றி நான் ஏற்கனவே வானொலியில் விவரமாக விளக்கியுள்ளேன். தற்போது மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய சேமிப்புப் பத்திரம் 6 மற்றும் 7-வது வெளியீடு 1-5-81 முதல் அனைத்து அஞ்சலகங்களிலும் விற்பனைக்கு வந்துள்ளது. இப்பத்திரத்திற்கு 12 சதவீதம் கூட்டு வட்டி வழங்கப்படுகிறது. நூறு ரூபாய்க்கு இப்பத்திரம் வாங்கினால் ரூ. 101.50 வட்டியுடன் 201.50 ஆக ஆறு ஆண்டு கழித்து கொடுக்கப்படுகிறது. சாதாரண வட்டி விகிதத்தில் கணக்கிட்டால், இது 16.75 சதவீதம் வட்டியாகிறது.

இவ்வளவு உயர்வட்டி எந்த நிறுவனமும் வழங்குவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நிறைய பேருக்கு இவ்வளவு உயர்வட்டி அளிக்கும் பத்திரம் உள்ளது என்று தெரியவே தெரியாது. எனவே இன்றே உங்கள் உறவினர் மற்றும் நண்பர்களுக்கு இப்பத்திரத்தின் சிறப்பு அம்சத்தை எடுத்துக்கூறி, இந்த பத்திரத்தில் முதலீடு செய்ய வேண்டுகோள் விடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மற்றொரு குறிப்பிடக்கூடிய திட்டம் பப்ளிக் பிராவிடண்ட் திட்டமாகும். இது 15 வருட முதலீட்டுத் திட்டமாகும். இதற்கு வட்டி எட்டு சதவீதம் அளிக்கப்படுகிறது. இதில் கிடைக்கும் வட்டிக்கு வருமான வரி கிடையாது. இதில் முதலீடு செய்யும்பணத்தையோ வட்டியையோ கோர்ட்டார் அட்டாச் செய்ய முடியாது. அதிகபட்சமாக நபர் ஒருவர் ரூ. 30,000 முதலீடு செய்யலாம். முதலீட்டுப் பேரில் திருப்பிச் செலுத்தாத கடனையும் பெறலாம். வருமான வரி செலுத்துவோர்க்கு இத்திட்டம் வரப்பிரசாதமாகும்.

இத்திட்டங்களைப் பற்றி இலவச விவரம் தேவைப்பட்டால் சென்னையில் 143, அண்ணாசாலை என்ற இடத்திலுள்ள சிறு சேமிப்பு அலுவலகத்தில் நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொண்டு, வேண்டிய தகவல்களைப் பெறலாம்.

வருவாயின் ஒரு பகுதியைச் சேமித்து வர வேண்டும் என்ற பழக்கத்தை மக்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தினசரி அல்லது மாதத்திற்கு இவ்வளவு என்று குறைந்த அளவிலாவது சேமிக்க வேண்டும். ''சிறு துளி பெரு வெள்ளம்''என்பது மூதுரை. சிறுக சிறுகச் சேமிக்கும்போது ஒரு விதக் கஷ்டமும் ஏற்படாது. அதனால் பிற்காலத்தில் தேவைப்படுகின்ற நேரத்தில் விளையும் பயனோ மிகப் பெரிதாக இருக்கும்.

சிறு சேமிப்பு வீண் விரயத்தைத் தடுக்கிறது. ஆடம்பர வாழ்க்கைக்கு நம்மை அறியாமலேயே அணை போட வைக்கிறது. வளமான எதிர்காலத்திற்கு வழி கோலுகிறது. நிம்மதியாக பிற்காலத்தில் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் துணை செய்கிறது.

அரசினர் மூலமாக நடைபெறும் சிறு சேமிப்புத் திட்டம் இன்னொரு நன்மையையும் விளைவிக்கிறது. சேமிப்பு நமக்கு உதவுவதோடு நாட்டுக்கும் பயனாகிறது. நாட்டில் பொருளாதார தொழில் அபிவிருத்திக்கு முதலீடாகவும் தேசப் பாதுகாப்பிற்கும் உதவுகிறது.

தனது நலம், சமுதாய நலம் ஆகிய இரண்டுக்கும் வழி கோலும் சிறு சேமிப்பில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கு கொள்ள வேண்டுமென்பது எனது ஆழ்ந்த விருப்பமாகும்.

''இன்றைய நமது சேமிப்பு
நாளைய சந்ததிக்கு பாதுகாப்பு''.

[நன்றி : சென்னை வானொலி]

# பாரதி ஆய்வரங்கம்



மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்களின் தலைமையில் 13.12.81 அன்று எட்டயபுரத்தில் பாரதி ஆய்வரங்கம் என்னும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அனைவரையும் வரவேற்றுப் பேசிய தமிழ் வளர்ச்சி இயக்கத் தலைவர் டாக்டர் மா. நன்னன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

''பாரதியைப் பற்றிப் பேசியிருக்கும் அளவுக்கு வேறொரு பிற்காலப் புலவரைப் பற்றி நாம் பேசியிருக்க முடியாது என்றாலும் பேசுவது மட்டுமே பயனாகி விட முடியாது. எழுதுவது மட்டுமே பயனாகி விட முடியாது.

கருத்துக்களினால் நாம் பின் தங்கவில்லை. கருத்து வளமற்ற நாடுகள் பெற்றிருக்கும் முன்



னேற்றத்தை நாம் பெற்றிருக்கிறோமா என்றால் இல்லை! செயலளவில், எந்த அளவில் அவர் எழுதியவற்றைப் பின்பற்றுகிறோம் நாம் என்று பார்க்க வேண்டும்.

தமிழுக்கு உயர்வு என்று பேசுகிறோம். ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று பேசுகிறோம். செயலிலும் சடுபட வேண்டும். கையொப்பத்தைக் கூட, தமிழிலே போடாத அலுவலர் பலர் இருக்கின்றனர். அதற்காக அரசு ஆணையிட்டுச் செயலாற்ற வேண்டியிருக்கிறது.

தொடக்கவுரையாற்றிய பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வா. செ. குழந்தை சாமி அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்.



''ஆய்வுள்ளம் - ஆய்வுப் பார்வை கொண்டவன் பாரதி. அவனது பார்வை அறிவியல் பார்வை கொண்டது. மனிதன் பல உணர்வுகளுக்குக் கட்டுப் பட்டவன். பல வகையான நம்பிக்கைகளுக்கு ஆட்பட்டவன். அதனால் அவனது பார்வை உயர்ந்ததாக இருக்க வேண்டும். தேசப் பற்று, சமயப் பற்று ஆகியவை கூட உண்மையைக் காணும் நிலைக்குத் திரையாக இருக்கக் கூடும். இதனை ஊடுருவிச்செல்லும் பார்வை யாருக்குஉள்ளதோ அவன்தான் அறிவுப் பார்வை பெற்றவன்.

பண்டைப்பெருமையில்-பாரம்பரியப் பெருமையில்அளவு கடந்த மரியாதை வைத்திருந்தான் பாரதி. பாரத நாடு பழம்பெரும் நாடு என்று கூறினான்.

எவ்வளவுதான் பரந்த பார்வை இருப்பினும் மற்றவர் வழி தழுவி வாழ்வது சமயவாதிக்கு ஏலாது. அரசியல் வாதிக்கு அறவே இயலாது.

பாரதி கடவுளைப் பற்றி எண்ணினான். பராசக்தியைப் பற்றிப் பாடினான். பெண்ணைப் பற்றிப் பாடினான்.

**சாத்திரங்கள் பலபல கற்பராம்**
**சவுரியங்கள் பலபல செய்வராம்**
**மூத்த பொய்மைகள் யாவும்**
**அழிப்பராம்**
**மூடக் கட்டுக்கள் யாவும்**
**தகர்ப்பராம்**

—இது பகுத்தறிவுப் பாடலாக இருக்கிறதே தவிர, பராசக்திப் பாடலாக இல்லை.

அடுத்து, தலைமை ஏற்ற மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் உரையில் குறிப்பிட்டார்:

''ஆயுந்தொறும் இன்பம் தருவது தமிழ். பாரதியாரின் படைப்புகளும் ஆயுந்தொறும் மகிழ்ச்சி தரும் அற்புதமான படைப்புகள்.

முதிர்ந்த குறிக்கோள்—கொள்கை ஆகியவற்றைக் கொண்டது இலக்கியம்.

பாரதிப் புலவன் தமிழ்மொழி உய்வதற்குத் தோன்றினான். தமிழகம் தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவங்கிடக்கையில் இலகு பாரதிப்புலவன் தோன்றினான், எனப் பாவேந்தர் குறிப்பிடுகிறார்.

பாரதியின் கவிதையிலும், உரைநடையிலும் வேகம் இருந்தது. சடுகுடு விளையாடும் சிறுவர் முதல், குடுகுடு கிழவர் வரை பாடக் கூடிய அற்புதமான பாடல்களைப் பாடினார். பிறவியே வேண்டாம் என ஆழ்வார்கள், ஆதிசங்கரர், விவேகானந்தர் ஆகியோர் கூறிச் சென்றதைப்போல, பாரதி மிகக் குறு

நிகழ்ச்சித் தொகுப்பு:

**தமிழ்ப்பித்தன்**

கிய காலத்திற்குள்ளேயே மறைந்து விட்டார். 39 ஆண்டுக் காலப் படைப்புகளினால் இந்த வையத்தையே பாலித்துச் சென்றிருக்கிறார்.

தனது வாழ்க்கை பாலையாக இருந்தாலும் மனத்தை மருதம் என ஆக்கிக்கொண்டு,

**எத்தனை கோடி இன்பம்**
**வைத்தாய்**
**இறைவா - எங்கள் இறைவா**

என்று பாடினார்.

தீயோரைக் காண்பதுவும் தீது என்று சொல்லி, நமது புலவர்கள் ஒதுங்கினார்கள். ஆனால் பாரதி,

**பாதகம் செய்வோரைக்**
**கண்டால் - நாம்**
**பயங்கொள்ள லாகாது பாப்பா**

என்று கூறினார்.

இயற்கையைக் குறித்துப் பாரதி பாடினார். இயற்கையைக் குறித்துஆங்கில நாட்டுக் கவிஞர்கள் தனியாகப் பாடியிருக்கின்றனர். அவர்களைப்போல பாரதி பாடவில்லை. ஆனால், பாடல்களில் எல்லாம் இயற்கையைச் சேர்த்தே பாடினார்.

ஆங்கிலக் கவிஞன் வொர்ட்ஸ் ஒர்த் பற்றிக் குறிப்பிடுவார்கள்- 'அவனது 'பேனாவை வாங்கி இயற்கையே எழுதிக் கொடுத்து விடுகிறது என்று. அப்படிப்பட்ட கவிஞன், வானம்பாடியைக் குறித்து ஒரு கவிதை எழுதினான். அதில் வானம்பாடியை வர்ணிக்க wandering voice என்னும் ஒரு சொல்லை 18 ஆண்டுகளாகத் தேடினானாம். ஆனால், பாரதி சொற்களுக்காகக் காத்திருக்கவில்லை. நினைத்த மாத்திரத்தில் 'குயில் பாட்டை' எழுதினார்.

பாரதியின் தேசிய கீதத்தை தேசீய கீதை என்று கூறினார் வையாபுரிப்பிள்ளை.

இரண்டாயிரம் ஆண்டுத் தமிழ்ப் புலவர்களில், பாரதிக்கு ஒரு தனி இடம் உண்டு என்று சொன்னார் ஜீவா.

பாரதி விடுதலை உணர்வுக்காகப் பாடினான் என்று பலர் கூறினர்; அவனது விடுதலைப் பாட்டு, உலகில் விடுதலை அடையாத நாடுகள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அவற்றிற்கெல்லாம் பொருந்துகின்ற பாடலாக இருக்கிறது. பல நாட்டு வீரர்களுக்கும் தேவைப்படும் படை நடைப் பாடலாக அது திகழ்கிறது. பாரதியின் தேசிய கீதம் குறிப்பிட்ட நாட்டுக்கு மட்டுக்கு மட்டும் உரிய கீதமல்ல.

பாரதியை நாம் புரிந்து கொள்ள வேண்டும்; அவரது கவிதை உள்ளத்தை - உணர்வை நாம் புரிந்துகொள்ள வேண்டும்''

ஆய்வரங்கத்தின் அறிமுக உரையை **வாகீச கலாநிதி** திரு **கி. வா. ஜகந்நாதன்** அவர்கள் ஆற்றினார். அதில் அவர் குறிப்பிட்டார்:



**''சிந்து நதியின்மிசை நிலவினிலே**
**சேரநன் னாட்டிளம்**
**பெண்களுடனே**
**சுந்தரத் தெலுங்கினில்**
**பாட்டிசைத்து**
**தோணிகள் ஓட்டி விளையாடி**
**வருவோம்**

—என்று பாரதி பாடிய பாடல் உல்லாசப் பொழுது போக்குப் பாடலல்ல - ஒருமைப் பாட்டை உணர்த்த எழுந்த உன்னதப் பாடல்.

பாரதிக்குக் கம்பனிடம் மிகுந்த பற்று உண்டு. ராமாயணத்தில் அவனுக்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டு.

வங்கம், பிரெஞ்சு, ஆங்கிலம், வடமொழி, தமிழ் எனப் பல மொழிகளைக் கற்ற பின்னர், அவன் பேசுகிறான் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'

தன்னை மறந்த லயம் கவிஞர்களுக்கே உரியது; பாரதியும் அதற்கு விலக்கல்ல.

அவரது கண்ணன் பாடலில் குறிப்பிடுகின்ற காதல் குறிப்புகள் உடலோடு மட்டுமல்ல -உள்ளத்தோடு மட்டுமல்ல - உயிரோடு அமைந்தது. 'பயிலியது கெழீஇய நட்பின்' என்று சங்கப் பாடல் சொல்கிறதே, அந்த மரபு குலையாதவாறு பாடினார் பாரதி.

அவரது கவிதையில் ஜோசியம் உண்டு, மருத்துவம் உண்டு. அனைத்தும் உண்டு. பாரதி கவிதைப் பூங்காவைச் சமைத்து அதில் ஒரு பூங்குயிலாகப் பாடி இருக்கிறான்.

அவரது பார்வையில் தமிழ் நாடு தாய் என்றால், இந்திய நாடு தெய்வம்.''

அடுத்து, 'கதைகள்' என்ற தலைப்பில் உரையாற்றிய **திரு அகிலன்** தெரிவித்தார்.

''பாரதி சிறுகதைகள் -நெடுங்கதைகள் ஆகியவற்றை எழுதினார். ஏன் எழுதினார்? 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை' —என்று கூறிய அவர் ஏன் கதைகளை எழுதினார். அவர் எழுதிய கதைகளில் புதுமைதான் இடம் பெற்றிருந்தது. பழமையை அவர் போற்றி யிருக்கிறார் என்றாலும் பஜனை பாடிக் கொண்டிருக்கவில்லை. புதை பொருள் ஆராய்ச்சி செய்யச் சொல்லவில்லை.

தமிழில் சிறுகதைத் துறையில் அவர் முன்னோடி; சின்னச் சங்கரன் கதை-அவருடைய சொந்தக் கதையே யாகும். அதில் வரும் கவுண்டனூர் எட்டயபுரம் தான். சந்திரிகையின் கதையில்- பழமைவாதிகளைச் சாடியிருக்கி



றார். மற்றொரு கதையில் விதவா விவாகத்தை வலியுறுத்தியிருக்கிறார். சாதிக் கொடுமையைச் சாடியிருக்கிறார். நீசத்தனமான-சுயநலம் கொண்ட சாஸ்திரங்களைக் கிழித்துப் போட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.''

அடுத்து, தமிழ் எழுச்சிப் பாடல்கள்' என்னும் தலைப்பில், உரையாற்றிய திரு **ஆலடி அருணா** குறிப்பிட்டார்:



''பாரதியை மக்கள் கவிஞர் என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். பாட்டாளி மக்களுக்கும் புரியும் வகையில் அவர் பாடினார். அந்தப்பாடல் மனிதன் மட்டும் கேட்டு மகிழும் பாடல் அல்ல. மாடுகளும் கேட்டு மகிழத்தக்கது. கல்லும் கனிந்து கவிபாடும் பெருமை பெற்றது.''

அடுத்து, 'கண்ணன்பாட்டு' என்னும் தலைப்பில் உரையாற்றிய **திரு நா. பார்த்தசாரதி** தெரிவித்தார்.



''கண்ணன் இல்லை என்றால் இந்தியாவில் நடனம் இல்லை; கலை இல்லை; நாடகம் இல்லை.

ராமன் பாட்டு இல்லை என்றால் இலக்கியம் இல்லை.

உலகத்தில் தங்கம், வெண்கலம் ஆகிய இரு உலோகங்களைக் கொண்டு எதையும் சிறப்பாகச் செய்ய முடியும். அதுபோலத் தான் ராமன், கிருஷ்ணன் இவர்கள் இருவரையும் கொண்டு நாட்டியம் அமைக்கலாம், காப்பியம் இயற்றலாம்.

தமிழில் 96 வகைப் பிரபந்தங்கள் உண்டு; அவற்றில் ஒன்று பிள்ளைத் தமிழ்; அதில் சலிப்பு ஏற்பட்டுவிட்டதால், பாரதி அதற்குப் புதிய வடிவம் கண்டான்; அதுதான் கண்ணன் பாட்டு. பிள்ளைத்தமிழுக்கு, சுருங்கிய வடிவம் கொடுத்தான். நூறு விருத்தப் பாக்களில் எழுதுவதற்குப் பதிலாக 23 பாடல்களில் கண்ணனின் பெருமையைப் பேசினான்.''

அடுத்து, 'பக்திப்பாடல்கள்' என்னும் தலைப்பில் **திருமதி சௌந்தரா கைலாசம்** உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''பாரதிக்கு முன்பாக கவிஞர் பெருமக்கள் கோடிக் கணக்கில் இருந்தனர். அவர்கள் எல்லாரும் புலவர்கள் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய கவிதாமணிகளை வழங்கினர். சாதாரண மக்களும் புரிந்து சஞ்சரிக்க முடியாத நிலை இருந்தது. பாரதியின் கவிதை மாளிகையில் சாதாரண



மனிதன் புகுந்து சஞ்சரிக்க முடிந்தது.

பாரதி மக்களுக்காக, மக்கள் மொழியில் பாடினார். அதனால் மக்கள் நெஞ்சில் அழியாத ஓவியமாக - அணையாத விளக்காக விளங்குகிறார்.''

அடுத்து ,'சமுதாய எழுச்சிப் பாடல்கள், என்னும் தலைப்பில் உரையாற்றிய **திரு பழ. கருப்பையா** குறிப்பிட்டார்:



''பாரதி வாழ்ந்த காலத்தில் நாடு அடிமைப் பட்டுக் கிடந்தது; பெண் அடிமைப் பட்டுக்கிடந்தாள். தமிழ் அடிமைப்பட்டுக் கிடந்தது. எங்கு நோக்கினும் அடிமைத்தனம் தான் தென்பட்டது. அந்த அடிமைத் தனத்தை ஒழிக்க பாடுபட்ட வகையில் பாரதி வீறு கொண்ட புலவராகத் திகழ்ந்தார். படுத்திருந்த பாரத மாதாவுக்கு திருப்பள்ளி எழுச்சி பாடுகிறார். காலத்தின் தேவையைப் பாடிய கவிஞர்களில் எல்லாம் - புலவர்களில் எல்லாம் — சிறப்புடையவராகத் திகழ்கிறார் பாரதி.''

அடுத்து 'குயில்பாட்டு' என்னும் தலைப்பில் உரையாற்றிய **டாக்டர் மீனாட்சி சுந்தரம்** குறிப்பிட்டார்:



"பாரதியின் குறிக்கோள்கள் மூன்று.

கவிதை எழுதுதல் - நாட்டுக்கு உழைத்தல் - இமைப்பொழுதும் சோராதிருத்தல் ஆகியவைதான் அவை. அவரது நெஞ்சத்தில் எப்போதும் துடிப்பு இருந்தது.

அவரது பாடலில் வேகப்பாட்டு- வீரப்பாட்டு, அமைதிப் பாட்டு ஆகியவை உண்டு. என்றாலும் அவரது சொந்தப் பாட்டு என அவர் பாடுவது தான் குயில் பாட்டு.

ஷெல்லி, கீட்ஸ் போன்ற அனைவரையும் மீறி நிற்பவன் பாரதி. அவன் ஆங்கில் இலக்கியத்தில் தோய்ந்திருக்கிறான். வங்காள மொழியில் திளைத்திருக்கிறான். தாகூரின் கவிதைகளில் திளைத்திருக்கிறான். எல்லா நூல்களையும் கற்றுத் தோய்ந்தவன். பல்கலைக் கழகக் களஞ்சியம் போல் விளங்கிய கவிஞன் பாரதி.''

அடுத்து, 'பிரசமயப் பாடல்கள்' என்னும் தலைப்பில் உரையாற்றிய **கவிஞர் கா. மு. ஷெரீப்** குறிப்பிட்டார்:



''பாரதிக்கு பிற சமயம் எது? நாத்திகமே பிறசமயம் பாரதிக்கு அவனுடைய பாஞ்சாலி சபதத்தில் உள்ள கடவுள் துதி எல்லாச் சமயங்களுக்கும் பொருந்தும் வகையில் அமைந்திருக்கிறது.''

அடுத்து 'பாஞ்சாலி சபதம்' என்னும் தலைப்பில் உரையாற்றிய **டாக்டர் சு. பாலசந்தர்** தெரிவித்தார்.



''கதைப் பாத்திரங்களை பாரதி அறிமுகம் செய்யும் திறன் பாராட்டுக்குரியது. பாமரர் நெஞ்சில் - பாஞ்சாலி சபதத்தை நன்கு பதிய வைத்த அற்புதச் சிற்பி பாரதி. அது அருமையான சிறு காவியம். நல்லது என்றும் வாழட்டும், அல்லது என்றும் தொலையட்டும், உலகம் இன்பத்தில் ஆழட்டும் என்ற தத்துவத்தைத்தான் பாஞ்சாலி சபதத்தில் பாரதி கூறுகிறார்.''

அடுத்து, 'வேதாந்தப் பாடல்கள்' என்னும் தலைப்பில் உரையாற்றிய **திரு சுகி. சிவம்** குறிப்பிட்டார்:



'சென்றதினி மீளாது மூடரே' என்று பாரதி சொன்னான். வேதாந்தியால் தான் இதனைச் சொல்ல முடியும். அரசைச் சாராது, சமுதாயத்தைக் கண்டித்தவன் பாரதி. அது வேதாந்தியால்தான் முடியும். நிராசை, நிர்பயம்-இதைத் தமிழில் சொன்னால் அச்சமின்மை - ஆசையின்மை; இவை தான் வேதாந்தம்! யாருக்குக் கொள்கை இருக்கிறதோ அவனுக்கு அச்சமிருக்காது. வாழ்க்கையைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்டவன் வேதாந்தி. எல்லாப்பயங்களை நீக்கினாலும் கூட, சிலருக்கு மரணபயம் உண்டு. வேதாந்திக்கு அதுவும் கிடையாது. வாழ்க்கையை விட்டு விலகியதன்று வேதாந்தம்.''

அடுத்து, 'பத்திரிகைத் தலையங்கங்கள், கட்டுரைகள்' என்னும் தலைப்பில் உரையாற்றிய பேராசிரியர் **திரு சாலமன் பாப்பையா** தெரிவித்தார்:



''ஆர்ம்ஸ்ட்ராங் நிலவில் இறங்குவதற்கு முன்பாகச் சுதந்திர வானத்தில் இறங்கியவன் பாரதி. கரிசல் காட்டிலிருந்து புறப்பட்டுப் போன அந்தக் கர்ம வீரர், பத்திரிகை நடத்தினார். நாட்டின் பொது ஞானத்தை அளந்து பார்க்கும் அளவுகோல் பத்திரிகைதான்! அவன் ஞான ரதத்தின் நவீன கீதாசாரியன்.

லார்டு கர்சன் மனைவி இறந்த போது ஒரு பத்திரிகை 'இறைவன் பழி தீர்த்துக்கொண்டான்' என்று எழுதியது. அப்போது பாரதியார் இந்தியா பத்திரிகையில், ''இது போன்ற கேவலமான புத்தி இந்தியருக்கு வரக் கூடாது. அவரது துன்பத்தில் நாம் பங்கு கொள்ளவேண்டும்' என்று குறிப்பிட்டார். பத்திரிகா தர்மம் என்றால் என்ன வென்று சொல்லிக் கொடுத்தவன் பாரதி.''

அடுத்து, 'தேசிய எழுச்சிப் பாடல்கள்' என்னும் தலைப்பில் உரையாற்றிய **திரு தா. பாண்டியன்** குறிப்பிட்டார்:

''வாழ்விக்கவந்த காந்தி' என்று பாரதி காந்தியைக் குறித்துப் பாடினார்; அது பாரதிக்கும் பொருந்தும். பாரதிக்கு இருந்த சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. கண்ணிருந்தும் குருடராய் இருந்த மக்களைக் கண்டு ஆத்திரமும் வந்தது - அனுதாபமும் வந்தது பாரதிக்கு.

இதில் என்ன இருக்கிறது, அப்படி என்ன புரட்சி வந்தது என்று பிறநாட்டார் நினைக்கலாம்.

''நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் - இது நமக்கே



உரிமையாம் என்பதறிந்தோம்'' எனப் பாடினார் பாரதி.

இதில் புதிய ஆராய்ச்சி, நயம் என்ன இருக்கிறது என்று பலர் நினைக்கலாம்.

நாமிருக்கும் நாடு நமது நாடு என்பதைக் கூட அறியாத -உணராத மக்கள் இருந்தனர். அதனால் தான் பாரதி அவ்வாறு குறிப்பிட்டார்.''

## தமிழ் இசையின் தனிச்சிறப்பு!

**ராகம் என்று கூறப்படுவது தமிழரால் பண் என்று குறிக்கப்பட்டு வந்தது. தமிழரின் பண்கள் எண்ணற்று இருந்தன. வடமொழியில்—கரகரப்பிரியா எனக் குறிப்பிடப்படுவதே படுமலைப் பாலைப்பண் என்றும் கல்யாணி எனும் ராகம், அரும்பாலைப் பண் என்றும், முன்னாளில் குறிப்பிடப்பட்டது. அரிகாம்போதிக்குத் தமிழர் அளித்த பெயர் கோடிப் பாலைப் பண்; பைரவிக்கு விளரிப் பாலைப் பண்; தோடிக்குச் செவ்வழிபாலைப் பண்; என இங்ஙனம் ராக இலட்சணங்கள் எவ்வளவோ தமிழில் இருந்தன; மறைந்தன.**

**கடலைக் கண்டால் ஓர் பாடல்; கரியைக் கண்டால் ஓர் பாடல்; தளிரைக் கண்டு ஓர் பாடல்; தனது காதலியைக் கண்டு ஓர் பாடல் எனத் தமிழர் தமது இன்ப உணர்ச்சியை, இசை வடிவில் எத்துணையோ சிறப்புடன் வெளிப்படுத்தி வாழ்ந்தனர்.**





நீதி நிறைந்த சமூக முறைமைக்கு பாடுபடுவோம். குறிக்கோளில் முனைப்பு, ஒற்றுமை, கடும் உழைப்பு, ஒத்துழைப்பு ஆகியவற்றினால்தான் இது சாத்தியமாகும்.

# நாடும் ஒன்றே
# நாமும் ஒன்றே

davp 81/283



எண்ணெய் வண்ண ஓவியம்
பாதுகாக்கப்படுமுன்...



எண்ணெய் வண்ண ஓவியம்
பாதுகாக்கப்பட்டபின்...

கலைப் பொருள் பாதுகாப்பு

# எண்ணெய் வண்ண ஓவியம்

வெ. ஜெயராஜ்
காப்பாட்சியர்,
இரசாயன பாதுகாப்புப் பிரிவு,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை

மனித இனம் தொன்று தொட்டே ஓவியக் கலையில் சடுபாடு கொண்டிருக்கிறது. ஆதி மனிதன் இயற்கையாகக் கிடைத்த கரி, மண், சாயங்கள் போன்றவற்றைக் கொண்டு தானிருந்த குகையின் சுவர்களில் தான் வெளியே வர பயந்த நேரத்தில் தன் நேரத்தை ஓவியம் தீட்டுவதில் செலவிட்டான். காலப்போக்கில் இது ஒரு கலையாக உருவெடுத்தது. சுவரிலும் கல்லிலும் மரத்திலும், கண்ணாடியிலும், ஓலையிலும் காகிதத்திலும், துணியிலும் மற்றும் பொருட்களின் மீதும் ஓவியங்கள் தீட்டப்பட்டன.

மேலைநாடுகளில் தட்பவெப்ப நிலைக்கேற்ப துணிகளில் பெரும்பாலும் எண்ணெய் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டன. இந்தியாவிலும் இக்கலை பரவலாகக் காணப்பட்டது. இக்கலையில் சடுபாடு கொண்ட மன்னர்கள் ஓவியக் கலையை அதிகமாக வளர்க்க உதவினர். உருவப்படங்கள், இயற்கைக் காட்சிகள், அரசவை, கட்டடங்கள் போன்றவை ஓவியங்களாகத் தீட்டப்பட்டன. இவை அதிக காலம் நீடிக்கக் கூடியதல்ல. இவை குறிப்பிட்ட காலம் அழியாமல் இருக்கப்பாதுகாக்கப்படவேண்டும், பேணப்படவேண்டும், பாதுகாத்துப் பேணும் முறையைச் சுருக்கமாகக் காணலாம்.

### எண்ணெய் வண்ண ஓவியத்தின் பகுதிகள்:

பொதுவாக எண்ணெய்வண்ண ஓவியத்தில் நான்கு அடுக்குகள் உண்டு. அவை முறையே 1. தாங்கி, 2. தளம், 3. வண்ணம், 4. மேற்பூச்சு.

ஒரு எண்ணெய் வண்ண ஓவியம் பல்லாண்டு பழுதடையாமல் இருக்க வேண்டுமாயின் இந்த நான்கு பகுதிகளும் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

### எண்ணெய் வண்ண ஓவியத்தில் ஏற்படும் குறைகள்:

எண்ணெய் வண்ண ஓவியம் பழுதடைந்து போவதற்கு பல வித காரணங்கள் உண்டு. மேற்கூறிய நான்கு பகுதிகளில் ஏதாகிலும் ஒன்றில் அல்லது எல்லா பகுதிகளிலுமோ குறைகள் ஏற்பட்டு ஓவியம் பழுதடையக்கூடும். பொதுவாக எண்ணெய் வண்ண ஓவியம் காலப்போக்கில் நிற மாற்றம் அடைகிறது. ஓவியம் முழுவதும் அல்லது ஒரு சில பகுதிகள் புகைபோன்ற தன்மையையடைகிறது. இதற்கு ''வெளுருதல்'' என்று பெயர். சில ஓவியங்களில் வெடிப்புத் தன்மையோடு கூடிய கோடுகள் காணப்படும். இத்தன்மை ஓவியத்திற்கு அழகூட்டினாலும் காலப்போக்கில் ஆழமான வெடிப்புகள் ஏற்பட்டு ஓவியம் சிதைந்து விடக்கூடும். வெடிப்பு அதிகரிக்கும் போது எண்ணெய் வண்ணம் தனியாகவோ அல்லது தளத்தோடு சேர்ந்தோ வெங்காயத் தோல் உரிவதுபோல் உரிய ஆரம்பிக்கும். சிலவேளைகளில் எண்ணெய் வண்ணத்திற்கும் தளத்திற்குமிடையில் அல்லது தளத்திற்கும் தாங்கிக்குமிடையில் உள்ள பிடிப்பு அற்றுப் போய் அந்த இடம் மற்ற இடங்களைக் காட்டிலும் சற்று பருமனாகக் காணப்படும். அந்த இடத்தில் சற்று அதிர்ச்சி ஏற்படுமாயின் நெய் வண்ண அடுக்கு நொறுங்கி விழுந்து விடும். இது அவ்வோவியத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

பொதுவாக, பருத்தித் துணி பாலான தாங்கியாக இருக்குமா பின் அது விரைவில் பழுப்புநிறம் அடைகிறது. இதற்குக் காரணம் என்னவெனில் பருத்தி நூலிலிருக்கும் 'செல்லுலோஸ்' என்னும் மூலக்கூறு நுண்கிருமிகளோடு வினை புரிந்து ஒரு வித அமிலத்தையுருவாக்குகிறது. எனவே துணியினுடைய அமிலத்தன்மை அதிகரித்து தாங்கி வெகு எளிதில் பழுப்பு நிறமேறி கிழிந்துவிட ஏதுவாகிறது.

தலை சிறந்த ஓவியர்களில் பலர் தாங்கள் தீட்டிய ஓவியங்கள் வெகு காலம் பாதுகாப்பாக இருக்கவேண்டுமெனக் கருதி சிறந்த சாயங்களையும் மேற்பூச்சுகளையும் தளங்களுக்கான பொருட்களையும் தாங்களே தயாரித்து உபயோகித்தார்கள். மேலும் ''லினன்'' துணியையே தாங்கியாக உபயோகித்தார்கள். எது எப்படியாக இருந்தாலும், தகாத முறையில் கையாளுவதாலும், வெப்பம், நீர்ப்பூச்சிகள், தூசு போன்றவை காலப்போக்கில் ஓவியங்களோடு வினை புரிவதாலும் சரியான பாதுகாப்பு கிடைக்காததாலும் அவை பழுதடையக்கூடும். இவ்வித ஊறுகள் ஏற்படுங்கால் ஓவியம் அறியாமல் இருக்கவேண்டுமெனில் அவை பேணப்படவேண்டும்

ஓர் ஓவியத்தைத் தீட்டுவதை விட ஓர் ஓவியத்தை செப்பனிட காலம், திறமை முதலியன அதிகம் தேவை. ஓவியத்தின் நான்கு பகுதிகளையும்,சோதனைசெய்து அவற்றின் தன்மையை அறிந்து பேண வேண்டியதிருப்பதால் காலம் அதிகம் தேவை. செப்பனிட ஆகும் செலவும் அதிகமாகும். ஆகவே ஒரு சிலவே எண்ணெய் வண்ண ஓவியங்களைப் பழுது பார்க்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பொதுவாக கலைக்கூடங்கள், ஓவியர் நிறுவனங்கள் மாத்திரமே இதில் அக்கரை எடுக்க முடிகிறது. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் இதற்காக ஆய்வு கூடம் ஒன்று சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது.

### பேணும் முறை:

எண்ணெய்வண்ண ஓவியங்கள் பாதுகாக்க வேண்டிய நிலையில் இருக்கும்போது அவற்றைச் சரியான முறையில் பரிசோதித்து அறியவேண்டும். ஓவியத்தின் அளவுகள், குறைகள், தன்மை, ஓவியரின் பெயர், காலம், உபயோகிக்கப்பட்டுள்ள பொருட்கள், அவற்றின் தன்மை ஆகியவற்றைக் கவனித்து குறித்துக் கொள்வது நல்லது.

எண்ணெய் வண்ண ஓவியத்தை அதன் சட்டத்திலிருந்து பிரித்தெடுத்த பின்பு அதன் இழுப்புச் சட்டத்திலிருந்தும் பிரித்தெடுக்க வேண்டும். ஓவியம் தீட்டப்பட்ட துணியானது இழுப்புச் சட்டத்தின் பின்புறம் இழுத்து ஆணியால் அறையப்பட்டுள்ளதால், துணியின் மடிப்பு, பலவீனமான நிலையில் காணப்படும். மேலும் துணியை இழுப்புச் சட்டத்தோடு இணைக்க இரும்பு ஆணிகள் உபயோகிக்கப்பட்டிருந்தால் ஆணி துரு ஏறி துணியை கறைப்படுத்துவதோடல்லாமல் ஆணியைச் சுற்றிலும் துணி மக்கியோ அல்லது மறைந்தோ போயிருக்கும். மிகக் கவனமாக மழுங்கிய உளி, மத்தி போன்றவற்றால் ஆணியை நிமிட்டி ஆணி பிடுங்கியால் அப்புறப்படுத்தலாம். ஆணிகள் முழுவதும் நீக்கப்பட்ட பின் ஓவியம் மிகக் கவனமாக கையாளப்பட வேண்டும். ஏனெனில், ஓவியத்தைத் தாங்கின திடமான தாங்கிகள் அகற்றப்பட்டுவிட்டன. மேலும் மடிப்புப் பகுதியை கவனமின்றி நிமிர்ந்து வைக்க முற்பட்டால் அது உடைந்து போகும். இந்நிலையில் அப்பகுதி மிகக் கவனமாக கையாளப்படவேண்டும். ஓவியம் சமதளத்தில் விரிப்பின்மேல் தலைகீழாக வைக்கப்படவேண்டும். 1:1:1 என்ற விகிதத்தில் உருக்கி கலக்கப்பட்ட தேன்மெழுகு, மாஸ்டிக் பெசின், டாமர் ரெசின் கலவையை உருகிய நிலையில் மடிப்புப் பகுதியில் பிரஷினால் பூசியோ அல்லது சூடாக்கப்பட்ட கரண்டியினால் பூசியோ மடிப்புப் பகுதியை மெழுகுக் கலவையினால் பதப்படுத்தின பின்பே நிமிர்த்த முயற்சிக்க வேண்டும். பின் அந்தப் பகுதியைச் சூடாக்கப்பட்ட கரண்டியாலோ அல்லது சூடாக்கப்பட்ட இரும்புப் பெட்டியாலோ மெதுவாகத் தேய்த்தால் அப்பகுதி சீராகும்.

ஓவியத்தை மறுபடியும் சீரான முறையில் வைத்து ஓவியத்தின் முற்புறத்தை மிருதுவான பிரஷினால் சுத்தம் செய்ய வேண்டும். பின்பு மைதா மாவில் தயாரிக்கப்பட்ட பசையில் கெடாமல் இருப்பதற்காகச் சிறிது பாரா நைட்ரோ பீனால் அல்லது மெர்க்குரிக் குளோரைடு என்ற இரசாயனப் பொருளைக் கலந்து,அதன் உதவியால்அமிலத்தன்மை,காரத்தன்மை அற்ற மெல்லிய காகிதத்தை ஓவியத்தின் முன்புறம் காற்றுப் புகா வண்ணம் ஒட்ட வேண்டும். பின்பு ஓவியத்தை எண்ணெய் காகிதத்தின் மேல் ஒட்டப்பட்ட பகுதி கீழ் இருக்கும்படி வைக்க வேண்டும்.

ஓவியத்தின் பின் பகுதி அழுக்கடைந்து இருப்பதுண்டு. நன்கு சுத்தம் செய்யாவிடில் புதியதுணி தாங்கி இணைக்கும்போது சரியாக ஒட்டாது. ஆகவே நுண்ணிய துகள்களடங்கிய மணல் காகிதத்தால் மிகவும் கவனமாக தேய்த்து சுத்தம் செய்ய வேண்டும். இம்முறையில் சுத்தம் செய்த பின் ஓவியத்தின் பின்புறம் 1:1:1 என்ற விகிதத்தில் தயாரிக்கப்பட்டுள்ள தேன் மெழுகு, மாஸ்டிக் ரெசின், டாமர் ரெசின் கலவை உருக்கி பூசப்படுகிறது. சரியான முறையில் பூசப் படா விட்டால் சூடான இரும்புக் கரண்டியால் தேய்த்தால் எல்லா பகுதியிலும் அக்கலவை சமமாகப் படர்ந்து விடுகிறது. இவ்விதமாகத்தேய்ப்பதால் நொறுங்கியிருக்கும் நெய் வண்ணம் துணியோடு கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறது. வெடிப்புகள் மறைகின்றன.

ஓவியத்தோடு

கடினத் தன்மை குறைந்து மென்மையாகிறது. இதேபோல்

ஓவியத்தின் பின்பகுதி சூடாக்கப்பட்ட இரும்புப் பெட்டியால் தேய்க்கப்படுகிறது.



ஓவியத்தைச் செப்பனிட உதவும் தானியங்கும் சூடான கரண்டி



புதிய துணியொன்றை ஓவியத்தின் சரியளவுக்கு வெட்டி சட்டத்தில் மாட்டி நீரில் ஊற வைத்து மூன்று நான்கு முறை இழுத்து உலர வைக்க வேண்டும். இவ்விதம் செய்வதால் துணி அதிகம் சுருங்கவோ விரியவோ செய்யாது. இவ்விதமாகப் பதப்படுத்தப்பட்ட துணியைச் சம தரையில் விரித்து அதன் மீது தேன்மெழுகு, மாஸ்டிக் ரெசின், டாமர் ரெசின் கலவையைச் சம அளவில் பூச வேண்டும். இவ்விதம் பூசிய பின் அத்துணியை தேன் மெழுகுக் கலவை பூசப்பட்ட பக்கம் ஓவியத்தின் பின்புறம் சரியாகப் படும்படி பொறுத்தி அதன்மீது எண்ணெய் காகிதம் விரித்து சூடாக்கப்பட்ட இரும்புப் பெட்டியால் அழுத்தித் தேய்க்க வேண்டும். பரவலாக எல்லா இடங்களிலும் மெழுகுக் கலவை உருகி ஒன்றுக்கொன்று ஊடுருவும். இவ்வித நிலையில் எண்ணெய் காகிதத்திற்கு மேல் சமதளமுள்ள பாரமான எடை இரண்டு மூன்று நர்ட்கள் வைக்கப்படுகிறது. இவ்விதம் செய்தால் ஓவியத்தோடு புதிதாக பொருத்தப்பட்ட துணி நன்கு ஒட்டிக் கொள்கிறது.

இப்பொழுது, முன்புறம் ஒட்டப்பட்ட மெல்லிய காகிதம் அகற்றப்பட வேண்டும். நீரில் தோய்க்கப்பட்ட பருத்தித் துணியினால் காகிதம் தோய்க்கப்பட்டபின் அது நீரை உறிஞ்சி மெதுவாகிறது. நகத்தின் உதவியால் கவனமாகக் காகிதத்தை அகற்றிவிடலாம். இந்நிலையில் ஓவியத்தின் முன் பகுதி பசையேற்றப்பட்டிருப்பதால் உலர்ந்த பின் வெண்மையாகக் காணப்படும். ஆகவே ஈரமாக்கப்பட்ட பருத்தித் துணிக்கையின் உதவியால் சுத்தம் செய்ய வேண்டும்.

இழுப்புச் சட்டத்தில் ஆணித் துவாரங்கள் இருப்பின் அவற்றை மருந்து பாகத்தை அகற்றிய தீக்குச்சியால் நிரப்பலாம். சுத்தம் செய்யப்பட்ட ஓவியத்தை இழுப்புச் சட்டத்தில் பொருத்த வேண்டும். ஓவியத்தைச் சட்டத்தின் மேல் சரியாக வைத்து சட்டத்தின் விளிம்பு ஓவியத்தில் பதிகிற இடத்தை குறித்து வைத்துக் கொண்டு சூடான இரும்புக் கரண்டியால் தேய்க்க வேண்டும். விளிம்புப் பகுதி மடங்குகிறது. இவ்விதம் நான்கு புறமும் மடக்கின பின்பு அடுத்து அடுத்துள்ள இரண்டு மடிப்புகளைச் சட்டத்தின் பின் பகுதியில் இழுத்து செப்பு ஆணியால் இறுக்க வேண்டும். பின்பு மூன்றும் நான்காம் பகுதிகளைத் துணி இழுக்கிற கொறடால் நன்கு இழுத்து இறுக்க வேண்டும். பின்பு சட்டத்திற்குள் பொருத்த வேண்டும்.

ஓவியத்தின் முன் பக்கம் வார்னிஷ் பூசப்பட்டிருந்தால் பழுப்பு நிறமேறி ஓவியத்தின் நுண்ணிய விபரங்கள் மறைந்திருக்கும். ஓவியம் அதன் உண்மைத் தோற்றம் பெற வேண்டுமாயின் வார்னிஷ் நீக்கப்பட்டு புதிய வார்னிஷ் பூசப்படலாம். பொதுவாக வார்னிஷ் 1 : 10 என்ற விகிதத்தில் கலக்கப்பட்ட எரிசாராயம் டர்பன்டைன் கலவையின் உதவியால் நீக்கப்படுகிறது. பஞ்சுத் துணிக்கையை இக்கலவையில் தோய்த்து மெதுவாக ஓவியத்தின் மீது தேய்க்கும்போது வார்னிஷ் சிறிது சிறிதாக நீக்கப்படுகிறது. வண்ணம் கரையாதபடி மிகவும் கவனமாகந்தேய்க்க வேண்டும். நன்கு சுத்தம் செய்தபின் வார்னிஷ் பூசலாம்.

இம்முறையில் எண்ணெய் வண்ண ஓவியங்கள் பாதுகாக்கப்பட்டால் ஒரு வேளை இதைவிட சிறந்த பாதுகாப்பு முறைகள் கையாளப்படும் காலத்தில் ஓவியத்தோடு புதிதாக இணைந்துள்ள பாதுகாப்புப் பொருட்கள் எளிதில் நீக்கப்பட்டு புதியமுறையில் ஓவியம் பாதுகாக்கப்படலாம். இங்ஙனம் அழிந்து கொண்டிருக்கிற நெய் வண்ண ஓவியங்களுக்கு தகுந்த கவனம் செலுத்தப்படுமாயின் அவற்றைக் கண்டுகளித்து நமது மூத்த கலை நிபுணர்களின் திறமையைப் போற்றுவதோடல்லாமல் அவர்களின் கலைத் திறனைக் கற்று பின்பற்றவும் ஏதுவாகும்.

# குறிக்கோளை அடையும் வழி!



**சா**தியை நான் வெறுக்கிறேன். சாதி மீது எனக்கு நல்ல அபிப்பிராயமே கிடையாது.

சென்ற பல நூற்றாண்டுகளாக, சாதி முறையானது இந்தியாவின் சாபக்கேடாகவே இருந்து வந்திருக்கிறது என்பது என்னுடைய கருத்து.

சாதிப் பாகுபாடு இந்தியாவின் சக்தியைச் சீரழித்தது. பலவீனப்படுத்தியது. பாரதத்தை அது தாழ்மைப் படுகுழியில் தள்ளி மீளவொட்டாமல் அழுத்தியது.

நாம் அன்னியருக்கு அடிமைப்பட்டதன் மூலகாரணமே, நம்மிடையேயிருந்த சாதிப் பிளவுகள்தான். நம்முடைய ஐக்கிய பாவத்தை அழித்தது சாதியுணர்வுதான். நம்முடைய சகோதரர்களிலேயே ஒரு பகுதியினரை இழிவுபடுத்தும் துர்நோக்கத்தை விளைவித்தது சாதி முறைதான்.

கடந்த காலத்தில் சாதி முறையினால் ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கக் கூடுமா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இன்றைய உலகத்தில் சாதிமுறைதான் நம்முடைய படுமோசமான பலவீனம் என்பதென்னவோ மறுக்க முடியாத உண்மை.

இந்த சாதிமுறை நம்மிடையே நீடித்திருக்கும் வரை, நமக்கு விடிவு காலமே இல்லை. நமது குறிக்கோளை நாம் ஒரு நாளும் அடைய முடியாது.

# அண்ணா ஓர் தெய்வம்



காலிருக்கும்; கரமிருக்கும்; கருத்தைக் கூறக்
கனிவான நாவிருக்கும்; ஆனா லுந்தான்
மேலிருக்கும் கண்ணன்றோ பார்வை நல்கும்!
வெளியுலகக் காட்சிதரும்; அஃதே போன்று
நூலிருக்கும் கல்விகற்ற அருமை அண்ணா
நூறாயி ரம்கோடி கூட்டத் தாரின்
பாலிருந்தார் என்றாலும் உலகம் போற்ற
வாழ்ந்திருந்தார்; மாந்தருக்குள் மேன்மை பெற்றார்!

உடலுறுப்பாம் காலிலடி காணும் போதும்
உயர்தலையின் மீதுநோவு தோன்றும் போதும்
படர்ந்திருக்கும் பெருவயிற்றின் புறமும் உள்ளும்
பாழான வலியெழுந்து வதைக்கும் போதும்
அடர்த்திமிகு அருவியென நீரைக் கொட்டல்
அருங்கண்ணின் செயலன்றோ? அதனைப் போன்றே
இடர்க்கடலால் தமிழ்நாட்டார் துடித்த போதில்
இரவுபகல் கலங்கியவர் அண்ணா அன்றோ?

சாதிமதச் சழக்குகளை உரமாய் இட்டே
சதிப்பயிரைப் பாழ்மனத்தார் விளைத்த போதில்
நீதிசொன்னார்; 'ஒன்றே குலம்' என்றோர் கொள்கை
நெறிநின்றார்; நித்தநித்தம் முழக்கஞ் செய்தார்!
ஆதிமகன் வள்ளுவனார் அருளிச் செய்த
அருங்குறளாம் இலக்கியத்தின் வடிவம் ஆனார்!
சோதிமணிச் சுடராக ஒளிர்ந்தார்; வாழ்வில்
சோதனையைச் சாதனையாய் ஆக்கிக் கொண்டார்!

அன்புமனம் அருள்வதனம் அவரின் சொந்தம்;
அறிவுமிகும் சொல்லமுதம் அவர்பாச் சந்தம்
பண்புமிகும் செயல்முறையே அவர்தம் நாட்டம்
பகைவர்க்கும் நலஞ்சேர்த்தல் அன்னார் ஏற்றம்
என்புருகப் பிறர்க்குதவல் அவரின் ஆர்வம்
எளிமைமிகும் உருவமைப்பே அன்னார் தோற்றம்
வன்முறையை வெறுத்தொதுக்கும் அவரின் உள்ளம்
வாழ்வாங்கு வாழ்ந்ததனால் அவரோர் தெய்வம்!

புலவர் தமிழ்ப்பித்தன்



# மகளிர் சீர்திருத்தப் பள்ளியின் பொங்கல் விழா!

அரசு முதுநிலை, இளநிலை மகளிர் சீர்திருத்தப் பள்ளியின் பொங்கல் விழா 11-1-1982 திங்கட் கிழமை அன்று மாலை 5 மணியளவில் சென்னைப் புரசவாக்கம் நெடுஞ்சாலையிலுள்ள பள்ளியில் நடைபெற்றது.

சீர்திருத்தப்பள்ளி மாணவியர் அணிவகுப்பு மரியாதையுடன் விழா தொடங்கியது. மாணவியர் சீருடை அணிந்த வண்ணம் நிகழ்த்திய விளையாட்டு நிகழ்ச்சிகள் ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் களிப்படையச் செய்தன.

பள்ளியின் அறிக்கை வாசித்த கண்காணிப்பாளர் செல்வி எஸ். வி. சகுந்தலா அவர்கள் தமிழகத்தில் பெண்களுக்காக அமைக்கப்பட்டுள்ள ஒரே அரசு சீர்திருத்தப் பள்ளியாகிய இது இளநிலை, முதுநிலை. ஆகிய இரு பிரிவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்றும் இப்பள்ளி தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புப் பணித்துறை நேரடி நிர்வாகத்தின் கீழ் சீரிய முறையில் இயங்கி வருகின்றது என்றும் குறிப்பிட்டார்.

விழாவில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றிய தமிழ்நாடு சட்டமன்றஉறுப்பினர் திரு. பிரபாகரன் அவர்கள் பேசுகையில் பொன்மனச் செம்மல் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சிதனிலே சீர்திருத்தப் பள்ளிகளிலுள்ள மாணவியர்கள் முன்னேற வழி செய்வது எங்களது இலட்சியங்களில் ஒன்றாக இருக்கிறது. அதன்படியே இங்கு பயிலும் மாணவியர்கள் எல்லோரும் தாமாகவே முன்னேற வழிவகுத்துக் கொள்ளும் வகையில் சிறந்த முறையில் பயிற்சி யளிக்கப்பட்டு வருகிறார்கள். இப்பள்ளியில் மாணவியரின் பெற்றோரைப் போன்றவர்களே ஆசிரியராக இருக்கின்றார்கள். இங்குள்ள மாணவியர் ஒவ்வொருவருடைய நிலையையும் கண்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

மகாத்மா காந்தி அவர்கள் பிறப்பிலேயே நாட்டின் தலைவராகப் பிறக்கவில்லை. தமது வாழ்க்கையில் பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகிய பிறகே மகாத்மாவாக திகழ்ந்தார். அது போலவே நாமும் இச்சமுதாயத்திற்கு, நாட்டிற்கு ஏற்ற பிரதிநிதிகளாக வருவதற்கு நம்மை இப்போதே தகுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். பாரதியார் எடுத்துரைத்த பெண்களாகத் திகழ வேண்டும். சமுதாயத்தில் சீரிய நோக்கங்களை மேற்கொள்ள வேண்டும். இங்கு பயிலும் ஒவ்வொரு மாணவியரும் இங்கிருந்து நல்ல குடிமகளாக வெளியேற வேண்டும் என்று கூறினார்.

விழாவிற்குத் தலைமையேற்றுப் பேசிய மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் தமது தலைமையுரையில்,

வாழ்க்கையில் தவறிவிட்ட குழந்தைகளையும் வறுமையில் வாடும் குழந்தைகளையும் ஆதரவற்ற குழந்தைகளையும் இப்பள்ளியில் சேர்த்து கல்விப்பயிற்சி யளித்து வருகிறோம். இதன் மூலமாக இங்குள்ள பெண்கள் யாவரும் தங்களைச் சிறந்த மாணவியராகஉருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இங்கு அளிக்கப்படும் பயிற்சியின் மூலமாகஒழுக்க ரீதியிலும் சமுதாய ரீதியிலும் முன்னேற தங்களைத் தகுதிப் படுத்திக் கொள்கிறார்கள். தங்களுடைய வாழ்க்கையில் திருந்தியவர்களாகவும் வளர்ச்சியடைந்தவர்களாகவும் காணப்படுகிறார்கள். இதற்குத் துணை செய்யும் வகையில் கட்டுப்பாடு ஒழுக்கம், பண்பாடு, ஆகியவற்றை உங்களிடையே மேலும் வளர்க்கத் தாயாக விளங்குவது இன்றைய தமிழக அரசு.

இதுவரை இங்கு எட்டாம் வகுப்பு வரைதான் படிக்கவசதி இருக்கிறது. இங்கு பயிலும் மாணவிகள் தொடர்ந்து இங்கேயே படிப்பதற்கு வசதியாக 9, 10-ஆம் வகுப்புகளும் இப்பள்ளியில் சேர்க்கப்படும் என்று குறிப்பிட்டார்கள்.

விழாவை யடுத்து மாணவியர் நடத்திய கலைநிகழ்ச்சிகளுடன் விழா இனிது முடிவடைந்தது.

**தொகுப்பு : தே. மணி**






# சிறுசேமிப்பு

# செல்வம் தரும்! செழிப்பு தரும்!



"சிறு துளி பெரு வெள்ளம்'' என்னும் பழமொழியினை ஓர்ந்து ஒவ்வொருவரும் தங்கள் குடும்பப் பொறுப்புகளையும், வருங்காலத் தேவைகளையும் உணர்ந்து சேமிக்க வேண்டும். சேமிக்கத்தற்காலத்தில் பல வழிகள் உள்ளன. அவற்றில் தலை சிறந்தது அர்சாங்கம் காட்டும் அழகான சிறுசேமிப்புத் திட்டம். அவரவர் வருமானத்திற்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப பல சிறு சேமிப்புத் திட்டங்கள் உள்ளன. மேலும் கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களும் வருமான வரிச் சலுகைகளும் உள்ளன. வீட்டுக்கொரு நல்ல செயல், நாட்டுக் கொரு நல்ல பணி என்ற எண்ணத்தோடு கீழே தரப்பட்டுள்ள திட்டங்களில் அவரவருக்கேற்ற சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம்.

### அஞ்சலக சேமிப்பு வங்கி (வரி கிடையாது)
### (Post Office Savings Bank)

வங்கிகளில் பழமையானதும் நாட்டில் ஏறக்குறைய எல்லா கிராமங்கள், சிற்றூர்கள், பட்டணங்கள் ஆகியவற்றில் அஞ்சலகங்கள் உள்ள இடங்களில் எல்லாம் அமைக்கப் பெற்றதுமான, இவ்வங்கி, மக்கள் பணத்தைப் போடவும் எடுக்கவும் வசதி நிறைந்துள்ளது. ஒரு கணக்கைத் துவங்க ஐந்து ரூபாய்மட்டும் போதுமானது. பிறகு எவ்வளவு தொகை வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் சேர்த்து வரலாம். இச்சேமிப்புத் திட்டத்தில் கிடைக்கும் வட்டிக்கு (ஆண்டுக்கு 5.5 சதவிகிதம்) வருமானவரி கிடையாது என்பதால், தனி நபர் இக்கணக்கில் ரூ. 25,000 வரையிலும், கூட்டாக ரூ. 50,000 வரையிலும் சேமிக்கலாம். பதிவு செய்யப்பட்ட சங்கங்கள், நிறுவனங்கள் ஆகியவை பிராவிடெண்ட் நிதி தொகைகளை உச்ச வரம்பு ஏதுமின்றி இக்கணக்கில் சேர்க்கலாம்.

கணக்கிலிருந்து விரும்பும்போதெல்லாம் எவ்வளவு வேண்டுமானாலும் எத்தனை முறைகள் வேண்டுமானாலும் பணத்தை எடுக்கலாம், போடலாம். இது குறித்து எந்த விதமான கட்டுப்பாடும் கிடையாது. இதன் மூலம் இதர வங்கிகளில் ''கரண்ட் அக்கௌண்ட்'' ( Current Account ). என்று சொல்லப்படும் கணக்குப் போல் இருப்பதுடன் 5.5 சதவிகிதம் வரை வட்டியும் வழங்கப்படுகிறது. (சாதாரணமாக இதர வங்கிகளின் கரண்ட் அக்கௌண்டிற்கு'' அரை சதவிகிதத்திற்கு மேல் வட்டி வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது) ''செக்'' மூலமாகச் சேமிப்புக் கணக்கில் பணம் பற்று வரவு செய்யும் வசதி பெரும்பாலான தபால் நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சாதாரணமாகச் சேமிப்புக் கணக்கிற்கு அளிக்கப்படும் அதே 5.5. சதவிகித வட்டி, செக் வசதியுடன் கூடிய கணக்குகளுக்கும் கிடைக்கிறது.

பெரும் பரிசுகள் : தபால் நிலைய சேமிப்பு வங்கியில் (தனி நபராகவோ கூட்

டாகவோ) கணக்கு வைத்திருப்போர் தங்களுடைய கணக்குகளில் குறைந்தபட்சம் 200 ரூபாய் இருக்கும்படி பார்த்துக் கொண்டால், அவர்களுடைய கணக்குகள், பெரும் பரிசுகளுக்கான குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஒவ்வொரு குலுக்கலுக்கும் கீழ் குறிப்பிட்டுள்ளபடி ரூ. 25.50 இலட்சத்திற்கான 11,116 பரிசுகள் உண்டு.

| | ரூபாய் |
|---|---|
| ரூ. 1,00,000 பரிசுத் தொகையுள்ள ஒரு முதல் பரிசு .. | 1,00,000 |
| ஒவ்வொன்றும் ரூ 50,000 பரிசுத் தொகையுள்ள ஐந்து இரண்டாவது பரிசுகள் | 2,50,000 |
| ஒவ்வொன்றும் ரூ. 20,000 பரிசுத் தொகையுள்ள பத்து மூன்றாவது பரிசுகள் ... | 2,00,000 |
| ஒவ்வொன்றும் ரூ. 5,000 பரிசுத் தொகையுள்ள நூறு நான்காவது பரிசுகள் ... | 5,00,000 |
| ஒவ்வொன்றும் ரூ. 500 பரிசுத் தொகையுள்ள ஆயிரம் ஐந்தாவது பரிசுகள் ... | 5,00,000 |
| ஒவ்வொன்றும் ரூ. 50 பரிசுத் தொகையுள்ள பத்தாயிரம் ஆறாவது பரிசுகள் ... | 5,00,000 |
| மொத்தம் ... | 20,50,000 |

**ஓர் ஆண்டில் இரண்டு குலுக்கல் நடைபெறும்**

ஜனவரி குலுக்கலுக்கு ஏப்ரல் 6-ந் தேதிக்கு முன்னதாகக் கணக்கு துவக்கப்பட்டு, கணக்கில் 200 ரூபாயோ, அதற்கு அதிகமான இருப்போ இருக்க வேண்டும். செப்டம்பர் 30-ம் தேதி வரை டெபாசிட் தொகை 200 ரூபாய்க்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

ஜூலை குலுக்கலுக்கு, அக்டோபர் 6-ம் தேதிக்கு முன்னதாகக் கணக்கு துவக்கப்பட்டு கணக்கில் 200 ரூபாயோ அதற்கு அதிகமான இருப்போ இருக்க வேண்டும். மார்ச் 31-ந் தேதி வரை டெபாசிட் தொகை 200 ரூபாய்க்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

## அஞ்சலக கால வைப்புத் திட்டம் (Post Office Time Deposit)

வருமான வரி செலுத்தாதவர்களுக்கும், குறைந்த விகிதத்தில் வரி செலுத்துவோருக்கும், இத்திட்டம் உகந்ததாக உள்ளது. இதுவும் அஞ்சலக வங்கி மூலமாக இயங்கிவருகிறது.

ரூபாய் 50, ரூ. 100, ரூ. 150 போன்ற 50-ன் பெருக்குத் தொகைகளில் ஒன்று, இரண்டு, மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்குக் கூலவரை வைப்புத் தொகைக்கு உச்ச வரம்பு கிடையாது.

சேமிப்பு உள்ள பணத்திற்குக் கவர்ச்சிகரமான கீழ்க்கண்ட வட்டி விகிதங்கள் வழங்கப்படுகின்றன.

| | சதவிகிதம் |
|---|---|
| ஓர் ஆண்டு கணக்கிற்கு ... | 8.5 |
| இரண்டு ஆண்டு கணக்கிற்கு. | 9.5 |
| மூன்று ஆண்டு கணக்கிற்கு... | 10.5 |
| ஐந்து ஆண்டு கணக்கிற்கு... | 10.5 |

வட்டிக்கு வரி விலக்குக் கிடையாது என்றாலும், வட்டி சேரும் இடத்திலேயே வட்டித் தொகையிலிருந்து கழிக்கப்பட மாட்டாது. ரூ. 3,000 வரை வட்டித் தொகைகளுக்கு (மற்ற வரி விதிப்பிற்குள்ளாகும் செக்யூரிடிகளில் கிடைக்கும் வட்டியோடு) வருமான வரி விலக்குண்டு.

இவ்வகை வைப்புத் தொகைக் கணக்குகளை அரசுத் துறைகள், நிறுவனங்கள் ஆகியவற்றில் அடமானம் வைக்கலாம். நிறுவனங்கள் பிராவிடெண்ட் நிதித் தொகைகளை இத்திட்டத்தில் முதலீடு செய்யலாம்.

## அஞ்சலக வளரும் மாதச் சேமிப்புத் திட்டம் (Post Office Recurring Deposit)

அஞ்சலக வங்கிகளில் கிடைக்கக்கூடிய இப் புதிய திட்டம் வருமான வரி செலுத்தாதவர்களுக்கும், மற்றும் குறைந்த அளவில் வருமான வரி செலுத்துபவர்களுக்கும் ஏற்றதாயுள்ளது. சம்பளப் பட்டியல் திட்டத்தின் மூலமாகவும் சேரக்கூடிய இத்திட்டம், அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணிபுரியும் மொத்தச்சம்பளம் வாங்குவோருக்கும் உகந்ததாக உள்ளது. பல செலவுகளுக்கிடையே மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையினை எப்படி கட்டி வருவது என்ற பிரச்சினைக்கே இடமேயில்லாமல், சம்பளம் வழங்கும் அதிகாரியே அவரவர் குறிப்பிட்ட தொகையினை சம்பளத்திலிருந்து பிடித்து அவர் பெயரில் ஒரு கணக்கைத் துவங்கி மாதா மாதம் பணத்தைக் கட்டி வருவார். கால இறுதியில் பாஸ் புத்தகம் அவரவர் கையில் கொடுக்கப்பட்டு பணத்தை அஞ்சலக வங்கியிலிருந்து பெற வசதியுள்ளது.

இது ஓர் ஐந்து ஆண்டுக் கணக்கு. இதற்கு 10.5 சதவிகிதம் உயர் வட்டி அளிக்கப்படும். இத்திட்டத்தில் உங்கள் சேமிப்பு கீழ்க்கண்டவாறு வளருகிறது :

| கட்டும் தொகை | ஐந்து ஆண்டுஇறுதியில் கிடைக்கும் தொகை |
|---|---|
| ரூபாய் | ரூபாய் |
| 5 | 389.05 |
| 10 | 778.10 |





| | |
|---|---|
| 15 | 1,167.15 |
| 20 | 1,556.20 |
| 25 | 1,945.25 |
| 50 | 3,890.50 |
| 100 | 7,781.00 |

இத்திட்டத்தில் ரூ. 5-ம் அதன் பெருக்கு தொகைகளிலும் உச்ச வரம்பின்றி சேமிக்கலாம். கணக்கைத் துவக்கி ஓராண்டு முடிவடைந்தவுடன் சேர்ந்த பணத்தில் பாதித் தொகையைக் கடனாகப் பெறலாம். கால வரையில் ஒரு முறைதான் கடன் பெறலாம். தவறிய தவணைகளை ஐந்து தவணைகள் வரை குறைந்த வட்டியுடன் திருப்பிச் செலுத்தலாம்.

இத்திட்டத்தில் சேர்ந்தவர்களுக்குத் தற்போது ஒரு தனி சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது. கணக்கைத் துவக்கியவர்கள் எதிர்பாராத காரணங்களால் இறக்க நேரிடுமானால் ஐந்தாண்டு இறுதியில் அவர்களுக்கு என்ன தொகை (வட்டியுடன்) கிடைக்குமோ அந்தத் தொகை அவர் நியமித்திருக்கும் வாரிசுக்கு அளிக்கப்படும். இச்சலுகையைப் பெறச்சேமிக்கும் நபர் 18 வயதுக்கு மேல், ஆனால் 53 வயது பூர்த்தியாகாமல் இருக்க வேண்டும். கணக்கைத் துவங்கி இரண்டு ஆண்டுகள் முறையாகப் பணம் கட்டி வந்திருக்க வேண்டும். இந்த காலம்வரைக்கும்கடன் வாங்கியிருக்கக்கூடாது. மற்றும்உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டிருக்க வேண்டும். இச்சலுகை ரூ. 5, ரூ. 10 ரூ. 15 மற்றும் ரூ. 20 கணக்கைத் துவக்குபவர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. 5 வருட ரிகரிங் டிபாசிட் கணக்கின் தவணை முடிவில் கிடைக்கும் தொகையை மேலும் 5 ஆண்டுகளுக்கு அக்கணக்கிலேயே விட்டு வைத்து ஆண்டுக்கு 10.5 சதவிகிதம் கூட்டு வட்டி பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையே 5வருட கணக்கை, தவணை முடிவில் மேலும் 5 வருடங்களுக்கு நீடித்து அதே கணக்கில் தொடர்ந்து பணம் செலுத்தி வரவும் வசதியுள்ளது.

### அஞ்சலகத்தொடர்பு வைப்புத் திட்டம் (Post Office Cumulative Time Deposit)

வருமானவரி செலுத்துபவருக்கு ஏற்ற திட்டம் இது. அஞ்சலக வங்கிமூலமாகஇயங்கி வரும் இத்திட்டத்திலும், சம்பளப் பட்டியல் மூலமாகச் சேரலாம். இந்தத் திட்டத்தில் சேர குறைந்தது ரூ. 10-ம் அதற்கு மேல் ரூ. 5-ம் அதன் பெருக்குத் தொகைகளிலும், தனி நபர் சேமிப்பாக இருந்தால் இதைப் போல் இரு மடங்கு தொகையும் சேமிக்கலாம்.

கணக்குகளுக்கான வட்டி விகிதம் வருமாறு :—

| கணக்கு வகை | தொடர் வட்டி விகிதம் | மாதம் ரூ. 10 செலுத்தினால் சேமிப்புக்கால முடிவில் கிடைக்கக்கூடிய தொகை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 10 ஆண்டு | 6.75 சதவீதம் கூட்டு வட்டி | ரூ. 1,693.20 |

சேமிப்புக் கால முடிவில் கிடைக்கும் வட்டித் தொகைக்குவரி கிடையாது. ஆண்டுக்கு இன்சூரன்ஸ் பிரிமியம், பிராவிடண்ட் நிதித் தொகை ஆகியவற்றிற்கு எவ்வித வருமான வரிச் சலுகை கிடைக்கிறதோ அதே சலுகை ஒரே ஆண்டில் செலுத்தப்படும், வளரும் மாதச்சேமிப்பு டெபாசிட் தொகைக்கும் கிடைக்கும். கணக்கைத் துவங்கி ஓராண்டுக் காலம் முடிவடைந்ததும் தேவைப்பட்டால் சேமிப்புத் தொகையில் 50 சதவீதம் வரை கடன் வாங்கலாம். இம்மாதிரி கடன் 10 ஆண்டுக் கணக்கில் இருமுறை வாங்கலாம். கடனைச் சுலபத் தவணையில் திருப்பிச் செலுத்த வசதி உள்ளது. இக் கணக்கில் கடன் ஏதும் வாங்காமலிருந்தால் 10 ரூபாய் கணக்கிற்குக் கணக்கு முடியும்பொழுது ரூ. 50 போனசாகத் தற்போது வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மற்ற கூடுதல் தொகைகளுக்கும் இதே போல போனசைக் கணக்கிட்டுக் கொடுக்கப்படும்.

### ஏழு ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரம் (National Savings Certificate) 2–வது வெளியீடு

இது ஓர் ஏழு ஆண்டுப் பத்திரம். இவை ரூ. 10, ரூ. 100 ரூ. 1000 மற்றும் ரூ. 5,000 ஆகிய வகைகளில் கிடைக்கின்றன. தனி நபர் கணக்கில் ரூ. 75,000 வரையிலும், கூட்டுக் கணக்கில், ரூ. 1,50,000 வரையிலும் இப்பத்திரங்களில் முதலீடு செய்யலாம். ஆண்டொன்றுக்கு 6.5 சதவித கூட்டு வட்டி கணக்கிடப்பட்டு அசலுடன் கால முடிவில் வழங்கப்படும்.

### ஆறு வருட தேசிய சேமிப்புப் பத்திரங்கள்

1-5-1981 முதல் மத்திய அரசு ஆறு வருட புதிய சேமிப்புப் பத்திரங்கள் 6 மற்றும் 7-வது வெளியீடுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அப்பத்திரங்களின் சிறப்பு அம்சங்கள் வருமாறு :—

6 வருட தேசிய சேமிப்புப் பத்திரம்-6வது வெளியீடு:

1. இப்பத்திரம் ரூ. 10/50/100/500/1000 மற்றும் ரூ. 5000 வகைகளில் கிடைக்கிறது.

2. ரூ. 100 முதலீடு செய்தால் ஆறாண்டிற்குப் பிறகு ரூ.201.50 ஆகப் பெருகுகிறது. இதேபோல் எவ்வளவு தொகை முதலீடு செய்திருக்கிறோமோ அவை ஆறாண்டிற்குப் பிறகு இரட்டிப்புக்கு மேல் பெருகுகின்றன.

3. தேவையானால் மூன்றாண்டுகளுக்குப் பிறகு முதலீட்டுத் தொகையைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

ரூ. 100 பத்திரம் வாங்கினால் மூன்றாண்டுகளுக்குப் பிறகு கீழ்க்கண்டவாறு கிடைக்கும்.

3 வருடமும் அதற்கு மேலும் ஆனால், 3.5 ஆண்டுக்குள் ரூ. 132.00

3.5 வருடமும் அதற்கு மேலும் ஆனால், 4 ஆண்டுக்குள் ரூ. 138.00

4 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 4.5 ஆண்டுக்குள் ரூ. 145.00

4.5 வருடமும் அதற்கு மேலும் ஆனால், 5 ஆண்டுக்குள் ரூ. 152.00

5 வருடமும் அதற்கு மேலும் ஆனால், 5.5 ஆண்டுக்குள் ரூ. 159.00

5.5 வருடமும் அதற்கு மேலும் ஆனால், 6 ஆண்டுக்குள் ரூ. 166.00

6 ஆண்டுக்குப் பிறகு ரூ. 201.50

100 ரூபாய்க்குப் பத்திரம் வாங்கினால் ஒவ்வொரு ஆண்டும் வட்டி எப்படி வளர்கிறது என்பது வருமாறு :

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1 ஆண்டு | ... | 12.40 |
| 2 ஆண்டு | ... | 13.90 |
| 3 ஆண்டு | ... | 15.60 |
| 4 ஆண்டு | ... | 17.50 |
| 5 ஆண்டு | ... | 19.70 |
| 6 ஆண்டு | ... | 22.40 |
| | | 101.50 |

குறிப்பு : இதே போல நீங்கள் முதலீடு செய்யும் தொகைக்கு வட்டியைக் கணக்கிட்டுக் கொள்ளவும்.

### 6 வருடத்திய சேமிப்புப் பத்திரம்-7-வது வெளியீடு

(1) இப்பத்திரம் ரூ. 100/500/1000 மற்றும் ரூ. 5,000 வகைகளில் கிடைக்கிறது.

2. வட்டி விகிதம் 12 சதவீதம் ஆறு மாதத்திற்கொரு முறை வழங்கப்படும்.

3. மூன்றாண்டுக்குப் பிறகு திரும்பப் பெறலாம்.

ரூ. 100 பத்திரம் வாங்கினால் மூன்றாண்டுகளுக்குப் பிறகு கீழ்க்கண்டவாறு கிடைக்கும்.

3 வருடம் அதற்கு மேலும் ஆனால், 3.5 ஆண்டுக்குள் ரூ. 91.55

3.5 வருடம் அதற்கு மேலும் ஆனால், 4 ஆண்டுக்குள் ரூ. 89.90

4 வருடம் அதற்கு மேலும் ஆனால், 4.5 ஆண்டுக்குள் ரூ. 88.15

4 வருடம் அதற்கு மேலும் ஆனால் 5 ஆண்டுக்குள் ரூ. 86.35

5 வருடம் அதற்கு மேலும் ஆனால், 5.5 ஆண்டுக்குள் ரூ. 84.45

5.5 வருடம் அதற்கு மேலும் ஆனால், 6 ஆண்டுக்குள் ரூ. 82.45

குறிப்பு : மற்ற தொகைகளுக்கு இதே போல வட்டியைக் கணக்கிட்டுக் கொள்ளவும்.

பொது அம்சங்கள் :—

1. இப்பத்திரத்தைத் தனி நபர் பெயரிலோ இருவர் கூட்டாகவோ குழந்தைகளுக்காக பெற்றோர்களோ வாங்கலாம்.

2. தற்போது வாரிசுதாரர் நியமனம் கூட்டுக் கணக்கிற்கும் உண்டு.

3. வருமான வரிச் சட்டம் பிரிவு 80-ன் படி வட்டிக்கு ரூ. 3,000 வரை வரி விலக்கு உண்டு.

4. முதலீடுகளுக்கு உச்ச வரம்பு ஏதும் கிடையாது.

5. இப்பத்திரங்களில் முதலீடு செய்யப்படும் தொகைகளுக்குத் தனி நபருக்கு ரூபாய் 1,50,000 வரை சொத்து வரி விலக்கு உண்டு.

6. காசோலை ( Cheque ) கேட்புவரைவோலை ( Demand Draft ) மூலமாக பத்திரம் வாங்குவோர் அவ்வோலையை என்று கணக்கில் எடுத்துக் கொள்கிறார்களோ அன்றுதான் பத்திரம் வழங்கப்பட்ட தேதியாகக் கருதப்படும்.

### பொதுமக்கள் வைப்பு நிதி
### (Public Provident Fund)

ஸ்டேட் பாங்கும் அதன் துணை நிறுவனங்கள் மூலமாகவும் மற்றும் அனைத்து தலைமை அஞ்சல் நிலையங்களிலும் இயங்கி வரும் இத்திட்டம் சொந்தமாகத் தொழில் நடத்துபவர்களுக்கும் இதர பொது மக்கள் அனைவருக்கும் உகந்தது. இதன் முதலீட்டிற்கு 8.5 சதவிதம் தொடர் வட்டி ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது. வட்டிக்கு வரி விலக்கு உண்டு. இதர விலக்கு பெறக்கூடிய சேமிப்புத் திட்டங்களோடு சேர்த்து இதில் செய்யப்படும் முதலீட்டிற்கும் வருமான வரி விலக்கு உண்டு. ஒரு நிதி ஆண்டில் ரூ. 30,000-க்கு அதிகம் இல்லாமலும் ரூ. 100க்குக் குறையாமலும் ஒரே தவணையிலாவது அல்லது 12-க்கு மேற்படாமல் தவணைகளில் வேண்டுமானாலும் அவரவர் வசதிக்கேற்ப முதலீடு செய்யலாம். இத்திட்டத்திலுள்ள முதலீட்டை எந்த நீதிமன்றமும் ஜப்தி செய்ய முடியாது. கடன் மற்றும் திருப்பி வாங்கும் வசதிகளும் உண்டு.

### கழிவுத் தொகை மற்றும் பரிசுகள்

சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தில் ஓராண்டில் 100 கணக்குகளைச் சேர்த்த நபர்களுக்கு அழகிய ரெக்சின் கைபைஒன்று பரிசளிக்கப்படுதலோடு அந்தக் கணக்குகளை பராமரித்து வரும் அலுவலருக்கு 2.5 சதவீதம் விழுக்காடு கழிவுத்தொகையும் கொடுக்கப்படுகிறது.




# அறிவுக்கு விருந்தூட்டும் அரிய பொருட்காட்சி!

அதிசயச் சங்கிலித்தொடரைப் பார்க்க வேண்டுமா?

நச்சுப் பாம்புகளைப் பிடிப்பதைக் காண வேண்டுமா?

நொடியில் தண்ணீரைச் சூடாக்கும் கருவியை வாங்க வேண்டுமா?

இவை மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ அற்புதங்களையெல்லாம் ஒரே இடத்தில் கண்டு மகிழ ஒரு அரிய கண்காட்சி சென்னையிலே நடக்கின்றது. அதுதான், ஒன்பதாவது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி!

## 60 நாட்களுக்கு:

சென்னையில், பரந்து விரிந்த தீவுத் திடலில் பார்க்கப் பரவசமூட்டும் இந்தப் பொருட்காட்சியை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1974-ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகின்றது. தமிழகத்தின் தொழில் வளர்ச்சியினை எடுத்துக் காட்டும் வகையில், இவ்வாண்டின் பொருட்காட்சி, சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியாக அமைக்கப்பட்டுள்ளது. பொருட்காட்சியில் பங்கு கொள்வோர் எண்ணிக்கையும், பார்க்க வருவோர் எண்ணிக்கையும் ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருகிறது.

இவ்வாண்டு ஜனவரித் திங்கள் 9-ஆம் நாள் தொடங்கிய இப்பொருட்காட்சி, கூவம் ஆற்றின் இரு கரைகளிலும் சுமார் 22 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. இப்பொருட்காட்சி 60 நாட்களுக்கு நடைபெறுகிறது.

## 335 காட்சி அரங்குகள்

பாரதி நூற்றாண்டு விழாவினை ஒட்டி, போர் நினைவுச் சின்னத்தின் எதிரே அமைந்துள்ள நுழைவு வாயிலில், மகாகவி பாரதியின் கம்பீரமான உருவச்சிலை, இந்திய தேசப்படப் பின்னணி

**பி.வி.கிரி**

யுடன் மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளது. மற்றொரு நுழை வாயில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்துக்கு எதிரில் சிலப்பதிகாரம் தோரணவாயில் முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

பொருட்காட்சியின் அமைப்பு முறை ( Layout ) பொது மக்கள் நெரிசலின்றி நடந்து செல்வதற்கு ஏற்ற வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது ஒரு சிறப்பு அம்சமாகும்.

பொருட்காட்சியில் மொத்தம் எத்தனை அரங்குகள் உள்ளன?

இவ்வாண்டு மொத்தம் 335 நிறுவனங்களின் காட்சிஅரங்குகள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் 43 தமிழக அரசுத் துறைகளையும், நிறுவனங்களையும் சார்ந்தவையாகும். 12 இந்திய அரசுத் துறையைச் சார்ந்த 49 பெரிய நிறுவனங்களும் பங்கு கொண்டுள்ளன.

பெருந்தொழில் நிறுவனர்களான இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ், சதர்ன் பெட்ரோகெமிகல்ஸ், சிம்சன், சுந்தரம் கிளேட்டன், சதர்ன் ஆஸ்பெஸ்



டாஸ், பார்ம் இம்ப்ளிமெண்ட்ஸ், ரிலையன்ஸ் மோட்டார்ஸ் ஆகியோரும் பொருட்காட்சியை அலங்கரிக்கின்றனர்.

**எங்களுக்கு உதவுங்கள்!**

சரி. சுற்றுலாப் பொருட்காட்சியைப் பார்க்கச் சுற்றிவருவோமா?

அதோ! நீண்ட 'கியூ' வரிசை தென்படுகிறதே! ஆம். அதுதான் காவல் துறை அரங்கம். 'உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்!' என்ற வாசகத்தை முகப்பில் கொண்ட இந்த அரங்கத்தினுள் நுழைகிறோம்.

காவல்துறையின் துப்பறியும் நாய்களான ரீட்டா, பிளாக்கியைப் பார்க்கிறோம், பொம்மை வடிவில்!

தமிழ்நாடு காவல் துறை வானொலியின் மாதிரி வடிவம் ஒன்றையும் பார்க்கிறோம் இங்கு. 'திருடர்கள் பலவிதம்' என்ற தலைப்பில் எத்தனை வகையான திருடர்களின் புகைப் படங்கள் இங்கே இருக்கின்றன! சாலைப் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிக்காதவர்களின் 'கதி'யைப் படங்களின் மூலம் பார்க்கும்போது, நமக்கே கதி கலங்குகிறது!

தமிழகத்தின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு—அரங்கின் முகப்பாகக் கொண்டுள்ளதுதான் சுற்றுலாத் துறையாகும்.

தமிழகத்தின் சுற்றுலாத் தலங்களை அழகிய வண்ணப்படமாகக் காட்டுவது மட்டுமின்றி, நம் எண்ணத்தை ஈர்க்கக்கூடிய வகையிலே விடுமுறை நாட்களில், தமிழகத்தின் பெருமையினை எடுத்துக் காட்டும் வகையில் பரத நாட்டியமும், இங்கு நடக்கின்றது. அதுமட்டுமின்றி, நாள்தோறும் 'வீடியோ' காட்சியும் இங்கே உள்ள 'மினி' அரங்கில் நடக்கிறது.

**வறட்சியில் செய்த புரட்சி !**

அங்கே, யானை ஒன்று வரவேற்க, 'பாண்டு' இசை முழங்க, வரிசையாக உள்ளே சென்று



சென்னை தீவுத் திடலில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் அமைந்துள்ள அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியைமேதகு தமிழக ஆளுநர் திரு. சாதிக் அலி அவர்கள் ஜனவரி 9-ந் தேதி அன்று திறந்து வைத்தார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார். சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. துரைகோவிந்தராசன் அவர்கள் வரவேற்றார். நிர்வாக இயக்குநர் திரு ஜே. ஆர். ராமநாதன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் நன்றி கூறினார்.

தமிழ்நாடு ஆளுநர் திரு.சாதிக் அலி அவர்கள் சுற்றுலாப் பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறியதாவது:

''இன்றைக்குச் சுற்றுலாத் துறை உலகில் பெரிய தொழிலாக விளங்கி வருகிறது. இந்தியாவுக்கு ஆரம்ப காலத்தில் சில இலட்சம் பேர்களே வந்தனர். இப்போது சராசரி ஆண்டுக்கு 30 இலட்சத்துக்கும் மேலாக வருகின்றனர். வெளிநாட்டினரின் வருகையால் பல இலட்சம் டாலர்கள் அந்நியச் செலாவணி வருகிறது.

''உலகத்திலேயே சுற்றுலாத் துறையில் இந்தியா முக்கியத்துவம் வகிக்கிறது. இந்தியாவைப் பற்றி வெளிநாடுகளில் நாம் இன்னும் பிரச்சாரம் அதிக அளவில் செய்ய வேண்டும். சுற்றுலாத் துறை வளர்ச்சியடைய இது பெரிதும் உதவும்.''

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தலைமையுரையாற்றுகையில் கூறியதாவது:

''கடந்த 9 ஆண்டுக் காலமாக நட்டத்தில் இயங்கி வந்த சுற்றுலாக் கழகம், முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இப்போது இழப்பை ஈடு செய்து இலாபத்தில் இயங்கி வருகிறது. முன்பு இந்திய துணைக் கண்டத்தில் முக்கியமான இடம் காஷ்மீர் என்று








கருதி இருந்தார்கள். அதைவிட முக்கியமான இடங்கள் தென்னிந்தியாவில் இருக்கின்றன என்பதை இப்போது உணர்ந்திருக்கிறார்கள்.

''எந்தத் தொழிலும் முதலீடு செய்தால்தான் அன்னியச் செலாவணியைப் பெற முடியும். ஆனால் சுற்றுலாத்துறை குறைந்த செலவிலே அதிக அளவு அன்னியச் செலாவணியை ஈட்டித் தருவதாகும். தமிழகத்திலுள்ள சுற்றுலா இடங்கள் வெளிநாடுகளுக்குப் பிரச்சாரம் செய்யப்படாமலிருந்தது. 'தென்னகம் நோக்கி' என்ற திட்டத்தின் மூலம் வேறு மாநில பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களை அழைத்து தமிழகத்தைச் சுற்றிக் காட்டி, மற்றவர்களும் தமிழகத்தின் சுற்றுலா இடங்களை அறியும்படி செய்திருக்கிறோம்.

''மாமல்லபுரம், ராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய சுற்றுலாத் தலங்களை விரிவாக்கவும் நவீன ஏற்பாடுகள் செய்யவும் 'மாஸ்டர் பிளான்' தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். 52 கோடி ரூபாய் செலவில் திட்டப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்திய பிறகு, தமிழகத்தில் ஏராளமான அளவில் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள்.

''மத்திய அரசு, சுற்றுலாத் துறையில் ஓரளவு கவனம் செலுத்தி வருகிறது. மத்திய அரசு மாநிலத்தின் மக்கள் தொகையைக் கணக்கில்கொண்டு பணம் ஒதுக்கக்கூடாது. எந்தெந்த மாநிலங்களில் சுற்றுலா வாய்ப்பு அதிகமாக இருக்கிறதோ, அதற்கு ஏற்றபடி பணம் ஒதுக்க வேண்டும். இதை நாங்கள் மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகிறோம்.

''மாநில அரசு தன்னால் இயன்ற அளவு சுற்றுலாத் துறைக்குச் செலவு தொகையை ஒதுக்கிச் செலவிட்டு வருகிறது. முன்பெல்லாம் தனியார் பொருட்காட்சி நடத்தினார்கள். அதில் சூதாட்டங்கள் நடத்தப்பட்டன. முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு பொருட்காட்சியை அரசே நடத்தி வருகிறது. பொருட்காட்சியை வெறும் வியாபாரப் பொருட்காட்சியாக இல்லாமல், அறிவு நிலையமாகவும், விளக்கக் கூடமாகவும் அமையும் வகையில் நடத்தி வருகிறோம்.

''பொருட்காட்சியில் தனியார் புகுந்து விளையாட்டு என்ற பெயரில் சூதாட்டம் நடத்துவதை அரசு தடை செய்தது. சூதாட்டமே கூடாது என்பது அரசின் எண்ணம். ஆனால், சட்டத்தைத் துணையாக வைத்துக் கொண்டு அரசுடன் மோதிப்பார்க்கிறார்கள். சட்டத்தின் மூலம் மக்களைப் பாதுகாக்க வேண்டும். அப்படி முடியாவிட்டால் சட்டத்தைத் திருத்த வேண்டும். தமிழக அரசு இதைக் கருத்தில் கொண்டு சட்டம் கொண்டு வரத் தயாராக இருக்கிறது.

''சுற்றுலாத் துறை மூலம் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருவதில் தமிழகம் மூன்றாவது இடத்தை வகிப்பது என்பது நமக்குப் பெருமை அளிப்பதாக இருக்கிறது.''



## பொருட்காட்சி— புதிய அம்சங்கள்

இந்த ஆண்டு பொருட்காட்சி அதிகப் பரப்பளவில் அமைந்திருப்பதுமன்றி, இது வரை நடைபெற்ற பொருட்காட்சிகளிலே சிறந்ததுமாகும். இந்தப்பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ள சில புதிய அம்சங்களாவன:-

* அரங்குகள் நல்ல எடுப்பான தோற்றமளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

* இளைஞர்களுக்கு ஆர்வ மூட்டும் வகையில் விளையாட்டுக்கள்.

* தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தினால் நடத்தப்படும் ''தமிழ்நாடு ஓட்டல்'' நல்ல திறமையான சமையற்காரர்களால் தயாரிக்கப்பட்ட தரமான பலகாரங்களைக் குறைந்த பட்ச லாபத்தில் பொதுமக்களுக்கு விற்பனை செய்கின்றது. முதல் 12 தினங்களில் ரூ. 31,895/- விற்பனையடைந்திருப்பதற்குக் காரணம் பொதுமக்கள் ஆதரவு கொடுத்திருப்பதே ஆகும். மேலும் இந்தச் சிற்றுண்டி விடுதி தரத்திற்கும் திறமைக்கும் எடுத்துக் காட்டாக உள்ளது.

* அண்ணா கலையரங்கில் நடைபெறும் கலா நிகழ்ச்சிகளைத் தமிழ்நாடு ஓட்டலிலுள்ள பூங்காவில் அமைக்கப்பட்டிருக்கும் டி.வி. யில் அப்படியே காண்பிக்கப்படுகிறது.

* பொருட்காட்சியில் அனேக இடங்களில் சென்னைத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் காண்பிக்கப்படுகின்றன.

பொதுமக்கள் சிரமப் பரிகாரம் செய்து கொள்ளவும், சிற்றுண்டி அருந்தவும் ஆங்காங்கே வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.




# முதன்முதலாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் அரசுப் பொருட்காட்சி

"தமிழ்நாட்டில் ஒலி-ஒளிக் காட்சியை மகாபலிபுரத்தில் அமைக்கவேண்டும் என்று மத்திய அரசிடம் கேட்டு இருந்தோம். முதலில் அதை மறுத்துவிட்ட மத்திய அரசு, இப்போது அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு, செலவில் பாதியைத் தருவதாகக் கூறி 25 இலட்சம் ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். அதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அங்கு ஒலி-ஒளிக் காட்சிக்கு ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாய் வரை செலவாகும்.

''சென்னை தீவுத் திடலில் நடக்கும் இந்தப் பொருட்காட்சி மட்டும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்படுகிறது. மதுரை, திருச்சி, கோவை சேலம் ஆகிய இடங்களில் நடக்கும் பொருட்காட்சியெல்லாம் அரசின் செய்தித்துறை மூலம் நடத்தப்படுகிறது. கூடுதலாக, வேறு சில மாவட்டத் தலை நகரங்களிலும் அரசு செய்தித் துறை மூலமாக பொருட்காட்சிகள் நடத்தப்படும். அதன் முதல்படியாக, ஜனவரி 24-ந் தேதி வட ஆர்க்காடு மாவட்டம் வேலூரில் செய்தித்துறை மூலம் பொருட்காட்சி தொடங்கப்படுகிறது. வட ஆர்க்காட்டிலேயே முதல் பெரிய பொருட்காட்சி இதுதான்.

''சென்னையில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் இங்கு நடக்கும் பொருட்காட்சியில், ஆண்டுக்கு ஆண்டு பார்வையாளரின் எண்ணிக்கையும் வருமானமும் அதிகரித்துக் கொண்டே போகிறது. கடந்த ஆண்டில் இலாபம் மட்டும் 11 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய். இந்த ஆண்டு தொடங்கி முதல் 12 நாட்களுக்குள்ளேயே 3.5 இலட்சம் ரூபாய் வருமானம் வந்துள்ளது.

''இந்த இடத்தில் நிரந்தரப் பொருட்காட்சி அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு திரு எம். ஜி. ஆர். அவர்கள் தெரிவித்தபடி கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால், நிரந்தரப் பொருட்காட்சிக்காக இங்கு எந்தெந்த இடத்தில் எந்த மண்டபங்கள் சாலை வசதி, கலை நிகழ்ச்சிகள் வசதிகள் போன்றவற்றை வரைபடம் போட்டு, அரசுக்கு அனுப்ப இசைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்குக் கிடைக்கும் இலாபத்தை இங்குக் கட்டடங்களாகக் கட்டினால் மூன்று அல்லது நான்கு ஆண்டில் நிரந்தரப் பொருட்காட்சி அமைந்துவிடும்.''

**[21.1.82 அன்று சென்னைத் தீவுத் திடலில், பொருட்காட்சியில் நடந்த செய்தியாளர் கூட்டத்தில் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள்]**

பார்க்கிறார்களே அது என்ன அரங்கம்?

அதுதான் சென்னை மாநகராட்சி! வெப்பத் தூர் கலவை இயந்திரத்தின் மாதிரி ஒன்றும், நோய்த் தடுப்பு முறைகளும் நமக்குப் பயன் தருவனவாகும். மாணவமணிகள் செய்த பல்வேறு பொருள்களும் காட்சிக்கு வைக்கப் பெற்றுள்ளன. அழகிய பஞ்சவர்ணக்கிளி ஒன்றையும் இங்கே நாம் பார்த்து மகிழலாம்.

அடுத்து, நம் கண்ணில்படுவது சென்னைக் குடிநீர்(Metro Water).

பூண்டி, சோழவரம், புழலேரியின் வண்ணப் படங்களைப் பார்த்துச் செல்கின்ற நம்மை, 'வறட்சியில் செய்த புரட்சி' என்ற பகுதி வெகுவாகக் கவர்கிறது. 'மேல் நீர் நில நீர் ஒருங்கிணைந்து பயன்படுத்தும் திட்டம்' மற்றும் நேசப்பாக்கம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகிய மாதிரி வடிவங்களையும் பார்க்கலாம் இங்கே.

அரசினர் கலைத் தொழில் கல்லூரியின் கைவண்ணத்தைக் காட்டும் அரங்கம்தான் தொழில் நுட்பக் கல்வி அரங்கு.

**தரமான பொருள்களுக்கு...**

தமிழ்நாடு சிமெண்ட் ஆலை, கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் மாதிரி வடிவங்களைக் கொண்டதுதான் 'டிட்கோ'-தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம். இதில் கங்கப்பா பேப்பர் மில்ஸ், ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன் உற்பத்தித் திறனும், இதற்கான திட்ட முதலீடு ரூ. 544 இலட்சமும், இதனால் 425 பேர்களுக்கு வேலை வாய்ப்பு என்றும், இது தென்னார்க்காடு மாவட்டம் பண்ருட்டியில் துவங்கப்படுகிறது என்றும் - தகவலைப் படித்து மகிழ்கிறோம் நாம்.

கலைவண்ணம் மிக்கப்பொருள்களை வாங்குவதற்கு 'பூம்புகார்' விற்பனைக் கூடமும், பட்டுத் தொழிலின மேன்மையினை அறிந்து கொள்வதற்குப் பட்டு வளர்ச்சித்துறையின் அரங்கமும் நமக்கு உதவுகின்றன.

தரமான பொருள்களைத் தருகின்ற 'டான்சி' காட்சிக் கூடத்தில்—

அழகிய பீரோக்கள், தோல் பொருட்கள், இயந்திரங்கள், நவீன வடிவமைப்புள்ள 'மயூரம் மோபெட்' மோட்டார் சைக்கிள் மரச்சாமான்கள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**ஏழை எளியவர்களுக்கு**

குடிசை மாற்று வாரிய அரங்கத்துக்குள் நுழைகிறோம். ஏழை எளியவர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிகளின் அழகிய தோற்றம், கட்டிய குடியிருப்புகள் பற்றிய தகவல்கள் முதலானவற்றைத் தெரிந்து கொள்கிறோம்.

சமூக நலத்துறை அரங்கில், ஊனமுற்றவர்களுக்கான திட்டங்கள், குழந்தைகள் நலம், மகளிர் முன்னேற்றம் விதவைத் திருமணம் முதலான விவரங்களைத் தெரிந்து கொள்கிறோம்.

பள்ளி கல்லூரிகளுக்கான பாட நூல்களை வெளியிடும் பாட நூல்

நிறுவன அரங்கில், பல்வேறு நூல்கள் பார்வைக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன.

நகர் ஊரமைப்பு இயக்ககம், குடும்பநலத்துறை, நல்வாழ்வுத் துறை ஆகிய காட்சி அரங்குகளில் அவை ஆற்றும் அரும்பணிகள், புள்ளி விவரங்கள் முதலானவை கொடுக்கப்பட்டுள்ளன.

**ஓட்டல் தமிழ்நாடு...**

இந்திய மருத்துவத்துறை அரங்கில், சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி ஆகியவற்றின் மருத்துவமுறைகள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழகக் கைவினைஞர்களின் கைவண்ணத்தைக் காட்டும் கதர் கிராமக் கைத்தொழில் வாரிய அரங்கும், தொழிலாளர் நலன்களைத் தெரிவிக்கும் தொழிலாளர் துறை அரங்கும் நம்மைக் கவர்கின்றன.

சுற்றி வந்ததில் சற்று களைப்பாக இருந்திருக்கும் அல்லவா? அதோ! 'ஓட்டல் தமிழ்நாடு'க்குப் போகலாமா?

அங்குக் குறைந்த விலையில் காபி, டீ, மற்றும் சுவையான பலகார வகைகள் விற்பது மன நிறைவைத் தருகிறது.

**கருத்தைக் கவரும் காட்சிகள்:**

ஆவின் அரங்கும், ஸ்பிக் அரங்கும் அவை ஆற்றும் அரும்பணிகளை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை—பிற்பட்டோர் நலத்துறை அரங்கில், இலவசக் கருவிகள் வழங்குதல், கலப்புத் திருமணம் முதலான புள்ளி விவரங்களைத் தெரிந்து கொள்கிறோம்.

மின்சார வாரிய அரங்கில்—தமிழ்நாட்டில் மின் இணைப்பின் வரை படமும், மேட்டூர், எண்ணூர், சுருளியாறு மின் நிலையங்களின் படங்களும், காடம்பாறை நீரேற்று புனல்மின் திட்டம், கீழ் மேட்டூர் புனல் மின் திட்டம், மின் வசதி பெற்ற கிராமம், தூத்துக்குடி அனல் மின் திட்டம் ஆகியவற்றின் மாதிரி வடிவங்களும் நம் கருத்தைக் கவர்கின்றன.

பாரதி மணி மண்டபம்-இதுதான் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் காட்சி அரங்கு, மகா கவி பாரதியின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், அவர்தம் கொள்கைகளையும் விளக்கிச் சொல்கிற வகையில் ஓர் அரிய தொகுப்பாகத் திகழ்கிறது இது. அரங்கு முகப்பு எட்டயபுரம் பாரதி மணிமண்டப வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கில்தான் மாலைவேளையில் திரைப்படமும் காட்டப்படுகிறது. அவற்றில் காட்டப்பட்ட ஒரு படம்தான் பாம்பு பிடிக்கிற காட்சி.

தொழில் துறை அரங்கு, தமிழக அரசு தொழிற் துறை நிறுவனங்களுக்கு அளிக்கும் பல்வேறு உதவிகளை விளக்குவதாய் அமைந்துள்ளது. பாரதியின் பாட்டு வரிகளைக் காட்சிக்குக் காட்சி விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

தென்னிந்திய ரயில்வே அரங்கில், ரயில் இன்ஜின்களின் மாதிரிகளும் பயணிகளுக்கான வசதிகளும் உள்ளன.

கோயிலுக்குள் நுழைந்துவிட்டோமா என்ற பிரமை ஏற்படுகிறது-அறநிலையத்துறை அரங்கில் நுழையும் போது! தமிழகத் திருக்கோயில்கள், புதிதாகக் கட்டப்பட்ட கோயில்கள், புதுப்பிக்கின்ற கோயில்கள், தமிழகத் திருவிழாக்கள், தமிழகக் கோயில் விக்கிரகங்கள் சிற்பங்கள் ஆகியவை அற்புதமாக இங்கே விளக்கப்பட்டுள்ளன.

பாம்புப் பண்ணைக்குள் நுழைகிறோம். ஒரு விசேஷம்—ராஜ நாகம் இதில் இடம் பெற்றுள்ளது தான்.

பரம்பிக்குளம் அணை, மின் சக்தியினால், தானே இயங்கும் அணைக் கதவு, பரப்பலாறு அணை—இவற்றின் மாதிரிகளையும், அதிசய சங்கிலித் தொடர் ஒன்றையும் பொதுப்பணித்துறை அரங்கம் காட்டுகிறது.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம்-இவர்களுக்கான மாதிரி வீடு ஒன்றும் தனியே கட்டப்பட்டுள்ளது, மீன்துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஆகியவை பயனுள்ள தகவல்களை வழங்குகின்றன.

வேளாண்மை அரங்கில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நகரும் நீர்த் தெளிப்பான் (Sprinkler Irrigation) முறை - விவசாயக் கருவி ஒன்று பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

தானிய சேமிப்பு இயக்ககம், வேலை வாய்ப்புப் பயிற்சித்துறை நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை கோட்டூர்புரம் பாலம் ஆகிய அரங்குகள் மக்களைத் தம்பால் ஈர்க்கின்றன.

கூட்டுறவு-அதுவே நாட்டுயர்வு என்பதை விளக்குகிறது 'கூட்டுறவு' அரங்கம்.

ஊரக வளர்ச்சி அரங்கம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியவற்றின் அழகிய புகைப்படங்கள், அவை ஆற்றும் அரிய பணிகளை விளக்குவதாக இருந்தன.

வனத்துறையின் முகப்பே அழகாக இருக்கிறது. தமிழகத்தின் வனவிலங்குப் புகலிடங்கள், காட்டின் பயன்கள் முதலிய விவரங்களை நாம் அங்கு தெரிந்து கொள்கிறோம்.

மதுரையில் ஒரு பகுதியாக உள்ள கோவலன் பொட்டலில் தொல் பொருள் ஆய்வுத்துறை நிகழ்த்திய அகழ்வாய்வில், நான்கு முதுமக்கள் தாழிகள் கண்டு எடுக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றில் இறந்த மனிதனைப் புதைத்த எலும்புக்கூடு இருந்தது. அது, தொல்பொருள் ஆய்வுத்துறை அரங்கில் வைக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வடிகால் வாரியம் மாநகருக்குத் தண்ணீர் வழங்கும் பணிமுறைகளையும், கழிவு நீர் அகற்றப்படும் முறைகளையும் சுட்டிக் காட்டுகிறது.

குடியிருப்புகள், வீட்டுமனைகள் வழங்கி, வீட்டுப் பிரச்சினையைத் தீர்த்திடும் வீட்டு வசதி வாரியத்தின் பணிகளை, பட விளக்கத்துடன் கூறுகிறது இவ்வரங்கம்.

இவை மட்டுமா?

கோ-ஆப்டெக்ஸ், அரியானா, உத்தரப் பிரதேசம், அசாம் ஆகிய மாநிலக் கைத்தறி ஆடைக் கடைகள், பலவித கலைபொருள்களை விற்பனை செய்யும் அங்காடிகள், இமாசலப் பிரதேசம், அரியானா சுற்றுலாத் துறை அரங்குகள், நாய் கண்காட்சி, தோட்டக் கலைக் கண்காட்சி உணவுக் கண்காட்சி, ராட்சத ராட்டினம், அழகிய பூங்கா, சிறுவர் ரயில் அப்பப்பா! எத்தனை எத்தனைக் காட்சிகள்!

பொருட்காட்சியில், பாம்பு முட்டைக்குள் ஓவியம் வரையும் ஓவியரையும், எதிர்காலத்தைக் கணிக்கும் சோதிடரையும் கூடக் காணலாம்!

படித்துப் பட்டம் பெற்று வேலை இல்லாத இளைஞர்கள் நடத்தும் ஒரு கடையில்தான், நொடியில் தண்ணீரைச் சூடாக்கும் சிறிய கருவியை விற்பனைக்கு வைத்திருக்கிறார்கள்.

இவையன்றி நாட்டுடைமையாக்கப்பட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, மற்றும் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.

வெறும் பொழுதுபோக்குக்காக மட்டுமின்றி, அறிவுக்கு விருந்தூட்டும் அரிய பொருட்காட்சியாகவும் இந்தச் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி விளங்குகிறது என்றால் அது உண்மை. வெறும் புகழ்ச்சி யில்லை!



# நெஞ்சில் நிலைத்த கவிஞர்

ஓதுகின்ற நூல்கஎளலாம் உரைக்கும் தெய்வம்
ஒன்றெனவே உணர்ந்திங்கு மாந்தர்க் குள்ளே
பேதமில்லாப் பெருவாழ்வு மலர வேண்டும்!
பெண்ணடிமை நாட்டினிலே தீர வேண்டும்!
சாதியென்னும் கொடுமையினைத் தகர்க்க வேண்டும்;
சார்ந்துவரும் வறுமையினை ஒழிக்க வேண்டும்
வீதியெல்லாம் தமிழ்முழக்கம் கேட்க வேண்டும்
வெளிநாட்டார் நமையெல்லாம் மதிக்க வேண்டும்.

வானகத்துப் பெருவாழ்வின், ஈன்றெ டுத்த
வளநாட்டின் விடுதலைதான் வேண்டும்; என்றும்
மானமெனச் சொன்னாலே அடிமை யில்லா
மறவாழ்வு தானென்று சொல்ல வேண்டும்;
ஞானமலர் பூத்திட்ட பூமி இ∴தை
ஞாலத்தில் தலைநிமிரச் செய்த லொன்றே
மானிடத்தின் பயனென்று முழக்க மிட்ட
மாகவிஞன் பாரதிக்கு ஈடே இல்லை.

மெல்லத்தான் தமிழிங்கு சாகும்; அந்த
மேலையின மொழியெங்கும் ஓங்கும் என்றே
புல்லர்கள் பிதற்றியுலா வந்த நாளில்
பொங்கிவரும் கதிராக வந்த நல்லோன்!
எல்லாமே இயலுமென்றன் மொழியால்; வையம்
எங்கணுமே இல்லையிதற்(கு) ஈடே யென்று
வெல்லமென இனிக்கின்ற தமிழால் உள்ளம்
வீறுகொளச் செய்திட்டான் கவிதை வேந்தன்.

சொற்புதிதாயப் பொருள்புதிதாய்ப் படைக்க வேண்டும்
சுடரணிகள் தமிழுக்குச் சேர்க்க வேண்டும்
நற்புலமைத் திறத்தாலே நாளு மிந்த
நானிலத்தை நான்ஆள வேண்டு மென்றான்!
தற்பெருமைக் கவிச்செருக்கா? இல்லை; இல்லை;
தணியாத தமிழ்க்காதல் ஒளிவீச் சன்றோ?
நிற்கின்றார் தமிழறிந்தார் நெஞ்ச மெல்லாம்
நிலைத்தநற் புகழுடம்பால் கவிஞர் கோமான்!

—பா. பா. சோமநாதன்

# சிந்து வெளி நாகரிகம் சில புத்தம் புதிய தகவல்கள்

—முனைவர் சாலை இளந்திரையன்

சிந்திமொழி பேசும் மக்களிடையே கிட்டிப்புள் என்னும் விளையாட்டும் அது தொடர்பான சில தமிழ்ச் சொற்களும் வழக்கத்தில் இருந்தன. ''மோகஞ்சோதரோ ஆரப்பா பழந்திராவிடப் பகுதியில் வழங்கிய இந்த (கிட்டிப்புள்) விளையாட்டு—அந்த நகரங்கள் அழிந்து மக்களில் சில பேர் அங்கங்கே தங்கி நின்றதால் பின்னால் வந்த சிந்தி மக்களிடையே பரவியிருக்கலாம்' என்றும் ''இதைப் பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சிகள்மேற் கொண்டால், இன்னும் இழுபறியாக இருந்துவரும் சிந்துவெளி நாகரிகம் பற்றிய செய்திகள் விளக்கம் பெறக்கூட இதிலே வாய்ப்பு உள்ளது என்றும் தெரிகிறது. பாகிஸ்தான் அறிஞர்கள் இரண்டுபேர் நிகழ்த்தி வந்த ஆராய்ச்சியால், நான் எதிர்பார்த்தபடியே சிந்துவெளி நாகரிகம் பற்றிய ஒரு முக்கியமான புதுச்செய்தி இப்போது கிடைத்துள்ளது.

**மோகஞ்சோதரோ வாழ்கிறது!**

மோகஞ்சோதரோ ஆரப்பா நாகரிகம் என்பது, என்றோ போனஒரு வரலாற்றுச் சின்னம் என்றும் அந்த நாகரிகத்துக்கு உரிய மக்கள் முற்ற முழுக்க அழிந்து போனார்கள் என்றுமே அறிஞர்கள் இதுவரை கருதி வந்தார்கள். எனவே, அந்த இடத்துக்கு வழங்கப்பட்ட ''மோகஞ்சோதரோ'' என்ற பெயருக்கு ''அழிந்துபட்டோர் மேடு'' என்றே அறிஞர்கள் பொருள் கொடுத்துக் கொண்டார்கள். மோயென் ( Moen ) என்ற சிந்தி மொழிச் சொல்லுக்கு இறந்தவர்கள் என்பது பொருள். இந்த அடிப்படையிலே, மோகஞ்சோதரோ என்பது ''இறந்தவர் மேடு'' என்றே பொருள்பட வேண்டும் என்று கருதிய பாகிஸ்தான் அரசாங்கமும், 1960 முதல் மோகஞ்சோதரோ (Mohenjodaro) என்ற சொல்லை மோயெஞ்சோதரோ (Moenjodaro) என்று தனது ஆவணங்களில் மாற்றிக் கொண்டது!

ஆனால்,— மோகஞ்சோதரோ என்பது இறந்தோர் மேடுஅல்ல, ''மோகன'' இனத்தவர்களின் மேடு என்கிற புதிய செய்தி, இப்போது வெளிப்பட்டுள்ளது. அதாவது, மோகஞ்சோதரோ பகுதிக்கு அருகிலேயே இப்போது வாழ்ந்துவரும் மோகன இனத்தவர்கள், அந்தப் பழைய சிந்துவெளி மோகஞ்சோதரோ நாகரிக மக்களின் வழித்தோன்றல்களாக இருக்கக் கூடும் என்ற உண்மை இப்போது வெளிப்பட்டு வருகிறது.

''மோகன என்பது ஓர் இனத்தவர்களின் பெயர்; ஜோதரோ என்பது மேடு. எனவே, மோகன ஜோதரோ (மோகன்ஜோதரோ) என்பது இந்த மக்களின் பெயரால் வழங்கும் மேடு'' என்ற அடிப்படையை மட்டும் வைத்துக் கொண்டு, இந்த அறிஞர்கள், இந்தப் புதிய முடிவுக்கு வரவில்லை. இந்த மக்களிடையே வழங்கி வரும் மொழியிலே உள்ள சொற்கள், அவர்களின் பழக்க வழக்கப் பண்பாடுகள் முதலியவற்றிலே புலப்பட்டுத் தெரியும். சிந்துவெளி நாகரிகக் கூறுகளைக் கொண்டே அவர்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இதோ, ஆதாரம்!

மோகன இனத்து மக்கள் இப்போது சிந்திமொழியையே பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் பேசும் சிந்திமொழிக்கும் ஏனைய சிந்திக்காரர்கள் பேசும் சிந்தி மொழிக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. இவர்கள் பேசுகின்ற மொழி —சிந்தி மொழியின் ஒரு கிளைமொழி அல்லது இடமொழி (ரீஜனல் டயலக்ட்) என்று சொல்ல முடியாதபடி,—சிந்து மொழியில் இல்லாத பல்வேறு சொற்களைக் கொண்டதாக இந்த மொழி உள்ளது. பழக்க வழக்கங்களிலும், மோகன இனத்து மக்கள், அண்டை அயலில் உள்ள பிற இனத்து மக்களிடமிருந்து பெரிதாக வேறுபடுகிறார்கள்.

அந்தப் பகுதியில் உள்ள ஏனைய கிராமிய மக்கள், பயிர்த்தொழில் குடிசைத் தொழில்கள் முதலியவற்றில் ஈடுபட்டிருக்கிறார்கள். மோகன இனத்தவர்களோ, இவைகளை விட, மீன் பிடித்தல் தொழிலிலேயே அதிகமாக ஈடுபாடு காட்டுகிறார்கள். மீன்பிடி இல்லாத காலங்களில் கூட, மற்றவர்களைப் போல வேறு தொழில்களில் கவனம் செலுத்தாமல், நீர்ப்பறவைகளை வேட்டையாடும் தொழிலிலேயே அவர்கள் ஈடுபடுகிறார்கள். அது மட்டுமல்ல; மோகன இனத்து மக்களிலே பெரும்பாலோர், இன்றைக்கும் ஓடக்காரர்களாகவும் படகோட்டிகளாகவுமே தொழில் புரிகிறார்கள். பழைய சிந்துவெளி மக்கள் புகழ் வாய்ந்த கடலோடிகளாக இருந்தார்கள் என்பதை இதனோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மோகன மக்கள் அந்தப் பழைய மோகஞ்சோதரே மக்களின் வழித்தோன்றல்களாக இருக்கக் கூடும் என்கிற எண்ணம் உறுதியாகிறது.

அப்பால்,—மோகனர்கள் பயன்படுத்தும் படகுகள், இப்போது உள்ள ஏனைய படகுகளைப் போல முதுகு குவிந்தவைகளாக இல்லை; பழங்காலத்துப்படகுகள் போன்ற தட்டையான அடிப்பாகங்களைக் கொண்ட படகு

களையே இவர்கள் பயன்படுத்து கிறார்கள். இந்தப் படகுகளின் தட்டையான அடிப்பாகமும், மோகஞ்சோதரோ அகழ்பொருள் ஆய்வில் கண்டெடுக்கப்பட் டுள்ள களிமண் முத்திரைகளில் காணப்படும் படகுகளின் அடிப் பாகத்தையே ஒத்திருக்கிறது. சிந்துநதியின் வேறு பகுதிகளில் மற்றையோர் ஓட்டும் படகு களுக்கு இல்லாத இந்த அமைப்பு (சிந்து நதியில்) சுக்கூர் அணைக் கும் மஞ்சரர் ஏரிக்கும் இடைப் பட்ட பகுதியில் மோகன இன மக்கள் ஓட்டும் படகுகளில் மட்டும்தான் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மோகனர்கள் ஆண்டுதோறும் சிந்துநதியிலேயேநீர் விழா ஒன்றை நடத்துகிறார்கள்; மோகஞ் சோதரோ அகழ்வாய்வுப் பகு திக்கு அருகிலேயே இந்த விழா நடைபெறுகிறது. இந்த விழா வில் நிகழ்கிற படகுப் போட்டி, பாடல்கள், நடனங்கள், நெடுந் தூர ஆழநீர் நீச்சல் போட்டி— அனைத்தும், பழைய மோகஞ் சோதரோ மக்களின் கடற் பயணக் கலைத் தேர்ச்சியையே நமக்கு நினைவூட்டுகின்றன.

அந்நியர்களின் குறிப்பு என்ற வகையிலும் இதற்கு ஓர் ஆதாரம் கிடைக்கிறது: மொசபொட் டோமியாவைச் சேர்ந்தவர்கள், மோகஞ்சோதரோப் பேரரசை ''மெலுக அரசு'' என்றே குறிப் பிட்டு வந்துள்ளார்கள். இந்தப் பெயரும் மோகன என்பதோடு ஓரளவு ஒலி ஒப்புமை உடைய தாக இருக்கிறது. மோகஞ் சோதரோப் பகுதியில் இன்று வாழ்ந்து வரும் மோகன(ர்) என் னும் தனி இனத்தவர் மோகஞ் சோதரோ மக்களின் வழி மக்க ளாக இருக்கலாமோ என்ற ஊகம் எழுவதற்கு இதுவும் ஒரு காரணம். மோகன என்ற சொல்லே மொச பொட்டோமியர் வாயில் மெலு என்று வழங்கி வருகிறது. ஒரு மொழிக்குரிய மக்களின் சொற் களை அப்படியே உச்சரிக்க முடி யாத வேற்று மொழிக்காரர்கள், தங்கள் ஒலிமுறைக்கு ஏற்ற வித மாக அவர்களின் பெயரை மாற் றிச் சொல்வது வழக்கம்தானே?

## தமிழ்தானோ?

மோகன மக்களின் பழக்க வழக்கப் பண்பாடுகள் மோகஞ் சோதரோ நாகரிகத்தோடு ஒத்தி ருப்பதாகக் காண்கிறது; மோக னர்களின் மொழியில், (இப் போது அவர்கள் பேசிவரும்) சிந்திமொழியில் இல்லாத சொற் களும் தொடர்களும் வழங்கு வதாகவும் இந்த ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அந்தச் சொற்கள், பாகிஸ்தானிலோ அதன் அண்மையிலோ வழங்கும் மொழிகளில் உள்ள சொற்களாகத் தோன்றவில்லை. அப்படி இருக்கு மானால், அந்த அறிஞர்களே எளிதில் கண்டு சொல்லியிருப் பார்கள் அல்லவா? அப்படிச் செய்யாமல், ''ஏதேதோ வேறு வேறு சொற்கள்,—தொடர்கள்' என்று அவர்கள் சொல்லுவதைப் பார்த்தால், ''அந்தச் சொற்கள் (அந்தப் பகுதியினருக்கு அறி முகம் இல்லாத) மூலத் திராவி டத்தின் மூத்த சொற்களாக இருக்குமோ?'' என்ற அய்யம் நமக்கு ஏற்படுகிறது. இவர்களு டைய ஏனைய பழக்க வழக்கங்கள் பழைய சிந்துவெளி மக்களின் பழக்க வழக்கங்களின் மிச்சசொச் சங்களாகத் தோன்றுவதால்,— அவர்களுடைய இன்றையமொழி யில் கலந்து வழங்கும் சொற் களும் தொடர்களும்கூடப்பழைய சிந்துவெளியாரின் மொழியைச் சேர்ந்தவைகளாக இருக்கலாம் அல்லவா?

சப்பானிலும், ஆப்பிரிக்கா விலும், நமது தமிழின் சொற் களும் பழக்க வழக்கங்களும் பரவிக் கிடக்கும்போது,—ஒரு காலத்தில் ஒரே நாடாக இருந்து இப்போது பாகிஸ்தான் என்று பிரிக்கப்பட்டுள்ள இப்பகுதியில் நமது தமிழின் சொற்கள் பரவி இருப்பதிலே வியப்பு ஒன்றும் இல்லை. மேலும், சிந்திமொழி யிலே (கிட்டிப்புள்விளையாட்டுத் தொடர்பான) சில தமிழ்ச் சொற்கள் வழங்கி வருவதை ஏற்கெனவே கண்டுள்ளோம். மோகஞ்சோதரோ அருகிலே (சிந்திமொழி பேசிக்கொண்டு) வாழுகிற மோகன இனத்தவர் வழங்கும் ''அந்நியச் சொற்களும் தொடர்களும்'' தமிழ் திராவிட மொழிக்கு உரியனவாக இருந் தால்,—தமிழ்ச் சொற்கள் தெற் கிலிருந்து வடக்கே (பிற்காலத் தில்) சென்றவை அல்ல,—அவை சிந்துவெளித் தமிழ் நாகரிகத் தால் அக்கம் பக்கத்தாருக்கு அள்ளி வழங்கப்பட்ட சொற் செல்வங்கள் என்பது உறுதியாகி விடும் அல்லவா?



## ஆராய்வோம்

பழமை வாய்ந்த தமிழின் சீரிய வரலாற்றுக்கான மூல ஆதாரங்கள், இப்படி, எங்கோ எங்கோ முகம் காட்டுகின்றன. திராவிடக் குடும்பத்தைச்சேர்ந்த சிற்சில மொழிகள், இந்தியா வுக்கு அப்பாலுள்ள பகுதிகளில் வழங்கிவரும் செய்தியும் ஏற் கனவே கிடைத்துள்ளது. மாநில எல்லையும் நாட்டு எல்லையும் கடந்து, எங்கெங்கோ ஒலிக்கும் இந்த நல்லோசைகளைச் செவி மடுத்து மகிழ்வதோடு, இவை களின் அடிப்படையில், உலகு தழுவிய ஒரு தமிழாராய்ச்சிக் கும் தமிழக அரசு திட்டமிட வேண்டும்.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

## 23—12—81

விதவைப் பெண்களின் மகள்களுக்குத் திருமணத்திற்குத் தாலி செய்ய அரசு 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது என்று மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 24—12—81

தொழிற்சாலைகள் நிரம்பிய இடங்களில் பால் விற்பனை நிலையம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்கள்

## 26—12—81

சுற்றுலா மையமான மதுரைக்குப் போயிங் விமானப் போக்கு வரத்தைத் தொடங்க வேண்டுமென மத்திய அரசுக்கு மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தார்கள். இதையடுத்து மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் இவ்விமான போக்குவரத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது.

## 31—12—81

இந்தியாவிலேயே ஏழைகளுக்கு நிலம் அளிப்பதில் தமிழகம் முதலிடம் பெற்றிருக்கிறது என்றும் தமிழ் நாட்டில் மட்டும் 3 இலட்சம் பேருக்கு நிலம் வழங்கப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. ராஜா முகமது அவர்கள் அறிவித்தார்கள்

## 2—1—82

வெள்ளம் வருகிற போதும், புயல் வருகிறபோதும் இது பற்றி செய்திகளை ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்குத் தெரிவிப்பதற்காக ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் 'டெலிபிரிண்டர்' என்னும் கருவி கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும் ஒவ்வொரு வட்டாட்சியாளர்களுக்கும் அவர்தம் கடமைகளைச் சரிவர செய்யும் வகையில் ஜீப் கொடுக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்கள்.

தமிழ்நாட்டு முடக்குவாத நோயாளிகள் சங்கத்திற்குச் சொந்த இடமும் பேருந்தும் கொடுக்க ஏற்பாடு செய்து 75 ஆயிரம் ரூபாய் நிதி உதவியும் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் அளித்துள்ளார்கள்.

## 5—1—82

கிராமப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகத் தன்னிறைவுத் திட்ட அடிப்படையின் இரண்டாவது கட்டமாக 150 ஒன்றியங்களுக்கு 70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 7—1—82

ஏழை எளிய மக்களுக்கும் உடல் ஊன முற்றோருக்கும் மருத்துவ சோதனைகள் நடத்தி அவர்களுக்கு உதவி அளிப்பதில் தமிழக அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இம்மருத்துவப் பணியில் 250 மருத்துவர்கள் முனைந்து ஈடுபட்டுள்ளனர். இதனால் 4 இலட்சம் பேர்களுக்கு மருத்துவச் சோதனை செய்யப்பட்டது. 20 ஆயிரம் உடல் ஊன முற்றோர் பலனடைந்துள்ளனர்.

## 9—1—82

புதுக்கோட்டை அருகே உள்ள ஆவுடையார் கோவில் என்னும் ஊரில் 1,25,00,000 ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தனி துணை மின்நிலையம் ஒன்றை மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் துவங்கி வைத்தார்கள். அவ்வமயம் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமையவிருக்கும் 'சிப்காட்' தொழில் இணையத்தில் ஒரு கோடி ரூபாய் செலவில் புதிதாக ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட இருக்கிறது என்றும் அது தொழில்கள் வளரப் பெருந்துணையாக இருக்கும் என்றும் அறிவித்தார்கள்.

## 11—1—82

தமிழகத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும் சிறுபான்மை மக்களுக்காகவும் தமிழக அரசு முழு அளவில் சிறப்பான முறையில் பாடுபட்டு வருகிறது என்பதை இங்குள்ள மக்களைச் சந்தித்ததிலிருந்தே நன்கு அறிந்து கொள்ளப்படுகிறது என்று மத்திய அரசின் குழு பாராட்டியுள்ளது.

மின்சார வெட்டு வராமல் இருக்க மின் உற்பத்தியைப் பெருக்கும் தீவிரத் திட்டங்களைத் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது என்றும் மின் உற்பத்தித் திட்

டங்களுக்காக 220 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்றும் மாண்புமிகு மின்சார அமைச்சர் திரு பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 12—1—82

பணியில் உள்ள திறமையான காவலர் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு அவர்கள் ஓய்வில் செல்லும்வரை சிறப்பு விருது அளிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் பகுதியில் சுமார் 5 ஆயிரம் டன் காகித உற்பத்தி செய்யக்கூடிய புதிய காகித ஆலை ஒன்று அமைக்கப்பட விருக்கிறது. சிறுதொழில் நிறுவனத்தின் சார்பில் பாலித்தின் பைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும் கூட்டுறவு முறையில் துவக்கப்பட விருக்கிறது என்று மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்கள்.

## 13—1—82

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில் தமிழகத்தில் தான் தன்னிறைவுத் திட்டம் அனைவரும் பாராட்டும் வகையில் நடந்து வருகிறது என்றும் தமிழ் நாட்டில் உள்ள 60 நகர பஞ்சாயத்துகளிலும் அடுத்த ஆண்டு தன்னிறைவுத் திட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்கள்.

## 16—1—82

தமிழ்நாட்டில் ஐந்து இலட்சம் குடிசைகளுக்கு மின்சார விளக்குகள் அளிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும்இதுவரை நாலு இலட்சத்திற்கும் மேற்பட்ட குடிசைகளுக்கு மின் விளக்குகள் அளிக்கப்பட்டுள்ளன என்றும் மாண்புமிகு மின்சார அமைச்சர் திரு ராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்கள்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் கடமை உணர்வுடன் பணியாற்றிய தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் *1981*-ஆம் ஆண்டிற்கான செயல்திறன் ஊக்க போனசாக 260 ரூபாயைத் தமிழக அரசு வழங்கியது. இதன்படி பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 6,800 தொழிலாளர்களுக்குப் பொங்கல் பரிசாக 25 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

## 19—1—82

சென்னைக் கடற்கரைக்காமராஜர்சாலையில் 40 இலட்சம் ரூபாய் செலவில் சோடியம் ஆவி விளக்குகள் போடப்படும் இதனால் கடற்கரைச் சாலை பொலிவு பெறும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்கள்.

தமிழுக்குப் பல்கலைக் கழகம் அமைத்த இந்த அரசுதான் உலகத் தமிழ்ச் சங்கத்தை விரைவில் உருவாக்கப்போக்கப் போகிறது என்றும் அதன்மூலம் வெளிநாடுகளில் தமிழைப் படிக்கும் தமிழர்களுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள தமிழ்ப் புத்தகங்களை அனுப்பப் போவதாகவும் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 7 இலட்சம் ரூபாய் செலவில் 3 பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தின் காட்டாறுகளின் குறுக்கே மனையேறி பட்டி, கடம்பங்குடி சாலையில் 2பாலங்களும் சோழகம்பட்டி இந்த-ஊர் சாலையில் ஒரு பாலமும் துரித நடவடிக்கை மூலம் கட்டிமுடிக்கும் தருவாயில் உள்ளன. இந்த பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டால் 20 கிராமத்தில்உள்ள 25 ஆயிரம் பேர் பயனடைவர்.

## 20—1—82

நகரசபைகளிலும் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆலோசித்து வருவதாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்கள்.

உற்பத்தியாளர்களுக்கும் பயன்படுத்துபவர்களுக்கும் பலன் ஏற்படும் வகையில் வருகின்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் கூட்டுறவுச் சங்கங்கள் குறித்து புதிய சட்டம் ஒன்று கொண்டுவரப்படும்என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு பொன்னையன் அவர்கள் அறிவித்தார்.

## அரசின் சலுகைகள்

தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு வீடு கட்டுவதற்குக் கடன் வழங்கும்போது, அவர்களுடைய 60 மாத ஊதியம் கடனாகக் கொடுக்கப்பட்டது. நிலம் வாங்கி வீடு கட்டுவதற்கு அல்லது கட்டிமுடித்த வீடு அல்லது நிலம் வாங்குவதற்கு அதிக அளவு ஒரு இலட்சம் ரூபாயும், ஏற்கனவே நிலம் வாங்கியிருந்தால் அதில் வீடுமட்டும் கட்டுவதற்கு அதிக அளவு 80 ஆயிரம் ரூபாயும் கடனாகக் கொடுக்கப்பட்டது. பணத்தைத் திருப்பிக்கட்டும்போது, மாத ஊதியத்தில் 3-ல் 1 பங்கும் மரணம் அல்லது ஓய்வுபெறும்போது கிடைக்கும் உதவி ஊதியத்தையும் (Gratuity) கொடுத்துவிட வேண்டும். நிலம் வைத்திருப்பவர்கள் வீடு கட்டுவதற்குக் கடன் கொடுக்கும் 80 ஆயிரம் ரூபாய் உச்ச வரம்பை 1 இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டு அதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

● விதவைகளுக்கு அரசாங்க வேலையில் சேரச் சலுகை உத்தரவுப்படி அடிப்படைப் பணிகளுக்கு மட்டும்தான் தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும். செவிலியர்க்கு உதவியாளர் என்றால், அதற்குரிய கல்வித் தகுதி வேண்டும். திண்டாடிவரும் நிலையிலுள்ள விதவைகளுக்குத் துணைக் கோட்டாட்சி அலுவலர் அல்லது பஞ்சாயத்து ஒன்றிய ஆணையாளர் தாராளமாகச் சான்றிதழ்களை வழங்கலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

# பூச்சி மருந்துகள் !



பூச்சி மருந்துகள் 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்படுத்தப்பட்டு வருகிறதென்பதை பண்டைக்காலக் கிரேக்கர், ரோமானிய, மற்றும் சீன இலக்கியங்களிலிருந்து தெரிய வருகிறது. அவ்வாறு நெடுங்காலத்திற்கு முன்னரே பூச்சிக் கொல்லிகளின் பயன்பற்றித் தெரிந்திருந்தும் அத்தகைய இரசாயனங்களைப் பயன்படுத்திப்பூச்சிகளைக்கட்டுப்படுத்தும் முறை பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தான் பெரிதும் வளர்ந்துள்ளது.

தற்கால நவீன பூச்சி மருந்துகளின் பயன்படுத்து முறைக்கு முன்னோடியாக 1867ல் அமெரிக்காவில் உருளைக் கிழங்கைச் சேதப்படுத்தும் 'கொளராடோ உருளைக்கிழங்கு வண்டுகளைக் கட்டுப்படுத்த 'பாரீஸ்கிரீஸ்' என்னும் ஒரு தாமிர பூச்சிக் கொல்லி மருந்து பயன்படுத்தப்பட்டது. பின்னர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புவோரின் சார்ந்த பூச்சிக் கொள்ளிகளும் தாவர பூச்சிக் கொள்ளிகளும் பயனுக்கு வந்தன.

1920 வாக்கில் பூச்சிக் கொல்லிகள் சாதாரணமாக எங்கும் பயன்படுத்தப்பட்டு, அதனடியாக உணவுப் பொருட்களில் எஞ்சி நிற்கும் அந்த நச்சுப் பொருட்கள் மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கும் நிலை உணரப்பட்டு அவற்றினை முறையாகப் பயன்படுத்தும் முறை பற்றி சிந்திக்கும் நிலை வளர்ந்தது. டிடிடி. என்ற செயற்கை அங்கக் கூட்டு இரசாயனத்தின் பூச்சி கொல்லும் திறன் 1939ல் ஐரோப்பாவில் கண்டறியப்பட்டு பூச்சிக் கொல்லிகளின் வளர்ச்சியிலே பெரியதொரு புரட்சியையே உண்டு பண்ணியது. அக்கண்டுபிடிப்பு இரண்டாவது உலக மகா யுத்த காலத்தை ஒட்டியமைத்ததால் போர்க்களத்தில் அதன் பயன் பெரிதும் உயர்ந்துணரப்பட்டது. அதன் விளைவாக ஆயிரக் கணக்கான அங்கக் குளோரின் மருந்துகள் சோதித்துப் பார்க்கப்பட்டு 1942ல் இங்கிலாந்திலுள்ள இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ரீஸ் லிமிடெட் என்ற நிறுவனம் பிஎச்சி எனப்படும். Benzene Hexachloride ஐ பூச்சிக் கொல்லியைக் கண்டுபிடித்தது. (Derris) என்ற தாவரப் பூச்சிக்கொல்லி உலக யுத்தத்தின் காரணத்தால் மலேயாவிலிருந்து வருதல் தடைபட்டது. அதற்கு மாற்று கண்டு பிடிக்கும் முயற்சியும் பிஎச்சி. வெளிவர காரணமாயிருந்தது. இதற்கிடையில் ஜெர்மனியில், 1944ல் கெரார்டுக்ஷராடர் என்பவர் தமது குழுவினருடன் நிக்கோட்டின் என்ற தாவரப் பூச்சிக் கொல்லிக்கு மாற்று செயற்கை மருந்து தயாரிக்கவும், போரின் பயன்படுத்த ஏற்ற நச்சு வாயு தயாரிக்கவும் ஆய்வில் ஈடுபட்டிருந்தபோது மிகவும் பயன்தரத் தக்க அங்ககப் பாஸ்பரஸ் பூச்சிக் கொல்லி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. Organo-phosphorus Compounds உயிர் பறிக்கும் வாள் ஒன்று உயிர் வளர்க்க உதவும் ஏரின் கொழுவாக மாற்றப்பட்டவாறு இக் கண்டுபிடிப்பு பயிர்காக்கும் அரும்பொருட்களைத் தந்துள்ளது. 1944ல் புகுத்தப்பட்ட பாரத்தியான் என்ற பூச்சிக் கொல்லி அங்ககப் பாஸ்பரஸ் பூச்சிக் கொல்லிகளுள் மிகவும் பிரபலமாக இன்று வரை தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. அப்போதிருந்து ஆயிரக் கணக்கான புதிய செயற்கை அங்கக மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டு பழைய பூச்சிக் கொல்லிகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.


**டாக்டர் எம். கோபாலன்,**
பேராசிரியர்,
பூச்சியியல்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை.


பொதுவாக பூச்சிக் கொல்லிகள், பூச்சிக் கட்டுப்படுத்தும் முறைகளுள் முதலாவதாக திகழ்கின்றன.

அவைகள்:

(1) மிகவும் சக்தி வாய்ந்தவையாக இருப்பதாலும்

(2) உடன் பலனளிக்கவல்லதாக இருப்பதாலும்

(3) விரைவில் பூச்சிகளின் அளவை குறைத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாலும்.

(4) தேவையான பொழுது பயன்படுத்திக் கொள்ள முடிவதாலும் விரும்பிப் பயன்படுத்தப்படுகின்றன.

மற்ற பயிர் பாதுகாப்பு முறைகள் இந்த அளவிற்கு எல்லாவகைகளிலும் ஏற்ற பயனை அளிப்பதில்லை.

இருந்தாலும், பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்தலில் குறைகள் இல்லாமல் இல்லை. இவைகளைத் தொடர்ந்து பயன்படுத்துவதால் பூச்சிகள் காலப் போக்கில் எதிர்ப்புத் திறனை வளர்த்துக் கொள்கின்றன. இது புச்சிக் கொல்லி பயன்படுத்தலினால் எழும் பெருதீங்காகும். சுற்றுப்புறச் சூழலில் பூச்சிகள், பறவைகள், விலங்குகள் இன்ன பிற உயிரினங்கள் இணைந்த விரும்பத்தக்க வாழ்க்கை ஒழுங்கு அமைப்பை இவைகள் சிதைத்துவிடுகின்றன. மேலும் இம் மருந்துகள் அடிக்கப்பட்ட பொருள்களில் எஞ்சி நிற்கும் நஞ்சுப் பொருட்கள் மனிதர்க்கும் மற்ற உயிரினங்களுக்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடும்.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு பூச்சிக் கொல்லிகளை முறையறிந்து பயன்படுத்தித் தீமைகளைக் குறைத்து தன்மைகளைக்கூட்டிபயனடையமுடியும். இவைகளைப் பயன்படுத்தினால் பயிர்பாதுகாப்பில் சிறந்த முன்னேற்றம் வளர்ந்து விலை பொருட்கள் உற்பத்தி பெருகி விவசாயம் நிலைபெற்ற ஒரு தொழிலாக இருந்து வருகிறது. இதனை முழுவதும் பூச்சிக் கொல்லியின் பயனால் மட்டுமே எனக் கொள்ளாவிடினும், பூச்சிக் கொல்லிகளுக்கு இதில் முக்கிய பங்கு உண்டு என்பதை மறுக்க முடியாது.

இப்பொழுது பூச்சிக் கொல்லிகளின் பல்வேறு பிரிவுகளின் முக்கியபண்புகள் பற்றி பார்க்கலாம்

### அனங்கப் பூச்சி கொல்லிகள் (Inorganic Insecticides)

இவைகள் ஒரு காலத்தில் மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப் பட்டுவந்தன. அவை பாலுண்ணி விலங்குகளுக்கு ஒவ்வாத நச்சுத் தன்மை, நீண்டநாள் எஞ்சி நிற்கும் நச்சுத் தன்மை, பூச்சிகள் வளர்ந்துக் கொள்ளும் எதிர்ப்புத் தன்மையால் எழும் சிக்கல்கள் மற்றும் செயற்கை அங்ககப்பூச்சிக் கொல்லிகளைக் காட்டிலும் ஆற்றல் குறைவு ஆகிய தீய பண்புகளால் இந்த அங்கக மருந்துகள் ஒதுக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக அங்ககப் பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### அங்ககப் பூச்சிக் கொல்லிகள்:

அங்ககக் குளோரின் மருந்துகள் இரண்டாவது உலக போரின் போது கண்டுபிடிக்கப்பட்டு, அவைகளே மிகவும் ஏற்ற பூச்சிக் கொல்லிகள் என ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால் அவைகளின் உயர்ந்த நச்சுத் தன்மை, குறிப்பாக விதை நேர்த்திக்காகப் பயனாகும்போது அவைகளினால் நேரக்கூடிய அபாயம், நீண்ட நாள் எஞ்சி நிற்கும் நச்சுத் தன்மை மற்றும் பூச்சியினங்களில் நச்சு எதிர்ப்புத் தன்மையை வளர்த்தல் ஆகிய தீய பண்புகளால் இவைகளும் ஒதுக்கப்பட்டன.

அங்ககக் குளோரின் மருந்துகள் அவற்றுக்கிடையில் கூட்டு அமைப்பு முறையில் பெரிதும் வேறுபட்டிருப்பினும் பல வகையில் ஒத்து இருக்கின்றன. இரசாயன முறையாக அவை நிலைத்து உள்ளன. நீரில் குறைவாகக் கரைந்தும், அங்ககக் கரைப்பான் மற்றும் கொழுப்புகளில் சுமாராக கரையும் தன்மையுடையனவாகவும் குறை வாயு அழுத்தம் உள்ளனவாகவும் இருக்கின்றன. சுத்தமான நிலையில் அவை வெள்ளை அல்லது மஞ்சள் நிறமான மெழுகு போன்ற திடப் பொருளாக உள்ளன. இம் மாதிரியாக நிலைத்த தன்மை மற்றும் கரையும் தன்மை உடையதால் இந்த அங்ககக் குளோரின் மருந்துகள் நீண்ட நாட்கள் எஞ்சி நிற்கும் தன்மையுடையனவாகவும், மண்ணினும், விலங்குகளின் கொழுப்புக்களிலும், மற்றும் தாவரங்களில் இலை பரப்புகளில் தேங்கி நிற்கும் பண்புடையனவாகவும் உள்ளன.

பாதிக்கப்பட்ட பூச்சிகள் ஒரு வகையான கால்களின் நடுக்கம் அல்லது உதறல்களைக் குறிப்பாக வெளிப்படுத்துகின்றன. இந்த அங்ககக் குளோரின் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதால் பயிர்களில் பின்னர் சிலந்தி, அசுவினி, மற்றும் மாவுப் பூச்சிகள் தோன்ற ஏதுவாகின்றன. இம் மருந்துகளைப் பயன்படுத்துவதால் காய்கறிகள், கிழங்குகள், கனிகள் ஆகியவற்றில் தீய நாற்றத்தைப் பெறுகின்றன. பறங்கி இனச் செடிகளுக்கு இவை ஏற்புடையதல்ல. செடிகள் கருகிவிடும். ஈ, கொசுக்கள் போன்ற பூச்சிகள் டிடிடி. பிஎச்சி. போன்ற மருந்துகளுக்கு எதிர்ப்புத்திறனை வளர்த்துக் கொண்டுள்ளன.

### அங்ககப் பாஸ்பரஸ் மருந்துகள்: (Organophosphates)

இரண்டாவது உலகப்போரின் போது ஜெர்மனியில் திரு கெரார்டு உத்ராசர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட அங்ககபாஸ் பூச்சிக் கொல்லிகள் பயிர்பாதுகாப்பில் ஒரு பெரும் திருப்பத்தையே ஏற்படுத்திவிட்டன. இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட மேலும் விரிவான ஆய்வுகள் ஆயிரக் கணக்கான நமது விருப்பத்திற்கேற்ற விளைவுகளைத் தரவல்ல பூச்சிக் கொல்லிகளின் கண்டுபிடிப்புகளுக்கு வகை செய்தன. உதாரணமாக மிகக் குறைந்த காலம் மட்டுமே எஞ்சி நிற்கக்கூடியவை. TEPP மற்றும் Phosdri என்ற மருந்துகளாகும். ஆனால் Diazinon மற்றும் Guthion போன்றவை நீண்டகாலம்எஞ்சிநிற்கும் நச்சுப் பொருள்களாகும். பாரத்தியான் போன்ற பல்வகைப் பூச்சிகளையும் கொல்லும் விரித்த நிலை பூச்சிக் கொல்லிகளும், குறிப்பிட்ட பூச்சிகளை மட்டும் தெரிந்தெடுத்து கொல்லப் பயன்படும் ஷ்ராடான் போன்ற குறுகிய நிலை பூச்சிக் கொல்லிகளும் இந்த அங்கக பாஸ்பரஸ் மருந்து வகைகளில் உள்ளன. சரியான அளவையில் தயாரிக்கப்பட்ட Systox போன்ற மருந்துகள் ஊடுருவிப் பாயும் பூச்சிக் கொல்லிகளாக பயன் தருகின்றன. மேலும், இவற்றுள், மண் மூலமும் விதை நேர்த்தி மூலமும் புதிதாக முளைத்து வரும் நாற்றுகளுக்குப் பூச்சிகளினின்று பாதுகாப்பு அளிக்கும் Phorate போன்ற ஊடுருவிப் பாயும் மருந்துகளும் இந்த அங்ககப் பாஸ்பரஸ் மருந்துகளைச் சார்ந்தனவேயாகும்.

Ronnel போன்ற பூச்சிக் கொல்லிகள் கால்நடைகளின் மேல் தொற்றி வளரும் பூச்சிகளைக் கொல்லத் தீவனம் மூலம் அளிக்கப்படுகின்றன. மற்றும் Dipterex உட்கொள்ளப்பட்டு இயங்கும் மருந்துகள் தொடு நஞ்சாக செயல்படுவதில்லை. உணவின் மூலம் கலந்தளிக்க ஏற்ற, சிறந்த உட்கொள்ளும் நஞ்சாக அவைகள் பயன்படுகின்றன.

அங்ககப் பாஸ்பரஸ் பூச்சிக் கொல்லிகளுள் அங்ககக்குளோரின் வகைகளில் இருப்பதைக் காட்டிலும் ஆற்றல் வாய்ந்த கடும் நஞ்சிலிருந்து வெகு குறைவான ஆற்றலுள்ள நஞ்சு வரை விரிந்து காணப்படுகின்றன.

அங்ககக் குளோரின் நஞ்சுகள் கொழுப்புத் திசுக்களில் சேமித்து வைக்கப்படுதலுக்கு மாறாக, அங்ககப் பாஸ்பரஸ் நஞ்சுகள் விரைவில் நச்சுத் தன்மை மாற்றப்பட்டுத் திசுக்களினின்றும் கழிக்கப்படல் ஏற்புடைய சிறந்த தொரு பண்பாகும். எல்லா அங்ககப்பாஸ்பரஸ் பூச்சிக் கொல்லி

களும் பொதுவாகத்திரும்ப மாற்றப்பட இயலாத கொலின் எஸ்டரேஸ் Chalinesterase தடுப்பான்களாக இயங்குகின்றன.

**கார்பமேட்டுகள்:**

(*Carbamates*) கார்பமேட்டு பூச்சிக் கொல்லிகள் மற்ற பூச்சிக் கொல்லிகளுடன் ஒப்பிடும்போது சமீப காலத்திய தோற்றமாகும். அவைகள், நரம்பு மண்டலத்திலுள்ள கொலின் எஸ்டரேஸ் ஊக்குவிக்கிகளுக்கு போட்டி தடுப்பான்களாகச் செயல்பட்டு பயனளிக்கின்றன. இந்த மருந்து வகைகள் வேகு விரைவில் நச்சுத் தன்மை மாற்றப்பட்டு திசுக்களினின்று வெளியேற்றப்பட்டுவிடுகின்றன. எனவே இவைகள் கொழுப்பிலோ அல்லது பாலிலோ தேங்கி நின்று தீங்கு விளைவிப்பதில்லை. உவர் நீரில் கார்பமேட் மருந்துகள் நிலைத்திருப்பதில்லை. அவைகள் போன்ற Piperonyl butoxide ஆக்க மூட்டிகளுடன் சேரும்போது ஆற்றல் மிகுந்து காணப்படுகின்றன.

**சிலந்திக் கொல்லிகள் (Aearicides)**

இவை செஞ்சிலந்தி போன்ற, பயிர்களைத்தாக்கும் சிலந்தியினங்களை அழிக்கப் பயன்படும் மருந்துகளாகும். Dinitrophenol மற்றும் அங்ககப் பாஸ்பரஸ் பூச்சிக் கொல்லிகளைத் தவிர மற்ற பூச்சிக் கொல்லிகள் சிலந்திக் கொல்லிகளாகப் பயனாவதில்லை. பெரும்பாலான அங்ககக் குளோரின் பூச்சிக்கொல்லிகள் பயிர்களைத் தாக்கும் சிலந்திகளைக் கொள்வதில்லை. மாறாக அச் சிலந்திகளை உண்டு வாழும் உயிரினங்களை அழித்து சிலந்தியினங்கள் வெகு விரைவில் பெருக வழி செய்து விடுகின்றன. சிலந்திக் கொல்லிகளில் ஒவ்வொரு இனத்திற்கேற்ற நச்சுத் தன்மை பொருந்திய சிலந்திக் கொல்லிகள் தற்போது கிடைக்கின்றன. அவைகள் பெரும்பாலும் பூச்சியினங்களுக்குப் பாதகம் விளைவிப்பதில்லை.

**செயற்கை பைரத்திராய்டு (Synthetic pyrathroids)**

இயற்கையாகக் கிடைக்கும் தாவர பைரத்திராய்டுகளில் கூட்டமைப்பு அடிப்படையிலேயே செயற்கை பைரத்திராய்டுகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் இவைகள் இயற்கை பைரத்திராய்டுகளை விட இயக்கப் பண்டுகளால் பெரிதும் வேறுபட்டு இருக்கின்றன. முதன் முதலாக 1973ல் ஆக்கப்பட்ட செயற்கை பைரத்திராய்டுகள் பூச்சிக் கொல்லும் தன்மையில் சிறந்தும் பாலுண்ணிகளுக்கு வெகு குறைவான நச்சுத் தன்மை பொருந்தியனவாகவும் நிலைத்த தன்மையுடையனவாகவும் இருந்தன. இவ்வாறு பலதரப்பட்ட உயிரினங்களுக்கு ஏற்ற தனித் தன்மையுடைய பைரத்திராய்டுகள் ஆக்கப்பட்டன. பெர்மெந்திரினும் அதனையொத்த சைப்பெர்மெத்திரின் NRDC 161 மற்றும் பெண் லாலரேட் என்பவைகளும் இவ்வகை பைரத்திராய்டுகளே யாகும்.

இப் புதிய செயற்கைப் பைரத்திராய்டுகள் பல்வகைப் பூச்சியினங்களை அழிக்கும் பிரிவு நிலை பூச்சிக் கொல்லிகளாகும். இவை பெரும்பாலான பயிர்களைத் தாக்கும் பூச்சிகளின் முட்டை, புழு மற்றும் முதிர்ந்த பருவங்களைக் கொன்றிருக்க வல்லதாகும். ஆனால் பாலுண்ணிகளுக்குக் குறைவான நச்சுத் தன்மையுடையனவாகும். விரைவில் இயற்கையாக நச்சுத்தன்மை முறிவுற்று விடுவதால் இவைகள் உயிரினங்களின் உடல்களில் தேங்கி நிற்பதில்லை.

---

# கவனக்குறைவின் விளைவு

அந்தப் பதினோரு வயதுச் சிறுமி நன்கு படித்த குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளுடைய தந்தையார் ஒரு துணி ஆலையில் பணியாற்றி வந்தார். தாத்தாவின் செல்லப் பெயர்த்தியான அந்தச் சிறுமி தன் தாத்தாவுடனேயே வசித்து வந்தாள். அவள் ஒன்றும் உலகம் அறியாத முட்டாள் சிறுமியல்லள். புத்திசாலி தான், ஆறாம் படிவத்தில் பயின்று வந்தாள்.

ஒரு முறை தன் வீட்டு மாடியில் மற்ற குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள் அந்தச் சுட்டிப் பெண். மாடிக் கைப்பிடியை ஒட்டினாற்போல் ஓடிய மின் கம்பித் தொடரைக் கண்டதும், அன்று அவளுக்கு அதைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆசை பிறந்தது. தினமும் தான் அவள் அந்தக் கம்பித் தொடரைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். என்றாலும், அதைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு அன்றுவரை ஏற்பட்டதே இல்லை. அன்று அவளுடைய போதாத காலமோ என்னவோ, அந்தக் கம்பித் தொடரைத் தொட்டுப்பார்க்க வேண்டும் என்ற விபரீத ஆசை எழுந்தது. கைக்கு எட்டவில்லையே என்று அவள் தன்னுடைய ஆசையை விட்டு விடவில்லை. கைப்பிடிச் சுவற்றின் மேல் ஏறி எட்ட ஓடிய அந்தக் கம்பித் தொடரைத் தன் பட்டுக் கையால் தொட்டாள்.

நல்ல காலம். அந்தக் கம்பித் தொடரில் ஓடிக் கொண்டிருந்த மின்சாரம், உயர் அழுத்த வகையைச் சேர்ந்ததல்ல. அதனால், அந்தச் சிறுமி கம்பித்தொடரைத் தொட்டதும், மின் அதிர்ச்சிக்கு இலக்காகித் தூக்கி எறியப் பட்டாள். உடலில் ஓரிரு தீப்புண்களுடன் தப்பித்துக் கொண்டாள். மின் கம்பித்தொடரைக் கையால் தொடக் கூடாது என்பதை நாம் மட்டும் அறிந்தால் போதுமா? நம் வீட்டில் உள்ள குழந்தைகளும் அவற்றைத் தொடாமலும் தொட்டால் ஆபத்தானது என்பதையும் புரியும் வண்ணம் உணர்த்தி அவர்களைக் கவனமாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

● நன்றி: கலைக்கதிர்

# எலக்ட்ரானியலின் தோற்றம்

**ஆர். மணவழகன்**

மாணவர் பக்கம்

இன்று எலக்ட்ரானிக்ஸ் துறை பயன் படாத இடமே இல்லை என்று கூறுமளவிற்கு எலக்ட்ரானிக்ஸ் துறை வளர்ந்துள்ளது; வளர்ந்து வருகிறது. பாதுகாப்பு, போக்குவரத்து, தொழில் மருத்துவம், அனல் மின்சக்தி, அண்ட வெளி ஆராய்ச்சி ஆகிய துறைகளில் எலக்ட்ரானிக்ஸ் முக்கியப் பங்கு வகித்து வருகிறது. இந்தியாவும் இன்று எலக்ட்ரானிக்ஸ் துறையில் வெகுவாக முன்னேறி வருகிறது. நம்முடைய எலக்ட்ரானிக்ஸ் முன்னேற்றத்திற்குச் சான்றுகளே ஆரியபட்டா, பாஸ்கரா, ரோகிணி முதலானவை. சரி இவையெல்லாம் இருக்கட்டும் இனி, எலக்ட்ரானியல் துறையின் ஆரம்பம் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

ஓரளவு விஷயம் தெரிந்தவர் கேட்டால் எலக்ட்ராகளைக் கண்டுபிடித்தவர் தாம்சனைக் கண்டுபிடித்தவர் என்றும், எலக்ட்ரானியலின் அடிப்படைக் கருவியான 'டையோடை கண்டுபிடித்தவர் பிளெமிங் என்றும் கூறிவிடுவார்கள்.

ஆனால், தாம்சன், பிளெமிங் முதலானவர்களின் ஆராய்ச்சிக்கு அடிப்படையாக விளங்கிய பரிசோதனை எது என்றால் பலருக்குத் தெரிந்திருக்காது. எலக்ட்ரானியலின் அத்தகைய அடிப்படைப் பரிசோதனையையே இக்கட்டுரை விவரிக்கிறது.

இன்று நம் வீடுகளுக்கு ஒளி கொடுத்துக் கொண்டிருக்கும் மின் விளக்கினைக் கண்டுபிடித்த அறிவியல் மேதை தாமஸ்ஆல்வா எடிசன் செய்த ஒரு பரிசோதனையே எலக்ட்ரானியலின் ஆரம்பநிலையாகும். இப்பரிசோதனையைப் படத்தில் காண்க.

எடிசன் முதன்முதலில் செய்த பல்புகளில் கார்பனையே ஒளிரும் பொருளாக (பிலமண்ட்) வைத்திருந்தார். இக்கார்பன் இழை அடிக்கடி எரிந்து சாம்பலாகியது. இக்குறையை நீக்குவதற்காக பல்பினுள் ஒரு தகட்டை வைத்தார். அத்தகட்டினைப் பிலமண்ட்டோடு (பிலமண்ட் என்பது ஒளி தரும் கார்பன் பகுதியின் இணைப்பாகும்) இணைத்து விட்டார். நிகழும் மின்னோட்டத்தை ஆராய்வதற்காகப் படத்தில் காட்டியுள்ளபடி ஒரு கால்வனா மீட்டரை இணைத்தார். பின்னர் மாற்று வழி ஸ்விட்சின் மூலம் தகட்டிற்கு பாஸிட்டிங் மின்னோட்டத்தையும்நெகட்டிவ் மின்னோட்டத்தையும் மாற்றி மாற்றி பிணைத்து ஆராய்ச்சி செய்தார். தகடு பாஸிட்டிங் மின்னோட்டம் பெறும்போது கால்வனா மீட்டர்மின்னோட்டம் ஒன்று நிகழ்வதைக் காட்டிற்று. தகடு நெகட்டிவ் மின்னோட்டம் பெறும்போது மின்னோட்டம் ஏதும் நிகழவில்லை. இதைக் கண்டு ஆச்சரியப்பட்ட எடிசன் இதற்குச் சரியான விளக்கத்தைக் கொடுக்காமல் இப்பரிசோதனைக்கு எடிசன் விளைவு (Edison Effect) என்ற பெயரை வைத்து விட்டார். இவருக்குப் பின் வந்த தாம்சன் என்பவரே எடிசன் விளைவிற்குச் சரியானதொரு விளக்கத்தைக் கொடுத்தார். அதாவது "பிலமண்ட் எனப்படும் இழையானது மின்னோட்டத்தால் சூடு படுத்தப் பட்டு எலக்ட்ரான்களை வெளி விடுகிறது. எலக்ட்ரான் எதிர் மின்னேற்றம் (Negotive Charge) கொண்டது. எனவேதான் தகடானது பாஸிட்டிவ் மின்னோட்டம் நேர் மின்னோட்டம் பெறும் போது எலக்ட்ரான் தகட்டை நோக்கிப் பாய்கிறது. எனவே பிலமண்டுக்கும், தகட்டுக்கும் இடையே மின்னோட்டம் நிகழ்கிறது.




எடிசன் விளைவு

எடிசன் விளைவின் பரிசோதனையையும், தாம்சனின் விளக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டே எலக்ட்ரானியல் வளரத் தொடங்கியது. இதன் அடிப்படையிலே 1903-ஆம் ஆண்டு பிலமிங் என்பவர் எலக்ட்ரானியலின் அடிப்படைக் கருவியான வெற்றிடக் குழாய் டையோடை (Vaccum Tube Diode)யும், 1907 ஆம்ஆண்டு வீ. டீஃபாரஸ்ட் என்பவர் ட்ரையோடையும் (Triode) கண்டுபிடித்தார்.

இவையே எலக்ட்ரானியலின் தோற்றமாகும். இன்றும் எலக்ரானியல் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இவ்வளர்ச்சிக்கு முடிவேயில்லை!



சென்னை இராஜாஜி மண்டபத்தில் 'ஜவஹர் சிறுவர் இல்லம்' குழந்தைகளால் கடந்த மாதம் உடல் ஊனமுற்றோர் தினம் கொண்டாடப் பெற்றது. இவ்விழாவில் ஒன்பது உடல் ஊனமுற்ற நிறுவனங்களிலிருந்து 79 குழந்தைகள் கலந்து கொண்டார்கள்.

ஊனமுற்ற குழந்தைகளுக்குக் காலையும் மாலையும் காபியும், சிற்றுண்டியும், பிற்பகல் உணவும் வழங்கப்பட்டது. விளையாட்டுப் போட்டிகள், கூட்டு ஓவியம், கூட்டு ஒட்டு வேலை, திரைப்படக் காட்சி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாலையில் கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் அனைவரையும் கவர்ந்தன.

'பால பவனம்' இயக்குநர் திருமதி எம். சிவகாம சுந்தரி, அவர்கள் தலைமை தாங்க, சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி சி. கே. கரியாலி அவர்கள் குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கினார்.

## மகிழ்ந்து வாழவேண்டும்!

மகிழ்ந்து வாழ வேண்டும்—நீ
இகழ்ந்து வாழ்ந்திடாதே
கலந்து வாழ வேண்டும்—நீ
கலங்கி வாழ்ந்திடாதே
சேர்ந்து வாழ வேண்டும்—நீ
சோர்ந்து வாழ்ந்திடாதே
போற்ற வாழ வேண்டும்—நீ
தூற்ற வாழ்ந்திடாதே!

—வீ. சந்திரன்

எப்போதுமே பரபரப்பில் இருக்கும் மருத்துவர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் போன்றோருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு பேசுவதற்குப் புதிய கருவி ஒன்று, புனே நகரில் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு 'ரேடியோ பேஜிங் சர்வீஸ்' என்று பெயர்.

தொலைபேசி வசதி கொண்ட பரபரப்பான வாடிக்கையாளர்கள் இந்த வானொலி போன்ற கருவியைப் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளலாம். இதன் மூலம் தாங்கள் பணியாற்றும் அலுவலகம் அல்லது நிறுவனங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளலாம். இந்த வசதி நடைமுறைப்படுத்தி ஆறு மாதக் காலத்திற்குச் செயல்படுத்தப்படுகிறது.

பாக்கெட்டில் வைத்துக்கொள்ளும் அளவு இந்த உயர் வேக வானொலி போன்ற சிறிய கருவி தனிப்பட்ட அழைப்புக் குறியீடு கொண்டது. இது தொலைபேசி இணைப்பைப் போன்றது. சிறிய மணி ஒன்றும் அதில் இடம் பெற்றுள்ளது. இந்த வசதியைப் பெற்றுள்ள வாடிக்கையாளர்களுக்கு நகர தொலைபேசி நிலைய 'பேஜிங்' ஆப்பரேட்டர் உடனடி தொடர்பை ஏற்படுத்தித் தருகிறார். இதன் மூலம் அழைப்பு வரும்போது பாக்கெட்டில் 'பீப்' என்ற சப்தம் ஒலிக்கும். இந்தக் கருவி மீண்டும் சக்தியேற்றக் கூடிய பேட்டரி ஒன்றின் மூலம் இயங்குகிறது.



# புகையிலைப் புழு

டாக்டர்
மா. பாலசுப்பிரமணியன்,
பேராசிரியர் மற்றும் தலைவர்,
பூச்சியியல் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-

புகையிலைப் புழு என அழைக்கப்படும் (ஸ்போடாப்டிரா புரோனியா லிட்டுரா) அநேக விளைப் பயிர்களில் அதிகமாக சேதத்தை விளைவிக்கிறது.

**தாக்கப்படும் பயிர்கள்:**

இப்புழு சுமார் ஐம்பது அல்லது அறுபதுக்கும் மேற்பட்ட பயிர் வகைகளில் சேதம் விளைவிக்கிறது. அவைகளில் மிகவும் முக்கியமான பயிர்கள் பருத்தி, புகையிலை, மிளகாய், வாழை மக்காச்சோளம், நிலக்கடலை, சூரியகாந்தி, தக்காளி, வெண்டை வெங்காயம், அகத்தி, முட்டைக் கோஸ், சர்க்கரைவள்ளி, உளுந்து, துவரை, குதிரைமசால் ஆகியவை.

**புழு விருத்தியாகும் விதம்:**

இதன் தாய் அந்துப்பூச்சி இலைகளின் அடிப்பாகங்களில் சுமார் 400 முதல் 500 சிறிய முட்டைகளை ஒரே குவியலாக இடுகிறது. இந்த முட்டைகள் ஒன்றாகச் சேர்ந்து பழுப்புநிற உரோகத்தால் மூடப்பட்டிருக்கும். முட்டைகள் உருண்டையாகவும் இளம் வெள்ளை நிறமுள்ளதாகவும் இருக்கும். இம்முட்டைகளிலிருந்து 4 அல்லது 5 நாட்களில் கரும் பச்சை நிறமுள்ள சிறு புழுக்கள் வெளிவருகின்றன. இப்புழுக்கள் அனைத்தும் 5 முதல் 6 நாட்கள் வரை ஒரே இலையில் இருந்துகொண்டு இலைப்பச்சையத்தைச் சுரண்டிச் சாப்பிடுகின்றன. அந்த இலையைச் சுரண்டிச் சாப்பிட்டு முடித்தவுடன் இப்புழுக்கள் தனித்தனியாகப் பிரிந்து மற்ற இலைகளுக்கு நகர்ந்து செல்லுகின்றன. இந்நிலையில் புழுக்கள் சாதாரணமாக இளம்பச்சை நிறமாகஇருக்கும். சுமார் பத்து நாட்கள் வளர்ந்த பிறகு மற்ற செடிகளுக்கும் நகர்ந்து செல்லுகின்றன. இப்புழுக்களின் நிறம் சில சமயங்களில் உட்கொள்ளும் உணவின் நிறத்தைப் பொறுத்து மாறுபட்டுக் காணப்படும். வளர்ந்த புழுக்களின் உடலின் குறுக்கே மேடான கருப்புப் பட்டை காணப்படும். இப்புழுக்கள் 15 அல்லது 20 நாட்களில் முழு வளர்ச்சி அடைகிறது. நன்றாக வளர்ந்த புழுக்கள் சுமார் 40 மில்லி மீட்டர் நீளமுள்ளதாகவும், நன்கு உருண்டு கொழுத்து, கரும்பச்சை நிறமான உடலும், உடலில் இருபுறங்களிலும் இளம் மஞ்சள் நிறக்கோடுகள் கொண்டதாக இருக்கும். மேலும், தலையும் காலும் கருப்பு நிறமுடையதாக இருக்கும். முழு வளர்ச்சி அடைந்த புழுக்கள் மண்ணில் சுமார் 50 மில்லி மீட்டர் ஆழம் சென்று மண்ணினால் செய்யப்பட்ட கூட்டில் கூட்டுப்புழுவாக மாறுகிறது. இக்கூட்டுப்புழுக்கள் பழுப்பு நிறத்துடன் உருண்டையாக இருக்கும். கூட்டுப்புழுக்களிலிருந்து 10 முதல் 12 நாட்களில் அந்துப்பூச்சிகள் வெளிவரும். அந்துப்பூச்சிகள் சாம்பல் நிறம் கலந்த பழுப்பு நிறமுள்ளதாகவும் மேல் இறக்கைகளில் அலை அலையாகக் கோடுகளும் உள்ளதாக இருக்கும். கீழ் இறக்கைகள் வெள்ளையாகவும், இறக்கை ஓரங்களில் பழுப்புக் கோடும் இருக்கும். பெண் அந்துப்பூச்சியின் வயிற்றுப்பகுதி பெருத்துக் காணப்படும். தாய் அந்துப்பூச்சி வெளிவந்த இரண்டு நாட்களில் முட்டை இட ஆரம்பிக்கும் இந்த பூச்சியின் முழு வளர்ச்சிக் காலம் (முட்டையிலிருந்து அந்துப்பூச்சி பருவம் ஆகும்வரை) 30-40 நாட்கள் வரை இருக்கும்.

**சேதத்தின் விவரம்:**

முட்டையிலிருந்து வெளிவரும் சிறிய புழுக்கள் கூட்டமாக ஒரே இலையில் இருந்து கொண்டு, இலைப் பச்சையத்தைச் சுரண்டிச் சாப்பிடுகின்றன. முட்டைகள் இலையின் அடிப்பாகத்தில் இடுவதால் இலையின் அடிப்பாகத்திலுள்ள பச்சையத்தைச் சுரண்டிச் சாப்பிடுகின்றன. இதனால் முதலில் இலைகள் வெளுத்துக் காணப்படும். பிறகு இலைகள் காய்ந்து விடும். இவ்வாறு சுரண்டிச் சேதம் விளைவிக்கப்பட்ட இலைகள் இப்புழு விழுந்த காடுகளில் சுலபமாகத் தென்படும். இவ்வாறு 5 அல்லது 6 நாட்கள் ஒரே இலையைச் சுரண்டிச்சாப்பிட்டுமுடித்தவுடன்புழுக்கள் மற்ற இலைகளுக்கு நகர்ந்து சென்று செடிகளைச் சேதப்படுத்தும். பருத்திப் பயிரில் இலைகளைத் தவிர, சப்பை, பூக்கள், காய்கள் ஆகியவற்றையும் இப்புழுக்கள் சேதப்படுத்தும். தாக்கப்பட்ட சப்பைகளும், சிறிய காய்களும் கீழே உதிர்ந்துவிடும். பெரிய காய்கள் வெடிக்காமல் போய்விடும். வளர்ந்த புழுக்கள் பகல் நேரங்களில் செடிகளுக்குக் கீழே மண்ணில் மறைந்திருக்கும். மாலை நேரங்களிலும், இரவிலும் அதிகாலை நேரங்களிலும் இப்புழுக்கள் செடிகளைத் தாக்கும். இப்புழுக்கள் அதிக அளவு சாப்பிடும் நேரம் மாலை 7 மணி முதல் நடு இரவு வரை.

**கவர்ச்சிப் பயிர்களைப் பயிர் செய்தல்:**

ஆமணக்குச் செடியில் இது மிகுந்த அளவில் முட்டை இடுவதால் பருத்திப் பயிரைச் சுற்றி ஆமணக்குப் பயிர் செய்தால் பெண் பூச்சிகள் கவரப்படும். ஆமணக்குச் செடியில் முட்டை

களையும் ,சிறு புழுக்களையும் அழித்து விடுவதால் பருத்திச் செடியை இப்புழுக்களின் தாக்கு தலில் இருந்து காப்பாற்றலாம். சூரியகாந்தி, உளுந்து போன்ற பயிர்களிலும் இது அதிக முட்டை இடுவதால் இந்தப் பயிர்களையும் உபயோகிக்கலாம்.

**அந்துப் பூச்சிகளைச் சேகரித்து அழித்தல்:**

இதன் அந்துப் பூச்சிகள் இர வில் பெரும் அளவில் விளக்கு வெளிச்சத்தால் கவரப்படுகிறது. ஆகையால் இப்பூச்சிகள் விளக்கு வெளிச்சத்தை நாடிப்பறந்து வரும். விளக்குப் பொறிகள் பல இடங்களில் இரவு 7 மணி முதல் அமைத்து மண்ணெண்ணை கலந்த நீரை ஒரு தட்டில் விளக் குப் பொறியின் கீழே வைத்து அந்துப் பூச்சிகளை அழிக்கலாம். அந்துப்பூச்சிகள் விளக்குப் பொறிக்கு 7 மணி முதல் 10 மணி வரை அதிக அளவில் கவர படுகின்றன. விளக்குப் பொறி கள் அந்துப்பூச்சிகளைக் கொல்வ தோடு அல்லாமல், இப்பூச்சிகள் தோட்டத்தில் பயிர்களில் விழுந்துவிட்டன என்ற அறிகுறி யையும், அதற்கேற்றவாறு பாது காப்பு நடவடிக்கைகளை எடுக்க வும் உதவுகின்றன.

**முட்டைகளைச் சேகரித்து அழித்தல்**

முட்டைகள் இலைக்கு அடிப் பாகங்களில் குவியல்களாக இடப் படுவதால், இலைகளின் அடியில் முட்டைகளைச் சுலபமாகக் கண்டு பிடித்து அவைகளை எடுத்து அழித்துவிடலாம். ஒரு முட்டைக் கும்பலில் 400 முதல் 450 முட் டைகள் இருப்பதால், முட்டை களை அழிப்பதால் பூச்சிகளின் பெருக்கத்தைக் குறைக்கலாம்.

**புழுக்களைச் சேகரித்து அழித்தல்:**

இளம் புழுக்கள் 5 அல்லது 6 நாட்கள் வயது வரையில் ஒரே இலையில் அடியிலேயே கூட்ட மாக இருக்குமாதலால் அவ்விலை களைக் கிள்ளிப் புழுக்களை அழித்துவிடலாம். தென்படும் வளர்ந்த புழுக்களையும் கையால் பொறுக்கி அழிக்கலாம்.

**பூச்சி கொல்லிகளை உபயோகித்தல்:**

புழுக்கள் துரிதமாக நகர்ந்து சென்று இலைகளைச் சாப்பிடும் பொழுது பூச்சி மருந்துகளை உப யோகித்து அழிக்கலாம். கீழ்க் கண்ட ஏதாவது ஒரு மருந்தை ஒரு ஏக்கருக்கு. கீழே கொடுக்கப் பட்டுள்ள அளவில் உபயோகித்து புழுக்களை அழிக்கலாம்.

1. குளோர்பைரிபாஸ் (டர் ஸ்பான் 20-இளி) 800 மில்லி லிட்டர் மருந்து 400 லிட்டர் தண்ணீர்.

2. குளோர்பைரிபாஸ் 500 மில்லி ப்ளஸ் பெனிட்ரோ தியான் 200 மி.லி.மருந்து 400 லிட்டர் தண்ணீர்.

400 லிட்டர் மருந்து கரைசலைக் கைத்தெளிப்பான் மூலம் பயிரின் எல்லாப் பகுதியையும் மற்றும் செடியைச் சுற்றியுள்ள மண், வரப்பு ஆகியவைகளும் நனையும் படி தெளிக்கவேண்டும். புழுக்கள் பகலில் மண்ணில் ஒளிந்து கொள் வதால் அதிகாலை நேரத்திலோ அல்லது மாலை நேரத்திலோ மருந்து தெளிப்பது நல்ல பயனைத் தரும்.

**நஞ்சு கலந்த உணவுப் பொருள் களை வைத்தல்:**

வளர்ந்த புழுக்களை அழிக்க பூச்சி மருந்து கலந்த உணவு உருண்டைகளைத் தோட்டங் களில் பரவலாகப்போட்டு வைக்க வேண்டும். இவ்வளவு உருண்டை களைப் புழுக்கள் உட்கொண்டு இறந்து விடுகின்றன. உட்கொண் மயங்கிக்கிடக்கும் புழுக்களையும் சேகரித்து அழித்து விடலாம். இந்த மருந்து கலந்த உணவு கீழே கண்டுள்ளபடி தயார்செய்ய லாம்.

| | |
|---|---|
| பச்சரிசித்தவிடு | 5கிலோ |
| வெல்லம் அல்லது சர்க்கரை கழிவுப் பொருள் | 0.5 கிலோ |
| கார்ப ல்மருந்து50 விழுக்காடு | 500கிராம் |
| அல்லது டிடிடி 50 விழுக்காடு தூள் | |

இவைகளை வேண்டுமளவு தண் ணீரில் கலந்து சிறு சிறு உருண் டைகளாகச் செய்து காலை நேரங்களில் தோட்டங்களில் பரவலாகப் போட்டு வைக்க வேண்டும்.

**வைரஸ் நோய்க் கிருமிகளை உபயோகித்தல்:**

இப்புழுக்களைத் தாக்கிநோய் உண்டாக்கக்கூடிய வைரஸ் (நாயூக்லியர் பாலிஹெட்ரோசிஸ்) கிருமிகள் தமிழ்நாடு வேளாண் மைப் பல்கலைக் கழக பூச்சியியல் ஆராய்ச்சிக் கூடத்தில் கண்டறி யப்பட்டு இக்கிருமிகளை வளர்க் கப்பட்டும் வருகிறது. முழு வளர்ச்சியடைந்த 100 புழுக்களி லிருந்து சேகரிக்கப்பட்ட வைரஸ் கிருமியை அதிக உப்பு இல்லாத தண்ணீரில் 10 மி.லி. பாலுடன் கலந்து ஒரு ஏக்கருக்கு உபயோ கிக்கலாம். இந்த வைரஸ் கல வையைச் செடிகளின் எல்லா பாகங்களிலும் முக்கியமாக இலை களின் அடிப்பாகத்தில் நன்றாகப் படும்படி அடிக்கவேண்டும். இந்த வைரஸ் கிருமிகளைப் புழுக்கள் உட்கொண்டவுடன் கிருமிகள் புழுக்களின் உடலில் விருத்தியாகி புழுக்கள் சலனமற்றுப்போய் அல்லது 5 நாட்களில் இறந்து விடுகின்றன. வைரஸ் மலிந்து வளர்ந்துள்ள புழுக்களின் வயிற்



றுப் பாகம் வெளிர் சிவப்பு நிறத்துடன் காணப்படும். வைரஸ் நோயால் தாக்கப்பட்ட புழுக்கள் செடிகளின் மேல் பாகத்திற்கு வந்து, சலனமற்றுப்படுத்தும், இலைகளில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும். புழுக்கள் இறந்தவுடன் தோலில் வெடிப்பு ஏற்பட்டு உடலிலிருந்து தண்ணீர் போன்ற வைரஸ் கிருமிகள் கலந்த திரவம் வெளிவரும். இறந்து போன புழுக்களைச் சேகரித்து நீரில் கரைத்துச் செடிகளில் தெளிப்பதனால் வைரஸ் கிருமி செடிகளின் இலைகளில் படிகின்றது. இவ்விலைகளை உட்கொண்ட புழுக்கள் இறந்துவிடுகின்றன. நன்கு வளர்ந்த புழுக்களை இந்த வைரஸ் நோய் தாக்குவதில்லை. ஆகையால் வைரஸ் கலவையைப் புழுக்கள் சிறியதாக இருக்கும் பொழுதே தெளித்தல் வேண்டும்.

இந்த வைரஸ் மருந்தைக்கீழ்க் கண்ட காரணங்களை முன்னிட்டு மாலை நேரங்களில் தான் தெளிக்கவேண்டும்.

1. பகல் நேரத்தில் சூரிய வெளிச்சத்தில் வைரஸ் கிருமிகள் வீரியத்தை இழந்து விடுகின்றன.

2. புழுக்கள் மாலை நேரம் முதல் நள்ளிரவு வரை அதிக உணவு உட்கொள்வதாலும், பகலில் கண்ணில் ஒளிந்து கொள்வதாலும் மாலையில் தெளித்தால் நல்லபலன் கிடைக்கும்.

3. மாலைநேரத்தில் தெளிப்பதால் 80 சதம் வரை புழுக்கள் கொல்லப்படுகின்றன.

இந்த வைரஸ்னால் வேறு எந்தப் பூச்சிகளுக்கோ, பிராணிகளுக்கோ, பறவைகளுக்கோ, கால்நடைக்கோ, மனிதனுக்கோ எந்தவிதக் கெடுதலும் இல்லை. 2 அல்லது 3 வருடங்கள் தொடர்ந்து இந்த வைரஸை உபயோகித்தால் மண்ணில் இந்த வைரஸ் நிலையாக இருந்து தொடர்ந்து பயிர்களில் பூச்சி விழும் காலங்களில், நோய் உண்டாக்கிப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும். இந்த வைரஸ் கிருமிகளை அதிகமாக வளர்க்க அதிக அளவில் புழுக்களை ஆமணக்கு இலைகளில் அதிகமாக வளர்த்து வைரஸ் கிருமிகளை உபயோகப்படுத்தலாம். இந்த வைரஸ்கிருமிகளை வளர்க்கும் முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**தேவையான பொருட்கள்:**

1. பிளாஸ்டிக் பக்கட்டுகள் (5 லிட்டர்) அளவு
2. பகெட்டுகளை மூடத் துணி
3. கயிறு
4. கண்ணாடிக் குடுவைகள் (1 லிட்டர் அளவு)
5. டீபால்' எனும் திரவம்
6. பெவிகளின் (காலியான) புட்டிகள்
7. பீங்கான் உரலும்குழவியும்
8. மஸ்லின் துணி
9. நல்ல தண்ணீர்
10. நடுத்தர 9 அல்லது 10 நாட்கள் வளர்ந்த 2.5-3 செ.மீ. நீளமுள்ள புரோடீனியாப் புழுக்கள்
11. ஆமணக்கு இலைகள்

பத்து நாட்கள் வயதுள்ளபுழுக்களை ஓர் இரவு பூராவும் ஆகாரம் கொடுக்காமல் வைக்கவும். 250 மி.லி. தண்ணீரில் கலந்த வைரஸ் கலவையில் சிறிது டீபாலைக் கலந்து, ஆமணக்கு இலைகளை நன்றாக நனைத்து எடுத்து இலைகளை நிழலில் சிறிது நேரம் காயவைக்கவும். இவ்வாறு வைரஸ் கலவையில் நனைக்கப்பட்ட ஆமணக்கு இலைகளை ஆகாரம் கொடுக்கப்படாத புழுக்களுக்கு 2 நாட்களுக்குக் கொடுக்கவேண்டும். அதன் பிறகு வைரஸ் கலக்கப்படாத ஆமணக்கு இலைகளைக் கொடுக்கவும். வைரஸ் கலவையில் நனைக்கப்பட்ட ஆமணக்கு இலைகளைச்சாப்பிட்ட புழுக்கள் நோயால் தாக்கப்படுகின்றன. தாக்கப்பட்ட புழுக்களின் வயிற்றுப்பாகம் வெளிர் சிகப்பு நிறத்துடன் காணப்படும். இம்மாதிரி வைரஸ் நோயால் தாக்கப்பட்ட புழுக்களை ஒரு கண்ணாடிக் குடுவையில் தண்ணீருடன் சேகரித்து வைக்கவும். நன்றாக இறந்தவுடன் புழுக்களின்தோலில் வெடிப்பு ஏற்பட்டு வைரஸ் கலந்த திரவம் வெளிப்படும்.

இறந்த புழுக்களை நன்றாக அரைத்து, துணியில் வடிகட்டி, வைரஸ் கிருமிகளை வேண்டிய அளவு தண்ணீரில் சேமித்து வைக்கவேண்டும். வைரஸ் கிருமிகள் கண்ணாடிக் குடுவையின் அடிப்பாகத்தில் தங்கும். 7 நாட்களுக்குப் பிறகு தெளிந்த நீரை வெளியே கொட்டிவிட்டு, மறுபடியும் தண்ணீர் கலந்து வைக்க வேண்டும். அடிப்பாகத்தில் மறுபடியும் தங்கும் வைரஸ் கிருமிகளைத் தண்ணீரில் கலந்து, சிறிது டீபாலையும் சேர்த்துச் செடியில்களில் தெளிக்கவேண்டும். நூறு இறந்த புழுக்களிடமிருந்து கிடைக்கும் வைரஸ் ஒரு ஏக்கராவுக்கு தெளிக்கப் போதுமானது. வைரஸ் வளர்க்க உப்புத் தண்ணீரையும், முழுவளர்ச்சியடைந்த புழுக்களையும் உபயோகிகப்படுத்தக்கூடாது.

இந்த வைரஸைப் பூச்சி மருந்துடன் கலந்தும் தெளிக்கலாம். அல்லது உணவுப் பொருட்களுடன் கலந்து வயலில் ஆங்காங்கே போட்டு வைக்கலாம். புரோடீனியாப் புழுக்களைக் கட்டுப்படுத்தக் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறையைக் கடைபிடிக்கலாம்.

1. இரவில் விளக்குப்பொறி வைத்துத் தாய்ப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். மேலும் இதனால் காட்டில் பூச்சி விழுந்துள்ளதா என அறிந்து கொள்ளலாம்.

2. முட்டைகளையும் ,சிறு புழுக்களையும் சேகரித்து அழிக்கவேண்டும்.

3. தென்படும் பெரிய புழுக்களைக் கையால்பொறுக்கி அழிக்க வேண்டும்.

4. வைரஸ் அல்லது பூச்சி மருந்துகளைத்(டூர்ஸ்பான் 800 மில்லி) தகுந்த சமயத்தில் தெளித்துப் புழுக்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.

5. விஷம் கலந்த உணவுப் பொருட்களைக் காட்டில் வைத்து வளர்ந்த புழுக்களை அழிக்கலாம்.

6. பருத்திக் காட்டில் ஆமணக்குச் செடியைச் சுற்றி பயிர் செய்வதால் இப் புழுக்கள் ஆகமணக்குச் செடியினால் கவரப்படும்.

---

பாரதியார் புதுவையில் ஒரு பெரிய வீட்டில் குடியிருந்தார். ''வீட்டில் இல்லாது வெயிலில் நீண்ட நேரம் அலைகிறீர்களே?'' என்று வ.வே.சு. ஐயர் ஒருநாள் கேட்டதற்கு, ''வீட்டில் எறும்புக்கடி, மூட்டைப் பூச்சிக்கடி, ஈக்கடி'' என்று சொல்லிக் கொண்டே போனார் பாரதியார்.

''கடன்காரர் கடியும் உண்டோ?'' என்று கேட்டார் ஐயர்.

பாரதியார் வாய்விட்டுச் சிரித்து, ''உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே?'' என்று பாடினார்.

தகவல்: கலைவை பா. வரதன்
ஆதாரம்: வாழ்க்கை நிகழ்ச்சிகள்



# வாளி வழங்கு விழா

**1982**-சென்னை மாநகரின் வரலாற்றில் ஒரு பொற்காலமாக அமைவதற்கான அறிகுறிகள் தென்படும் ஆண்டாக மலர்ந்துள்ளது. சென்னை மாநகராட்சியின் ஆண்டு முதல் நிகழ்ச்சியே தூய்மையின் கால்கோள் விழாவாக அமைந்திருப்பதே இதற்குச் சான்று. 10.1.82 அன்று கோட்டூர்புரம் சென்னையின் மற்ற பகுதிகளுக்கு வழிகாட்டும் பகுதியாக மாறியதை மாநகரமே பாராட்டியது. அங்கு வாழும் பெருங்குடி மக்களுக்கு பிளாஸ்டிக் வாளி வழங்கும் விழா சிறப்பான முறையில் நடைபெற்றது. 355க்கும் மேற்பட்ட இல்லத்தரசிகள் பிளாஸ்டிக் வாளிகளை மலர்ந்த முகங்களுடன் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்களிடம் பெற்றுச் சென்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கோட்டூர்புரத்தில் குடியிருப்போர் தாங்களாக முன்வந்து குடியிருப்போர் சங்கம் வாயிலாக வாங்கிய வாளிகளே அவை. வீட்டில் சேரும் குப்பைகளை வீதிக்குக் கொண்டு வராமல் வீட்டிற்குள்ளேயே பிளாஸ்டிக் வாளிகளில் சேகரித்து வீதியில் மாநகராட்சி வண்டி மணியோசை எழுப்பி வரும் போது பிளாஸ்டிக் வாளியில் சேகரித்த குப்பைகளை நேரடியாக வ்ண்டியிலே கொட்டுவதே இத்திட்டத்தின் சிறப்பாகும். இனி, 'வ்ண்டி வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்ற புது மொழியும் எழலாம்.

இவ்விழாவிற்குத் தலைமை ஏற்ற மாநகராட்சி சிறப்பு ஆதிகாரி திரு து. முருகராசு, இ.ஆ.ப அவர்கள் கோட்டூர்புரம் பெருங்குடி மக்களை மனமாரப் பாராட்டினார். 'கோட்டூர்புரம் மற்ற பகுதிகளுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது' என்றும் சிறந்த குடிகளாக முயல்பவர்களுக்குத் தெய்வமே உதவி செய்ய முன் வரும் என்ற கருத்தமைந்த ''குடிசெய்வலென்னும் ஒருவற்குத் தெய்வம்—மடிதற்றுத் தான்முந்துறும்'' என்ற குறட்பாவையும் நினைவுபடுத்தினார். எனவே மாநகராட்சி இன்று உதவ முன் வந்துள்ளது என்று குறிப்பிட்டார். வாழ்த்துரை வழங்கிய சட்ட மேலவை உறுப்பினர் திரு ஜேப்பியார் பிற பகுதியில் இருப்போர் குறிப்பாகக் குடிசைப் பகுதியில் வாழும் பெருமக்கள் கோட்டூர்புரத்திற்கு வந்து இங்கு திகழும் தூய்மையை நேரில் கண்டறிந்து தங்கள் பகுதியையும் அவ்வாறே வைத்துக் கொள்ளப் பயிற்சி பெற்றுச் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பிளாஸ்டிக் வாளிகளை வழங்கிப் பேசிய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கோட்டூர்புரம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்போர் சங்கத்தின் இச்சீரிய செயலையும் ஒத்துழைக்க முன் வந்த பேட்டைவாழ் மக்களையும் பாராட்டினார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கோட்டூர்புரம் மடியும் மிடியும் அற்ற மக்கள் வாழும் பகுதியோடு மட்டுமின்றிச் சிறந்த அறிஞர்கள் வாழும் பகுதியாகவும் இருப்பதைச் சுட்டிக் காட்டினார். மேலும் கோட்டூர்புரத்தையும் ஆயிரம் விளக்குப் பகுதியையும் இணைக்கத் திட்டமிட்டுள்ள அடையாற்றுப் பாலம் நான்கு வழிதிட்டங்கள் கொண்ட பாலமாக அமைக்கப்படவிருப்பதைக் கூடியிருப்போர் கரவொலி எழுப்பக் கூறினார். மேலும் மாநகராட்சி, நகராட்சி தேர்தல்களிலும் மகளிர்க்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தனித் தொகுதிகள் ஒதுக்கப்படும் என்றார். சென்னை மாநகராட்சி தன் வருவாயை 24கோடியிலிருந்து 50 கோடியாக உயர்த்திக் கொண்டால், சென்னை மாநகராட்சி மிகச் சிறப்பான நகராக உருமாறும் என்றும் குறிப்பிட்டார். இவ்விழாவில் மெரினா கடற்கரைப் பகுதி ''தூய்மைப் பகுதியாக'' அறிவிப்பதற்குரிய தேதியையும் (8.1.,82 அமைச்சர் அறிவித்தார். இவ்விழாவில் சட்ட மன்ற. உறுப்பினர் திரு புருஷோத்தமன், காவல் துறைத் தலைவர் (ஐ.ஜி) திரு இராதாகிருஷ்ணன் முதலியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**நி. வே. பாலு,**
**மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாநகராட்சி.**



வான்புகழ் படைத்த வள்ளுவரின் 2013-வது பிறந்த நாள் விழா 15.1.'82 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

காலை 9 மணிக்கு இசைக் கல்லூரி மாணவர்களின் நாயன இசையுடன் விழா தொடக்கமாகியது. 11 மணியளவில் திருக்குறள் நூல்கள் கொண்ட நூற்காட்சியை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தமிழ்வளர்ச்சி இயக்குநர் டாக்டர் மா. நன்னன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''ஒரு காலத்தில் மேடையில் பேசுவது என்றால் பலருக்கு அச்சமாக இருந்தது. இன்று அப்படி இல்லை. பேசுவதில் மிகப் பலர் ஆர்வம் காட்டுகிறார்கள். கேட்பதிலும் அதுபோன்ற ஆர்வம் நிலவுகிறது. பல்வேறு குறட்பாக்களை நாம் மேற்கோள்களாகப் பயன்படுத்துகிறோம். ஆனால் நடைமுறையில் நாம் பின்பற்றுவதில்லை. ஆகவே பின்பற்ற வேண்டும் என்று திருவள்ளுவர் திருநாளான இன்று சூளுரை மேற்கொள்வோம்.''

விழாவைத் தொடங்கி வைத்து உரையாற்றிய மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் குறிப்பிட்டார்:

''தமிழ் மொழி எவ்வளவு தொன்மை வாய்ந்ததோ -சிறப்பு வாய்ந்ததோ அத்தகைய பெருமை மிகுந்த வழிகாட்டிகளையும் தமிழ்ச் சமுதாயம் பெற்றிருக்கிறது. திருவள்ளுவர் திருநாளுக்கு விடுமுறை விட்டால் மட்டும் போதாது. அன்று திருவள்ளுவர் சிறப்புக் குறித்து இந்த நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்ல - உணர்த்த வேண்டும் என்ற முறையிலே இந்த விழா கொண்டாடப்படுகிறது.

''வள்ளுவர் வேறு நாட்டில் பிறந்து, அந்த நாட்டு மொழியில் தமது குறளைப் படைத்திருப்பாரேயானால், மாபெரும் பெருமை அவருக்குக் கிடைத்திருக்கும். ஆனால், தமிழ்நாட்டில் பிறந்து, உலகுக்குத் தரும் வகையில் ஒரு நூலைப் படைத்ததனால், இன்றும் அவர் பெருமையை எடுத்துச் சொல்ல வேண்டியதிருக்கிறது.

''ஒரு மொழிக்கு மாத்திரமோ ஒரு இனத்திற்கு மாத்திரமோ - ஒரு பிரிவுக்கு மாத்திரமோ என்று இல்லாமல் உலகம் முழுதுக்கும் பயன்படும்படி ஒரு நூலை அவர் உருவாக்கினார். 2000 ஆண்டுகட்கு முன்னே உருவாக்கினார். சிறந்த தத்துவங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லிய கருத்துக்கு மாறான கருத்துக்களை யாரும் இன்று வரை எடுத்துச் சொல்லவில்லை என்பது அவருக்குப் பெருமை தரும் செய்தியாகும்.

''இந்தச் சமுதாயத்திற்கு யாரையாவது, வழி காட்டி யென்று அடையாளம் காட்ட வேண்டும். அதற்கு வள்ளுவர் தான் பொருத்தமானவராகத் திகழ்கிறார். அவரது மறைக்கு —எதிர் மறையாக வேறொன்று இருக்க முடியாது என்ற வகையில்தான் அவரது திருக்குறள், தமிழ்மறை என்றே வழங்கப் பெறுகிறது. தமிழ் மக்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்து அவர்களை வழிநடத்துவதற்குரிய ஆசானாக வள்ளுவரைத் தவிர வேறொருவர் கிடையாது. அவரது திருக்குறள் நூலை நாம் பரப்பி ஆக வேண்டும்.

''வள்ளுவரைத் தவிர வேறு யாரும் வழிகாட்டியாக இருக்க முடியாது. வேறு யாரும் அந்த இடத்தில் நிற்கவும் இயலாது; நிலைக்கவும் முடியாது.

''திருவள்ளுவர் என்ற ஒளி விளக்கு நம் கையில் இருக்கும் போது இருள் தானாக ஓடிவிடும். தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒளி விளக்கு திருக்குறள். இந்த உண்மையை மக்களின் மத்தியில் நாம் பரப்பி ஆக வேண்டும்.

இவ்வளவு உயர்வுக்குரிய திருக்குறள் இந்திய நாட்டின் தேசிய நூலாக இருக்க வேண்டும் என நாம் விரும்புகிறோம். திருக்



# திருவள்ளுவர் திருநாள்

குறளை மட்டும் எப்படித் தேர்ந்தெடுக்க முடியும், எத்தனையோ நூல்கள் நாட்டில் உள்ளன என்று அவர்கள் சொல்லக் கூடும். திருக்குறளுக்கு இணையான நூலை அவர்கள் காட்டட்டும், நாம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.''

திருவள்ளுவர் கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்ற தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''தமிழ்மொழியினர் சிந்திக்கும் அளவிற்குப் பிற மொழியினர் சி



ந்திக்கவில்லை என்பதில் இருவிதமான கருத்துக்களுக்கு இடமே இல்லை. திருக்குறளின் சிந்தனைக்கு இணையான வேறு ஒரு நூல்கிடையாது.. நாட்டு நூலாக ஏற்க வேண்டும் என்று பல வருடங்களாகத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். நடுவணரசு ஏற்றுக் கொள்ளாதிருக்கிறது.

''திருக்குறளை நாட்டு நூல் என அறிவிப்பதனால் அதற்குப் புதிதாகப் பெருமை வந்துவிடப் போவதில்லை. மைய அரசு வலியுறுத்தி வரும் ஒருமைப் பாட்டைத் திருக்குறள் வலியுறுத்துகிறது. அதனை நாட்டு நூல் என அறிவிப்பதால் இந்திய நாட்டுக்குத்தான் பெருமை ஏற்படப் போகிறது.

''ஒரு மதத்தையோ-ஒரு இனத்தையோ தழுவாமல் பொதுவாக அமைந்துள்ள நூல் குறள் அன்றி வேறெதுவும் இந்திய மொழிகளில் இல்லை. இந்திய ஒருமைப் பாட்டைக் கட்டிக் காக்க வேண்டும் என விரும்பும் மைய அரசுக்குத் திருவள்ளுவரின் நூலை நாட்டு நூலாக்குவதன்றி வேறு வழியில்லை.

''திருக்குறளை நமது அரசுகள் தொடர்ந்து ஆதரித்து வருகின்றன. என்றாலும் எனக்குற்ற வருத்தம், ஒரு அரசு கூட அதனைச் செயற்பாட்டு நூலாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுதான். நம்முடைய அரசாங்கத்தார் சட்டத்தின் வரைவுகளைச் செய்யும்போது, திருவள்ளுவரின் திருக்குறளுக்கு அவை ஒத்து வருவனவா என்று பார்த்தறிந்து இச்சட்டம் திருக்குறள் காட்டியுள்ள இந்த நெறிப்படி செய்யப்படுகிறது என அறிவிப்பது -குறளை விரும்பும் இந்த அரசு செய்ய வேண்டிய முதற் பணியாகும்.

''இரண்டாவது பணி-குறளைத் தமிழ் இலக்கிய நூல் என்ற அளவுக்கு மிஞ்சிப் புகழ்ந்து, அது வாழ்க்கை நூல் என்ற உண்மை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லப்படாது போய்விட்டது. புலவர்களின் மத்தியில் குறள் உலா வருகிறது - விளையாடுகிறது. அதை மக்களிடம் போகச் செய்ய

தமிழ்ப்பித்தன்





டாக்டர் ஆறு அழகப்பன்

வேண்டும். கொஞ்ச நாட்களுக்கு புலவர்கள் திருக்குறளை மறந்தால் கூடப் பரவாயில்லை.

''உரையாசிரியர்கள் தத்தம் மனப் போக்கின்படி திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளனர். தோன்றியுள்ள உரை சரியானது தானா என்று ஆய்வுசெய்து ஒப்புதல் அளிக்க மன்றம் எதுவும் இல்லை. இதுவரை 14 உரைகள் வந்து விட்டன. எந்த உரையாலும் திருவள்ளுவரைப் புரிந்து கொள்ள முடியவில்லை. காரணம், உரையாசிரியர்கள் எல்லாரும், தங்களது புலமையைத் தெரிவிக்க முயற்சித்திருக்கிறார்கள்.

''வள்ளுவர் இன்ன சமயத்தவர் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஒரு சமயத்தையும் சேர்ந்தவரல்லர் என்று சிலர் நிறுவுகிறார்கள். ஒவ்வொருவரும் தத்தமது சமயத்தைச் சேர்ந்தவர் வள்ளுவர் என்று கூறத் தலைப்படுகின்றனர். இப்படிச் சொல்வதை, அரசு சட்டப்பூர்வமாகத் தடுப்பதுகூட நல்லது.

''தமிழகம் என்றும் திருவள்ளுவரை முன்னோடியாக எடுத்துக் கொள்ள வேண்டும். திருக்குறளை மையமாக வைத்துப் பேசும் போக்கு வேண்டும். திருக்குறள் நெறிதான் நமது நெறி என்ற நடுநிலைப் பண்பு வேண்டும். உலகப் புகழ் பெற்ற மறை -பொது மறை திருக்குறள்; உலகத்திற்கு - தமிழகத்தால் வழங்கப்பட்ட நூல் என்ற பெருமை நமக்கு உண்டு. எனவே பேராசிரியர்கள் எல்லாம் தக்க வகையிலே வழி காட்ட வேண்டும்.'

'திருக்குறள் நோக்கில் ஒழுக்கம்' என்னும் தலைப்பில் உரையாற்றிய டாக்டர் தமிழண்ணல் குறிப்பிட்டார்:

''ஒழுகுதல் என்றால் நடத்தல் என்று பொருள்படுகிறது. நடத்தை எனவும் கூறலாம். ஒழுக்கமுடைமை, பயனில சொல்லாமை, புறங் கூறாமை, என 133 அதிகாரங்களிலும் ஒவ்வொரு வகையான ஒழுக்கம் சொல்லப்படுகிறது. அதன் வழி நடத்தல் என்னும் பொருள் பட, ஒழுகுதலைக் கொண்ட நூலாக விளங்குகிறது திருக்குறள்.

''திருவள்ளுவரின் பார்வை புதுமைப் பார்வை; முதல் அதிகாரத்திலேயே அவர் புரட்சிக் கருத்தை விதைத்து விடுகிறார். அந்த அதிகாரத்தைப் படித்துச் சுவைத்ததனால் தான் அறிஞர் அண்ணா அவர்கள் 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்னும் கருத்தை வலியுறுத்தினார்கள்.

''மானிடத்தில் ஒழுக்கம் என்பதுதான் மிக முக்கியம் என்பதை வள்ளுவரின் பாதை காட்டுகிறது. மனிதனில் உயர்வுதாழ்வு இல்லை என்பதைக் குறள் உறுதியுடன் தெரிவிக்கிறது.

''உண்ட உணவு குருதியோடு சேர்ந்து, குருதியாக மாறிவிடுவதுபோல குறளைப் படிக்கப் படிக்க அதன் கருத்து நம்மோடு சேர்ந்து அதே பண்பாகிவிட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்''.

'திருக்குறள் நோக்கில் மகளிர்' என்னும் தலைப்பில் உரையாற்றிய டாக்டர் ஆறு. அழகப்பன் தெரிவித்தார்:

''அறத்துப் பாலில் வாழ்க்கைத் துணை நலம்; பிறனில் விழையாமை என்னும் இரு அதிகாரங்களிலும், பொருட்பாலில் வரைவின் மகளிர், பெண்வழிச் சேறல் என்னும் இரு அதிகாரங்களிலும் மகளிரைக் குறிப்பிட்ட திருவள்ளுவர் காமத்துப் பாலில் உள்ள 25 அதிகாரங்களிலும் அவர்களைக் குறிப்பிடுகிறார்.

மரபு என்றும், பண்பு என்றும் எவற்றை எல்லாம் சங்க நூல்கள் கருதி வந்தனவோ, அவற்றையெல்லாம் வள்ளுவர் சாடுகிறார். சங்க காலத்தில் புலால் உண்ணல் மரபு-அதனை எதிர்த்துப் புலால் உண்ணாமை என்று ஒரு அதிகாரத்தை உருவாக்கினார்.

''சங்கப் புலவர்கள், தலைவன் பரத்தை வீட்டுக்குச் செல்லும் பண்பை மருதத்திணை என்னும் திணையாக வகுத்துச் செய்யுள் பாடினர். வள்ளுவர், தேசிய நூலாக மிளிர உள்ள தமது நூலிற்கு அந்தப் போக்கு சரிவராது என நினைத்து மருதத் திணையையே நீக்கிவிட்டு, மருத நிலப் பெண்களுக்கு விடுதலை கொடுத்தார். பரத்தையற் பிரிவு குறித்து ஒரு குறளில்கூட அவர் சொல்லவில்லை என்றால் எத்தகைய மகளிர் சமுதாயத்தை அவர் கண்டிருக்கிறார் என்பது புலனாகும்.

'அடுத்து, திருக்குறள் நோக்கில் சமுதாயம்' என்னும் தலைப்பில் உரையாற்றிய டாக்டர் தெ. ஞானசுந்தரம் குறிப்பிட்டார்:

''வள்ளுவர் பார்த்த சமுதாயம் ஒன்று; பார்க்க விரும்பிய சமுதாயம் ஒன்று; இரண்டும் அப்படியே இன்றும் இருந்து வருகின்றன. அவரது காலத்தில் நான்கு வகை சாதி அரசின் அங்கீகாரம் பெற்றிருந்தது.

''வட நூலார், தெய்வச்சிறப்புப் பொருந்திய புனிதப் பொருள்கள் என 8 வகைப் பொருள்களைக் குறிப்பிடுகின்றனர். அதில் அரசனும் குறிக்கப் பெறுகிறான்.

''வள்ளுவர், இங்கே வேறுபடுகிறார். நீதி நிர்வாகத்துக்கும் நாட்டுப் பாதுகாப்புக்கும் தான் மன்னன் உரியவன் என்பதை வலியுறுத்தி,

முறைசெய்து காப்பாற்றும்
மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்-

என்கிறார்.

அரசன் தெய்வக் கூறு பெற்றவன் என்று அவர் சொல்லவில்லை.

''தனி மனிதனால் தான் சமுதாயம் உருவாக்கப்படுகிறது. பல மரங்கள் சேர்ந்து தோப்பு உருவாவது போல!

''அன்புநிலை - அருள்நிலை கொண்டு - எல்லாருக்கும் நாம் பயன்படவேண்டும்; ஒப்புரவு வேண்டும் என்பதை வள்ளுவர் சமுதாயத்திற்கு வலியுறுத்தியிருக்கிறார்.

''சமுதாயம் உழைத்துப்பயன் பெற வேண்டும்; உழைக்காது ஏமாற்றித் திரியக் கூடாது என்பதையும் எடுத்துரைக்கிறார். உழைக்கும் சமுதாயம்தான் வெற்றிபெறும் என்பதை ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் என்ற குறளில் வலியுறுத்தியுள்ளார்''.

பிற்பகல் 4 மணியளவில் பேராசிரியர் அ.கி. பரந்தாமனார் அவர்கள் தலைமையில் 'உரைகல்'



டாக்டர் தமிழண்ணல்

என்னும் தலைப்பில், மொழி நடை என்னும் பொருள் குறித்துக் கலந்துரையாடல் நடைபெற்றது.

திரு நாரண. துரைக் கண்ணன் (எழுத்தாளர்), திரு அகிலன் (வானொலி), திரு வெ. நல்ல தம்பி (தொலைக்காட்சி), திரு நக்கீரன் (பாடநூல் நிறுவனம்) ஆகியோர் பங்கு பெற்றுத் தத்தம் கருத்தினைக் கூறினர். வானொலி, தொலைக் காட்சி ஆகியவற்றில் இடம் பெற்றிருக்கும் கலந்துரையாடல் பகுதி மேடைக்குப்புதியது. என்றாலும் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்றனர்.

தமிழ்மொழியில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுவது குறித்துக் கலந்துரை நடைபெற்றது. ஒவ்வொருவரும் தத்தமது கருத்தைச் சான்றுகள் காட்டி நிறுவினர்.

''இயன்றவரை மொழி நடையில் தமிழையே பயன்படுத்த வேண்டும்; தமிழாக்க முடியாத (Lorry, Bus, Van) போன்ற சொற்களை அப்படியே லாரி, பஸ், வேன் என்று பயன்படுத்துதல் நல்லது என்னும் கருத்தை நால்வரும் ஒப்புக் கொண்டனர். அக்கருத்தை அவையினரும் ஏற்றுக் கொண்டனர்.

பின்னர், நிறைவு விழா மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

கல்வித்துறைச் செயலாளர் திரு சி. இராமதாஸ் வரவேற்புரை ஆற்றினார். பின்னர், மாண்புமிகு கல்வியமைச்சர் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்:

''தமிழ்வளர்ச்சித் துறை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஈடுபட்டு வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ் வளர்ச்சியில் முனைப்புடனும் ஆர்வத்துடனும்


டாக்டர் தெ. ஞானசுந்தரம்

ஈடுபட்டு வருவதன் காரணமாக இத்துறை, தமிழ் வளர்ச்சியில் மிகுந்த தொண்டாற்றிவருகிறது.

''இந்த விழாவில் நல்ல நூல்களை எழுதிய ஆசிரியர்கள் பெருமைப் படுத்தப்படுகிடறார்கள்— பாராட்டப்படுகிறார்கள் - நூல்களை வெளியிட்ட பதிப்பகத்தார்களும் பாராட்டப்பெறுகிறார்கள்.

''நூல் எழுதுவதில் லாப நோக்குள்ளது. நூலை வெளியிடுவதில் அதிக லாப நோக்கு இருக்கலாம். ஆனால் மனம் திறந்து பாராட்டுவது என்பது மிக மிகக் குறைவு. நூலாசிரியர்களை உற்சாகப் படுத்த - அவர்களுக்கு ஊக்கம் ஊட்ட - ஆதரவு தர இவ்விழா பயன்படுகிறது என்பது மட்டுமல்ல - இன்று பரிசு பெறாத எழுத்தாளர்கள் வரும் ஆண்டில் பரிசு பெறுவதற்காகவும் அமைகிறது.

''தேசிய உணர்வை தமிழ் மக்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற- ஜாதிமத பேதம் கூடாது என்பதை எடுத்துக் கூற - திருவள்ளுவர் திருநாள் பயன்படும்.

''ஜாதி உணர்வுகளின் புகலிடமாக கல்லூரிகள் உள்ளன. அந்த உணர்வை ஒழிக்காவிட்டால் மாணவர்கள் சரிவர வெளிவர மாட்டார்கள். அப்படி வருகின்ற சமுதாயம் நாட்டிற்கு நல்ல வகையில் பயன்பட முடியாது. இந்த ஜாதி வேற்றுமையை ஒழிப்பதில் நாம் முன்னணியில் இருக்க வேண்டும். இதனைத் தமிழர்கள் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை இந்தத் திருநாளில்விடுக்கிறேன்''.

பின்னர், மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர்இரா நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்;

''புலவர்களுக்கெல்லாம் மிகச் சிறந்த புலவரான திருவள்ளுவர் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். பலபேர் பிறந்ததும் தெரிவதில்லை; இறந்ததும் தெரிவதில்லை. சிலபேர் சில காலத்திற்கு மட்டும்தான் தெரிவார்கள்; சிலபேர் சிலருக்காக மட்டும்தான் வாழ்ந்திருக்கிறார்கள்.

''வள்ளுவரை உலகத்துக்குத் தந்த வான்புகழ் கொண்ட தமிழ் நாடு என்று பாரதியார் சொன்னார். தமிழகம் பாரதியைத் தந்தது. அதனால் வான்புகழைப் பெற்றது.


டாக்டர் மா. நன்னன்

''வள்ளுவருக்கு ஈடாகயாருமே அகில உலகத்திலும் இல்லை என ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிட்டிருக்கிறார். அவர் ஒரு தத்துவ ஆசிரியர் மட்டுமல்ல - இலக்கிய வித்தகர் மட்டுமல்ல - மருத்துவரும் ஆவார்.

''அவர் கூறுகிறார் ''எனது வாழ்நாளின் இறுதிக் காலத்தில் தான் நான் திருக்குறளைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. துவக்கத்தில் படித்திருந்தால் எவ்வளவோ நன்மைகளைப் பெற்றிருப்பேன்'' என்று.

''வாழ்க்கையைச் செம்மைப் படுத்த - மனிதனை ஒழுங்கு படுத்த நல்ல கருத்துக்களை வள்ளுவர் உறுதியோடு சொல்லியிருக்கிறார். ஒரு மனிதன் தான் செய்ய வேண்டிய கடமை என்ன, பிறருக்கு ஆற்ற வேண்டிய கடமை என்ன என்பதை வள்ளுவர் சொல்லியிருக்கிறார். வேறு எந்த ஒரு நூலிலும் இத்தனை தத்துவங்கள் இடம் பெறவில்லை.

''வள்ளுவர் கற்பனை உவமையைக் கூறவில்லை. வாழ்க்கையில் நடைமுறையில் உள்ளவற்றைத் தான் உவமையாகப் பயன்படுத்துகிறார். வாழ்க்கையை நெறிப் படுத்த உதவும் ஒரு கருவி வள்ளுவரின் திருக்குறள் ஆகும்''

விழா நிறைவுரையை மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஆற்றினார்கள். தமது உரையில் அவர் குறிப்பிட்டார்:

''காலையில் இங்கு பேசிய சில பெருமக்களுக்கு இப்போது நான் பதில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். குன்றக்குடி அடிகளார் அவர்கள் நல்ல கருத்தைச் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி இருக்கிறார்கள். அதை நான் மதிக்கிறேன்; போற்றுகிறேன்; வணங்குகிறேன்.

குறளை தேசிய நூலாக்க வேண்டும் என்று தமிழகம் கோரிக்கை விடுத்தபோது, ஏற்க முடியாது; எத்தனையோ நூல்கள் இருக்கின்றன. ஒட்டு மொத்த

மாக அவை அனைத்தையும் தள்ளிவிட்டு குறளை மட்டும் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் என்று இந்திய அரசு தெரிவித்ததாக அடிகளார் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

''என் முயற்சியை நான் இததுடன் நிறுத்திக் கொள்ள மாட்டேன். ஆங்கிலத்தில் இன்னொரு கடிதத்துடன் குறளின் ஆங்கில மொழிபெயர்ப்புப் புத்தகம் ஒன்றையும் இணைத்து அனுப்ப இருக்கிறேன் என்பதை இங்கே சொல்லிக் கொள்கிறேன். 'தட்டுங்கள் திறக்கப்படும்' என்று சொல்வார்களே அதற்கேற்ப என்னால் முடிந்தவரை தட்டிப் பார்க்க வேண்டும் என்று தட்டுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன்.

''இன்னொன்றையும் அடிகளார் சொல்லியிருக்கிறார்கள். திருக்குறளில் உள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சட்டங்கள் வகுத்து, அமலாக்க வேண்டும். அது அரசியல் கொள்கையாக இருக்க வேண்டும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். உளமார - மனமார வரவேற்கிறேன்.

''எங்களுடைய கடமைகளை முழுமையாகச் செய்வோம். எந்த அளவு சட்டங்களுக்கு உட்பட்டுச் செயலாக்க முடியுமோ அந்த அளவு செய்ய விழைகிறோம் என்பதை, திருவள்ளுவர் திருநாளில் முதல்வர் என்ற முறையில் அடிகளாரின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறளுக்கு யார் யாரோ உரைகள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கட்டுப்படுத்த மையம் ஏற்பட வேண்டும். தமிழ்ப் பெரியார்கள் அம்மையத்தில் இடம் பெற வேண்டும். அவர்கள்தான் குறளுக்கு உரை எழுத வேண்டும். வேறு யாரும் எழுதுவதைச் சட்டப்படி தடை செய்ய வேண்டும் என்று அடிகளார் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதை அனுபவ வாயிலாக உணர்ந்து, ஏற்றுக் கொள்கிறேன்.

ஒரு சகோதரியிடம் ஒரு குறளைப் பற்றி நான் கூறினேன். அவர்கள் தொலை பேசி வாயிலாக அந்தக் குறளின் எண் என்னவென்று கேட்டார்கள். நான் சொன்னேன்! பத்து நிமிடம் கழித்து, என்னைக் கோபித்துத் தொலைபேசியில் பேசினார்கள். காரணம் தவறான பொருளை அவர்கள் கொண்டுவிட்டார்கள்.

''உடனே, நான் கன்னைய நாயுடுவின் பதிப்பைப் படித்துச் சொல்கிறேன் என்றேன். அவர்கள் வேறொருவரின் பதிப்பைப் படித்திருக்கிறார்கள். அதிலே வேறு வகையில் எண் இடப்பட்டிருக்கிறது. அதற்கு நான் எப்படிப் பொறுப்பாளியாக முடியும் என்று கூறினேன்.

'தேசிய நூலாக ஆகப் போகின்றது எனக் கூறப்படும் நூலில் அப்படி ஒரு தவறு வந்துவிடக் கூடாது என்பதில் அடிகளார் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள் என்பதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆகவே சட்டம் இடம் கொடுத்தால் செய்யத் தயாராக இருக்கிறோம். ஆக்கப்பூர்வமாகப் பேசியிருக்கும் அடிகளாருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற முயற்சிகளை எங்கள் கடமையாகக் கருதிச் செய்து வருவோம். அண்ணா அவர்களின் கொள்கைப் படி!

''5-வது உலகத் தமிழ் மாநாட்டுக்குச் சில எதிர்ப்பு இருந்தது என்பது எல்லாருக்கும் தெரியும். என்றாலும் தமிழ்ப் பெரியார் சிலர் மனம் திறந்து பாராட்டினார்கள். அது அவர்களை வாழ வைத்த தமிழுக்குத் தந்த மா பெரும் பாராட்டு என நான் கருதுகிறேன்.

''அண்மையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் துவக்கினோம். இதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். நல்லதை யார் செய்தாலும் அதை வரவேற்க வேண்டும். நாட்டு நன்மைக்காக - மக்களுக்குப் பயன்படும் பணிகளை யார் செய்தாலும் வரவேற்க வேண்டும்.

''தமிழருக்கு- தமிழுக்கு - தமிழ் நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் தொண்டினைச் செய்யும்போது தயவுசெய்து ஒத்துழைப்புத் தாருங்கள். உங்கள் ஆத்திரத்தை வேறுவகையில் காண்பியுங்கள்; உங்கள் கோபத்தை வேறுவகையில் செலுத்துங்கள். நாங்கள் செய்கிற பணியில் குறையிருந்தால் அப்படிச் செய்யக் கூடாது, இப்படிச் செய்யுங்கள் என்று யோசனை கூறுங்கள். உலகில் எல்லாவற்றையும் முழுமையாகத் தெரிந்து கொண்டவர்கள் கிடையாது. இன்னும் ஆராய்ச்சி நிலையில்தான் பல பிரச்சினைகள் உள்ளன. முடிவைக் கண்டுபிடித்தவர் யாரும் இல்லை. பிளவுகளால் தமிழ் அழிந்துவிடக் கூடாது - தமிழினம் அழிந்துவிடக் கூடாது.

''பெண்களுக்குத் தனிப் பல்கலைக் கழகம் வேண்டும் என்று பாரதி விழாவில் சொன்னேன். இதற்கு எத்தனை எதிர்ப்பு! ஆணும் பெண்ணும் சேர்ந்து படிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுவரும் போது, பெண்களுக்கென்று தனிப் பல்கலைக் கழகம் எதற்காக என்று கேட்கிறார்களே நான் என்ன செய்யட்டும்?

''தமிழ் கற்றுத் தேர்ந்து நிறைய எழுதி, தமக்கென எதுவும் சேர்த்துக் கொள்ளாது; தமிழை, தமிழருக்காக ஆராய்ந்து — தமது சொந்த மூளையைத் தவிர வேறு செல்வம் இல்லாதோர் எத்தனையோ பேர் உள்ளனர். இவர்களை எல்லாம் ஆத



இலக்கியங்கள் மனிதனது அறிவை வளர்க்கின்றன. மனிதனுக்குத் தெளிவை ஏற்படுத்துகின்றன. நன்மை தீமைகளை எடுத்துகாட்டுகின்றன. மனிதனது சிந்தனையைக் கிளறிவிடுகின்றன.



கடவுள் என்ற சொல்லுக்கு எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஒரு மெய்ப்பொருள் அல்லது மெய்யுணர்வு என்பதே பொருளாகும். இத்தகைய சிறந்த கருத்தமைந்த கடவுள் என்ற சொல், தமிழழைத் தவிர வேறெம்மொழியிலும் அமையவில்லை.

மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்குப் பெருகிவரும் செல்வத்தைச் சிலரிடமே குவிந்துவிடாமல் பார்த்துக் கொள்வதோடு பலருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும்.

வைதீகம் என்னும் நோய்க்கு டாக்டர்கள் மருந்து கொடுத்துக் குணப்படுத்த முடியாது. பகுத்தறிவு என்னும் ஒரே மருந்தால் வாலிபப் பருவத்திலுள்ள மாணவர்களால் வைதீகம் என்னும் நோயைப் போக்க முடியுமே தவிர வேறு எந்த மருந்தாலும் போக்க முடியாது.

ரித்துத் தீர வேண்டுமென்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இத்தகையவர்களின் கண்ணீர் துடைக்கப்படாமல் தமிழகம் வளர்ந்து விட்டது என்று சொல்வது தவறு என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இவர்களுக்கு வழங்கப்பட்ட 75 ரூபாய்ஒய்வுஊதியத்தை250 ஆக்கியபோது பாராட்ட வேண்டும். ஏன் கொடுக்கிறார்கள் என்று கேட்காமலாவது இருக்கக் கூடாதா?

''பரிசு பெறும் நூல்களைபள்ளிகளில், நூலகங்களில் வைக்க வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டது. அந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுச் செயல்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளும்.

''தமிழை ஆட்சிமொழியாக்கும் பணியில் தி.மு.க. அரசு முனைப்பாக இருந்தது. என்றாலும் இடையில் அதை மறந்து விட்டது. வழக்குகள் அனைத்தும் தமிழில் நிகழ வேண்டும் என்று அண்ணா அவர்கள் சொல்லிய கருத்தை நிறைவேற்ற முடியவில்லை. அது அப்படியே நிற்கிறது. வருகிற பிப்ரவரி 1-ஆம் தேதி முதல்சிவில் கோர்ட்டுகளில் தமிழில் வழக்கு விசாரணை நடைபெறும்.

''குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும்போதும் படித்து முடித்த பிறகும் விளையாடுவதற்கு நேரமில்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு தமிழ்ப் பண்பாட்டுக்கு ஊறுநேராத வகையில்-தமிழ்ப் பண்பாட்டை எதிரொலிக்கக் கூடிய வகையில் அடிப்படை விளையாடல்களின் நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

''கராத்தே என்னும் விளையாட்டைப் பலர் கற்றுக்கொண்டு வருகின்றனர். இந்தவிளையாட்டு தமிழகத்தில் இல்லை என்று கருதுகிறார்கள்; அது தவறு. காலால் அடிப்பதைக் கையால் தடுக்கப் பயிற்சி செய்யும் தற்காப்பு முறை தமிழிலே - தமிழகத்திலேஇருந்தது. வன்முறைக்குத் துணை போகிறவர்களைத் தடுக்கவும், நாட்டின் பாதுகாப்புக்கும் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் உதவும் கராத்தே விளையாட்டைக் கற்றுக்கொள்வது அவசியம்: அதில் குழந்தைகள் தேர்ச்சி பெற நாம் அக்கறை காட்ட வேண்டும்.

''இங்கே பரிசு பெற்ற எழுத்தாளர்களுக்கு ஒரு தொகையை நாம் வழங்கியிருக்கிறோம். இது அவர்களுடைய தகுதிக்கு ஏற்றதல்ல. நம்மால் முடிந்ததை அவர்களுக்குக் காணிக்கை யாக்கியிருக்கிறோம். இவ்வளவுதானா எங்களுக்கு என்று அவர்கள் எண்ணாமல் மேலும் மேலும் முனைந்து எழுத வேண்டும். தமிழறிஞர்கள் வாழ்ந்தால்தான் எங்கள் பணியைத் தொடர முடியும். மேலும் மேலும் யோசனைகளைச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்''

நிறைவுரையை முடித்துவிட்டு, 1975ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டுவரை வெளிவந்த நூல்களில் பரிசுக்குரியவை என்று தேர்ந்தெடுக்கப் பெற்றவற்றின் ஆசிரியர்களுக்குப் பரிசுத்தொகையையும் சான்றிதழையும் தஞ்சாவூர்த் தட்டையும் மாண்புமிகு முதல்வர் அளித்தார். முதற்பரிசு ரூ. 2,000, இரண்டாம் பரிசு ரூ. 1000 என ஏறக்குறைய 76 பேர்களுக்குப் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. பதிப்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பின்னர், வயது முதிர்ந்த ஆசிரியர்களுக்கு ஒய்வுஊதியத் தொகையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

நன்றியுரை கூறிய தமிழ் வளர்ச்சி இயக்குநர் டாக்டர் மா. நன்னன் அவர்கள் தமிழக அரசு தமிழ் வளர்ச்சிப் பணிக்காக ஆற்றிவரும் தொண்டுகளை -சாதனைகளை எடுத்துரைத்தார்.

பின்னர் அரசு நர்த்தகி, கலைமாமணி செல்வி சுவர்ணமுகி அவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சிநடைபெற்றது.

திருவள்ளுவர் திருநாள் மக்கள் நெஞ்சத்தில் நிலைக்கும் திருவிழா நாளாகத் திகழ்ந்தது என்றால் அது உண்மையே தவிர, உயர்வு நவிற்சியல்ல.

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி
### தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்... அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

பதிவு எண். M. 8676

Licence No. TN/MS(C)/PP








